136 ), No. M-3660 1st OCTOBER 1937



VOL. 1 NO. 10

KING OF TONICS




அமிருதா [illegible]


# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரி[illegible]


8-OCT 1937



பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிரி ரா[illegible]

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] அக்டோபர் 1937 [இதழ் 10

PRINTED AT THE LODHRA PRESS, ROYAPETTAH, MADRAS.

159945

# கி ர ஹ ல க்ஷ் மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணு 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு $12\frac{1}{2}$ % கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிரிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறுத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோறுகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே.என். கேசரி, பிரசுரிப்பவர், 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.





போலிகளைக் கண்டு உஷார்!!!

**அமிர்தாஞ்சனம்**

கேவலம் "கிரஹலக்ஷ்மி"

சகல வலிகளையும் போக்கும்

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்,**

பம்பாய், மதறாஸ், கல்கத்தா.

டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வெல்லரி மார்ட்



**ஸின் தடிக் கல் செயின்கள்**

அசல் தங்கத்தைப்போல பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது. 2 வருஷம் உத்தரவாதம்

பலவித கலர்க் கல்களால் கட்டப்பட்டவை மிகவும் அழகாயிருக்கும்

| | | | |
|---|---|---|---|
| பெரிய சைஸ் செயின் பென்டன்ட்டுடன் | 1-க்கு | ரூ. | 9 0 0 |
| சிறிய சைஸ் ,, ,, | 1-க்கு | ரூ. | 7 0 0 |
| பெரிய சைஸ் பென்டன்ட் இல்லாமல் | 1-க்கு | ரூ. | 7 0 0 |
| சிறிய சைஸ் ,, ,, | 1-க்கு | ரூ. | 5 0 0 |
| வி. பி. செலவு | 1-க்கு | ரூ. | 0 8 0 |

இரண்டு அணு பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனம்.

**T.C. நாகலிங்கப்பா அண்டு கம்பெனி,**

தபால் பெட்டி நெ. 516

280, வால்டாக்ஸ் ரோட், பார்க்டவுன், மதராஸ்.

# பொருளடக்கம்


1. நவராத்திரி .... .... .... 657
2. நூதனபவன பிராரம்போற்சவம் .... .... 661
3. ஸ்திரீகள் பிரச்சினை — ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் .... 668
4. ரஜபுத்திர ரமணிகள் — ஸ்ரீமதி எஸ். கமலா .... .... 671
5. பூங்கோதை — 'மைதிலி' .... .... 673
6. பரதநாட்டியம் — ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள் .... .... 676
7. கம்பீரக்காதல் — திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... .... 678
8. நூர்ஜஹான் — திரு. ஸி. எஸ். ராமன் .... .... 682
9. தேவமாதல்லவா — ஸ்ரீமதி எம். ஸி. சிங்காரம்மாள் .... 686
10. முத்து — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... .... 691
11. ஹாலந்து — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 697
12. வாழைப்பழம் — டாக்டர் குமரன் .... .... 702
13. ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர் — "கண்ணன்" .... .... 705
14. மாதர் மறுமணம் — ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி .... 707
15. சரஸ்வதி — "சமுனி" .... .... 709
16. விடுகதை வினா — திரு. ஸி. எஸ். ஜகதீசசுந்தரம் .... .... 711
17. பிஸிபேளே ஹூளி அன்னம் — "ஜயம்" .... .... 713
18. மரப்பாச்சி மாமியார் — ஸ்ரீமதி அ. ரங்கம்மாள் .... .... 715
19. இராமனும் சீதையும் — "சந்திரிகா" .... .... 719
20. கால் கம்பளம் — "ஸரோஜா" .... .... 720
21. மைசூர் — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... .... 723
22. செய்தித்திரட்டு .... .... .... 726
23. விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... 728
24. கதம்பம் .... .... .... 730
25. சினிமா செய்திகள் .... .... .... 732
26. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 733
27. பஞ்சாங்கம் .... ... .... 735
28. பிரசவ அட்டவணை .... ... .... 736


மூவர்ணப்படங்கள்


1. தாய்
2. ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர்





# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

**பெங்களூர் :** மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.

**கோலார் கோல்ட் பீல்ட்ஸ் :** திரு. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.

**திருப்பதி :** மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்செண்ட்.

**சேலம் :** எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத்

**பொள்ளாச்சி :** திரு. கே. ஆறுமுகம், நியூஸ் ஏஜண்ட். [தெரு.

**மதனபள்ளி :** என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜண்ட்.

**திண்டிவனம் :** திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

**சித்தூர் :** திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.

**வேலூர் :** திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

**ஆரணி :** திரு. என். நாராயணசுவாமி நாயகர், கெமிகல் ஷாப்.

**திருச்சிக்கோட்டை :** திரு. எஸ். அஜீபா சாஹிப், நியூஸ் ஏஜண்டு, வைரவன் கோவில் தெருவு.

**மதுரை :** திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.

**திருநெல்வேலி டவுன் :** திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.

**தூத்துக்குடி:** மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

**பீமாவரம் :** திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

**கிடதவோல் :** திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

**ஹனுமகொண்டா :** திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

**சென்னை :** மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

**கொழும்பு :** திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.

**யாழ்பாணம் :** திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.

**ரங்கூன் :** திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.

**கோலாலம்பூர் :** திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் *F.M.S.*

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.


இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## கிரஹலக்ஷ்மி காரியாலயம்,

**ராயப்பேட்டை, :: சென்னை.**



"தாயும் நீ" என்று திருஞான சம்பந்தரும், "தந்தை தாய் தெய்வமும் நீயே" என்று ஸ்ரீ யோகராஜரும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஔவையாரும் "தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை" என்ற முது மொழியாலும் நம்மை ஈன்றெடுத்த அன்னையின் மாட்சி எவ்வளவு என்று விளங்குகிறது. பத்து மாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டி தாலாட்டி [illegible], தொட்டிலிலும், தோள்மேலும் போட்டு வளர்த்து வந்த தாய்க்கு நாம் எவ்வளவு செய்தாலும் தகும். அந்நன்றியை ஒரு ஜீவனாலும் பூரணமாக செலுத்த இயலாது. ஏழு ஜன்மங்களெடுத்துத் தாய்க்கு நாம் சேவை செய்யினும், தாய் மக்களுக்குச் செய்த சேவைக்கு சமானமாகாதல், தாய் தன் குழந்தைகளை உடல் பேணி வளர்த்து பயன் இன்றுவிடாமல் அறிவு ஒழுக்கமுட்டமையும் போதித்தல் அவசியம். அப்பேர்ப்பட்ட தாய்மார்கள் பொற்புஷ்பங்களுக்கு இயற்கை ஸுகந்தமும் சேர்ந்து விட்டால் எவ்வளவு மேன்மையாக விளங்குமோ, அப்பேர்ப்பட்டவர்களாவார்கள். "பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே."



8-OCT 1947

# ◎ நவராத்திரி ◎

உலகத்தில் யாவருக்கும் இன்பந்தரும் பொருள் பரிபூர்ண சந்திரன். சரத்காலச் சந்திரன் தான் மிகவும் விசேஷமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பௌர்ணமிச் சந்திரனும் மிக்க மேன்மையதே. ருதுக்களில் சரத்ருதுவே சிறந்தது. ஒவ்வொரு ருது ஆரம்பத்திலும் ஒரு நவராத்திரி உண்டு. அப்பொழுது எல்லாரும் ஜகன்மாதவைப் பூஜிக்க வேண்டும். மொத்தம் ஆறு ருதுக்களுக்கும் ஆறு நவராத்திரிகள் உண்டு. இந்த ஆறு நவ இரவுகளில் சாரத நவராத்திரியும், வஸந்த நவராத்திரியும் விசேஷமானவை. இப்பொழுது வரும் நவராத்திரி சார்த நவராத்திரி. இது புரட்டாசி மாதம் சுக்கிலபக்ஷம் முதல் நாளில் தொடங்குகின்றது.

சந்திரமண்டலத்தில், துன்பம் அறுத்து இன்பந்தரும் அம்பாள் வசிக்கின்றாள். சந்திரன் குளிர்ச்சி யளிக்கும் பொருள். அம்பாளும் குளிர்ந்த தன்மையுடையவள். அவள் மனங்குளிரும்படி, உளம்பொங்கி நாம் அவளை இந்நவதினங்களிலும் பூஜித்தால், நமக்குக் குறையாச்செல்வம், அழியாப்புகழ், தீர்க்காயுள் முதலியனவற்றை அவள் தருவாள். மனத்திடத்தே கவிந்து கொண்டிருக்கும் அஞ்ஞானமாகிய அந்தகாரத்தைப் பூரணசந்திரனிடத்தே பிரகாசிக்கும் அம்பாள் நீக்கி, ஞானமென்னும் ஒளியை நம்மனதில் மிளிர்விக்கின்றாள்.

'மாதுர்தேவோ பவ: பிதுர்தேவோ பவ:' என்று கூறும் உபநிஷத்து. ஜகத்துக்கே மாதாவாயிருந்து, தன் மக்களாகிய ஜீவகோடிகளை ரக்ஷிக்கிறாள். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரக் கர்த்தாக்களாகும் பிரம்மா, விஷ்ணு, சிவன் இம்மூவர்களுக்கும் முறையே சரஸ்வதி, இலக்குமி, பார்வதியாகவிருந்து, அவர்கள் தொழிலுக்கு வேண்டிய சக்தியை யளிக்கும் ஓர் ஊற்

றாக விளங்குகின்றாள். அவள் சக்தியின் உருவம். அதனாலேயே பராசக்தி என்று அழைக்கப்படுகிறாள்.

நீராகக் கனலாக வானாக் காற்றா
நிலமாக வடிவெடுத்தாள்; நிலத்தின் மீது
போராக நோயாக மரணமாகப்
போந்திதனை யழித்திடுவாள்; புணர்ச்சி கொண்டால்
நேராகமோன மஹானந்த வாழ்வை
நிலத்தின் மிசை யளித்தமரத்
தன்மையீவாள்

என்று கவியரசர் பாரதியும் கூறியுள்ளார். இத்தகைய பெருமை வாய்ந்த பராசக்திக்குகந்த தினங்களே இந்நவதினங்கள்.

மஹிஷாசுரன் என்ற ஓர் கொடிய வரக்கன், எருமைத் தலையோடு கூடினவனாய் யாவருக்கும் சொல்லொணாத் தீங்குகளிழைத்தான். அவனால் துன்புற்ற தேவர்களைக் காப்பதற்கு சக்தியானவள் உக்கிரஸ்வரூபிணியாய் உருவமெடுத்து அவ்வெருமை அரக்கனைக் கொன்று உலகத்தின் துயரை நீக்கினாள் என்று புராணங்கள் கூறும். இம்மகிஷாசுர சம்ஹாரத்தைப் புரிந்த மகிஷாசுரமர்த்தனியையே இவ்வொன்பது நாட்களிலும் பூஜிக்கின்றார்கள் இந்துக்கள்.

நவராத்திரிக்குப் பிரதிபாத்யமான இத்தேவியின் மகிஷாசுரமர்த்தன ரூபம் சொல்லொணாச் சிறப்பும் அதி உக்கிரமும் வாய்ந்தது. பத்துக்கரங்களோடு கூடினவள் பராசக்தி. கரமொன்றில் அரக்கனைக்கொய்த வெல்வேலையும், மற்றொரு கையில் ஒரு அசுரனின் தலையையும் கொண்டுளாள். மற்ற கரங்களில் பிரகாசம் பொருந்தியனவும், துஷ்டநிக்ரஹத்திற்கு ஏதுவானதுமான பல ஆயுதங்களைத் தரித்துளாள் தேவி. கம்பீரம் நிறைந்த மிருகேந்திரனாகும் சிம்ஹமொன்று அவள் வலது புறத்தே நிற்கின்றது. அசுரன் அவளுடைய இடது காலின்புறம் சாய்ந்த வண்ணம் இருக்கிறான். இத்தேவியை, உக்கிரஸ்வரூபியான மஹிஷாசுரமர்த்தனியை, மும்மூர்த்திகளும் பூஜித்தார்கள். ராவணனுடன் யுத்தம் செய்யுங்காலத்தில் ராமனும் புரட்டாசிமாதத்தில் பராசக்தியைப் பூஜித்து யுத்தத்தில் தனக்குதவி செய்யும்படி கோரியதாகக் கூறப்படுகிறது.

இத்தேவியை நவதினங்களில் பலர் பலவாறு பூஜிக்கின்றார்கள். அம்பிகை எழுந்தருளியுள்ள கோவில்களில் அன்னாலங்காரம் என்றும், சந்தனாலங்காரம் என்றும் ஒன்பது இரவுகளில் ஒன்பது விதங்களாக அலங்கரித்து, தரிசித்து மகிழ்கின்றார்கள். வீடுகளிலோ, யாவரும் கொலுவைக்கின்றார்கள். துர்க்கையின் சிலையை நடுவில் வைத்து, சாஸ்திரத்தில் கூறியுள்ளவாறு சரஸ்வதி, இலக்குமி இவர்களின் உருவங்களை இருமருங்கிலும் வீற்றிருக்கச் செய்து, விதிப்படி மற்ற பொம்மைகளையும் வைப்பதே கொலுவைப்பதாகும். இதில் வேடிக்கை ஒன்று உண்டு. ஒவ்வொரு வீட்டினரும் அண்டை வீட்டாரைக் காட்டிலும் அதிக அழகாக வைக்கமுயலுவார்கள். இப்போட்டியின் முடிவு என்னவெனில் ஒவ்வொரு வீட்டிலும், இது தேவலோகமோ என்று ஐயுறும்படி ஜாஜ்வல்யமாகவும், தேஜோமயமாகவும், பல வர்ணங்களாலாய பலவித பொம்மைகள் சூழக் கொலுவீற்றிருப்பாள் பராசக்தி. அம்பிகையாம் இராஜராஜேஸ்வரியின் சிலையின்றேல் அது கொலுவாகாது.





ஒவ்வொரு இல்லத்திலும், இந்நவதினங்களில் சிறிய பெண்கள் பட்டுப் பீதாம்பரங்களணிந்து கொண்டு அண்டை அயல் வீடுகளுக்குச் சென்று அங்குள்ளாரைத் தம் தம் அகங்களுக்கு அழைத்துச் சென்று தேவியின் பிரசாதங்களை யளிப்பார்கள். இவ்வொன்பது தினங்களும் அவர்களுக்கு மிக்க உற்சாகமும், குதூகலமும் நிறைந்த தினங்களாகும். ஒவ்வொரு இரவும் யாவரும் கோவில்களுக்குச் சென்று அங்கு கொலு வீற்றிருக்கும் ஈஸ்வரியைத் தரிசித்து மகிழ்வார்கள். கோவில்கள் நிரம்பிய ஸ்தலமாயிருப்பின் இரவுதோறும் கோவில்களுக்குச் சென்று தரிசித்து, நிலவில் வீடு திரும்புவது மிக்க வின்பந்தரும்.

இந்நவதினங்களில் முதல் தினம் 'ஹஸ்த' நக்ஷத்திரமாகும். இவ்வஸ்த நக்ஷத்திரம் கூடியநாளே தேவியைத் துதிப்பதற்குத் தகுதியான நாள். இந்நவராத்திரி விரதத்தில் கௌரி பூஜைக்குப் பிறகு இரண்டுக்கு மேல் பத்து வயதிற்குட்பட்ட கன்னிகைகள் குங்குமம், சந்தனம், பழம், புஷ்பம் முதலியவைகளை தானமாகப் பெறுவார்கள். இது ஏன்? பராசக்தியிடம் நவசக்திகள் அமைந்துள்ளன. இவைகளின் உருவப்பெயர்கள் குமாரி, திருமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, கலிகா, சண்டிகா, ஸாம்பவி, துர்க்கை, சுபத்திரை என்பன. குமாரி என்ற உருவத்தில் அழிப்பதும், ஆக்குவதுமாய தொழில்களில் ஈடுபடுகிறாள் தேவி. குழந்தைகள் பொருள்களை உடைத்தும் அழித்தும் அல்லது தாமாகச் சிறுவீடுகள் முதலியன கட்டி விளையாடும். தேவியின் செயலும் இவ்வாறிருப்பதால் அவள் குமாரி எனப்பட்டாள். 'திருமூர்த்தி' என்ற சக்தியால் குழந்தைகளை அளிப்பாள். கல்யாணியாய்க் கல்வியை யளிப்பாள். ரோகிணியாயிருந்து பாபங்களை நீக்குவாள். சண்டிகை என்றால் செல்வந்தருபவளைக் குறிக்கும். ஸாம்பவியாயிருந்து வெற்றியைத் தருவாள். துர்க்கையாயிருந்து தடைகளை நீக்குவாள். ஸுபத்திரையாயிருந்து நினைத்ததைக் கொடுப்பாள். இச்சகல சக்திகளும் மாசற்ற இள நெஞ்சினர்களாகிய இளங் கன்னிகைகளிடமும் உண்டு என்று கருதி இளங்கன்னிகைகளுக்குப் பல பொருள்களை யளித்து அவர்களை மிக்க மேன்மையாகக் கொண்டாடுவார்கள். நம்மவர்கள் அவர்களைச் சக்தியின் அம்சமாய் எண்ணுவார்கள்.

இந்நவராத்திரி உற்சவத்தைத் 'தசரா' என்றும் கூறுவார்கள். தசரா என்றால் பத்துதினங்கள் என்று அர்த்தம். ஒன்பது, பத்தாம் தினங்களில் சரஸ்வதி பூஜை நடக்கும். சரஸ்வதியை ஓர் சிறிய செம்பில் ஆவாஹனம் செய்வார்கள். பண்டைக் காலங்களில் ஓலைச் சுவடிகள் வழக்கத்திலிருந்த போது அவைகளையும் வைத்துப் பூஜிப்பார்கள். சாதாரணமாக பூஜை இரண்டு நாட்கள் நடக்கும். சாயங்காலத்தில் சுமங்கலிகள் அவரவர்கள் வீடுகளுக்கு மற்றவரை அழைத்து அவர்களுக்கு வெற்றிலை பாக்குக் கொடுப்பார்கள்.

அடுத்த தினம் 'விஜயதசமி' என்று கூறப்படும். 'விஜய' என்றால் 'சுபம்' என்று அர்த்தம். 'விஜய தசமி' என்றால் 'சுபதினம்.' இத்தினத்தில் தான் யாத்திரிகர்கள் யாத்திரைக்குப் புறப்படுவார்கள். குழந்தைகளுக்கு வித்தியாரம்பம் செய்யச் சிறந்த தினம் இதுவேயாம். நற்காரியங்களுக்கு இத்தினத்தை ஏன் ஆரம்பதின

மாகக் கொள்ளவேண்டு மென்பதற்குக் கதை ஒன்று வழங்குகின்றது. சூரபத்மன் முதலிய அசுரர்களால் துன்பப்பட்ட தேவர்கள் சிவனை ஒரு குமாரனை அருளும்படி வேண்டினார்கள். சிவனோ வைராக்கியத்துடன் நிருவிகல்ப சமாதியிலாழ்ந்து விட்டார். இத்தவத்தைக் கலைத்து அவரைக் குமாரனை உண்டு பண்ணச் செய்வதற்காக மன்மதனை ஏவினார்கள் தேவர்கள். ஆனால் மன்மதனோ தன் காரியம் நிறைவேறாது சிவனின் நெற்றிக் கண் பார்வையால் சாம்பலானான். பல நாட்களுக்குப்பின் சிவனுடைய மூத்த குமாரன் பிள்ளையார் விளையாட்டாக இச்சாம்பலைச் சேர்த்து ஒரு மனித உருவமாகச் செய்தார். சிவன் அதற்கு உயிரளித்தார். அது ‘பந்தாசுரன்’ என்ற கொடிய அரக்கனாயிற்று. இவன் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து தேவியல்லாது வேறெவரும் தன்னை அழிக்காத வரம்பெற்று உலகத்தார்க்குத் தீமை புரிய, தேவியும் ஒன்பது தினங்களும் ஒன்பது உருவங்களெடுத்து அவனோடு போர் புரிந்து அவனை வெல்ல இயலாது, விஜய தசமியாகிய பத்தாவது தினம் காமேஸ்வரனாகிய சிவனைத் துதித்து அவனருளால் அரக்கனை யழித்தாள் என்பது கதை. இராமனும் சீதையை மீட்கப் புறப்பட்ட தினம் இதுவே என்று கூறுவார்கள்.

மகிஷாசுரனைக் கொன்ற இடம் மைசூர் என்பது புராணம். பராசக்தி இத்தலத்தில் சாமுண்டேசுவரியாய் அவதரித்தாள். இத்தலத்தில் ஒரு சிறிய மலையின் பேரில் சாமுண்டேசுவரியின் கோயில் உள்ளது. மைசூர் ராஜ்ஜியத்திற்கு அவள் ஒரு காப்பு தேவதையாய் விளங்குகின்றாள்.

பண்டிகைகளுள் சிறந்த பண்டிகை யாகும் நவராத்திரி. ஒவ்வொரு ஹிந்துவும் தன்னுடைய சக்தியானுசாரத்திற்குத் தக்கவாறு கொலுவைத்து, தேவியைப் பூஜித்து ஒன்பது தினங்களையும் இன்பமாகக் கொண்டாடவேண்டும். தக்கவாறு அவளைப் பூஜித்து, ஜகத்துக்குத் தாயாகவும் கருணையுடையவளாகவும் இருக்கும் பரதேவதையிடம் கன்றுக் குட்டியைப் போன்ற பக்தி இருக்கவேண்டும். எப்படிக் குழந்தைக்கு வேண்டியதைத் தாய் தருவாளோ அப்படி அவள் இஹலோகத்தில் வித்தை, பணம் முதலியவைகளை அடையச் செய்து பின்பு தானாகப் பழுத்துப் பரானந்தத்தைப் பெறும்படி அனுக்கிரஹம் செய்வாள் என்பது நிச்சயம்.



ஸ்ரீ துர்கா



பம்பாய் விக்டோரியா தோட்டத்தில் ஓர் காட்சி.

# :: நூதன பவன பிராரம்போற்சவம் ::

ஆகஸ்ட்மீ 21வ சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு ராயப்பேட்டையில் நிர்மாணிக்கப்பட்ட கேஸரி குடீரத்தின் நூதனபவன பிராரம்ப உற்சவம் திவான்பகதூர் சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் தலைமையில் நூதன பவனத்தின் முன் ஹாலில் நடைபெற்றது. அப்பொழுது நகரின் பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள். விஜயம் செய்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள் கனம் சாம்பமூர்த்தி, கனம் யூ. ராமராவ், கனம் சர். எம். வெங்கடசுப்பராவ், கனம் கே. எஸ். வெங்கடசாமி நாயுடு, கனம் வி. ராமதாஸ் பந்துலு, திவான்பகதூர் வி. பாஷ்யமய்யங்கார், திரு. என். வி. ராகவன், கன்டி லக்ஷ்மண்ணா முதலியவர்கள். ஆண் பெண்கள் உட்பட சுமார் 600 பேர்கள் குழுமியிருந்த காட்சி கண்ணைக் கவர்ந்தது. நூதன பவனத்தின் கொடிக் கம்பத்தின் மீது தேசீயக் கொடி வெகு உன்னதமாகவும், கம்பீரமாகவும் வீசிப் பறந்து கொண்டிருந்த காட்சி பார்ப்பவர்கட்கு ஆனந்தமாயிருந்தது. கேஸரி குடீரத்தின் சார்பிலுள்ள இலாகா உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் சுத்த வெள்ளை நிறக் கதராடை அணிந்து, காந்தி குல்லாயுடன் விருந்தினர்களை அன்புடனும், மரியாதையுடனும் வரவேற்றார்கள்.

சபை ஆரம்பத்தில் ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம்மாள் தெய்வ வணக்கம் பாடினார்கள். தங்களுக்கு வரமுடியாமைக்கு வருந்தியும், விழாவும், குடீரமும் வெற்றியுடன் நடந்து மென்மேலும் விருத்தி அடைய வேண்டுமென்றும் கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், சுகாதார மந்திரி, கனம் வி. ஐ. முனுசாமி பிள்ளை, விவசாய மந்திரி, கனம் கே. ராமன் மேனன், கோர்ட்டுகள் மந்திரி, ராஜசபாபூஷண தம்பு செட்டி, மைசூர் மஹாராஜாவின் காரியதரிசி முதலியோர் ஆசிச் செய்திகள் அனுப்பி இருந்தார்கள். அச்செய்திகள் வாசித்துக் காட்டப்பட்டன. "கிரஹலக்ஷ்மி" பத்திரிகையைப் பாராட்டி ஸ்ரீமதி கனுபர்த்தி வரலக்ஷ்மியம்மாள் எழுதியிருந்த கடிதமும் இச்சமயத்தில் படிக்கப்பட்டது.

பின்னர் டாக்டர் கேசரி அவர்கள் சபையோரை வரவேற்று சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரை புதிய கட்டடத்தைத் திறந்துவைக்குமாறு கேட்டுக் கொள்ளும்போது கீழ்கண்ட பிரசங்கம் செய்தார்:—

சகோதர சகோதரிகளே!

என்னுடைய அழைப்புக்கிணங்கி இன்று இவ்விழாவுக்கு விஜயம்செய்து என்னை கௌரவப்படுத்தியதற்காக என் மனமார்ந்த வந்தனத்தையும், நன்றியையும் உங்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறேன். முப்பத்தேழு வருடங்களுக்கு முன் நான் இந்த தொழிலை "கேஸரி குடீரம்" என்ற பெயருடன் பதினைந்து ரூபாய் மூலதனத்துடன் ஒரு ரூபாய் ஆறுணா குடிக்கூலி கொடுத்து வந்த ஒரு சிறு



திறப்பு விழாவின்போது எடுத்த படம்

(இடது புறமிருந்து வலதுபுறம்.) கண்டி லக்ஷ்மண்ணா, திருவாளர்கள் ஏ. சூரியநாராயணா, என். சாம்பையா, திவான் பகதூர் சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், வி. ராமதாஸ் பந்துலு, வி. ராதாகிருஷ்ணய்யா, டாக்டர் கே. என். கேஸரி.

இல்லத்தில் ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் எனக்கு எவ்வளவோ இடைஞ்சல்கள் ஏற்பட்டன. ஆனால் அந்த சமயங்களில் எல்லாம் அவற்றை சமாளித்து முன்னுக்குவர எனக்கு பல நண்பர்கள் உதவி செய்தார்கள். அந்த உதவியை நான் என்றென்றைக்கும் ஞாபகத்தில் வைத்திருப்பேன். பகவத் கிருபையால் ஆரம்ப முதலே என் வியாபாரத்துக்கு பொதுஜன ஆதரவு இருந்து வந்தது. அது படிப்படியாய் வளர்ந்து வந்தது. என் தொழில் ஆரம்பித்த சில வருஷங்களிலேயே என்னுடைய மருந்துகளிற்பல பொது மக்களின் ஆதரவை அடைந்தன. அவைகளின் உபயோகமும் எங்கும் பிரபல்யமடைந்தது. அவைகளில் மூன்று ரத்தினங்களாகிய லோத்ரா, அமிருதா, அர்க்காவின் பெருமை இந்தியா, பர்மா, சிலோன் மாத்திரமன்றி இதர அன்னிய நாடுகளிலும் பரவி வியாபித்து அதன் வியாபாரம் பெருகிற்று. நான் என் மருந்துகளைத் தயார் செய்வதில் சாஸ்தி





ரீய முறைகளையும், சாஸ்திரீயமாய் உயர்ந்த ரக மூலிகைகளையுமே உபயோகப்படுத்துவதில் வெகு கவனமாய் இருந்துவந்தேன். இது விஷயத்தில் மேல்நாட்டு முறைகளின் அனுகூலங்களையும் நான் உபயோகித்துக்கொண்டேன்.



திறப்பு விழாவுக்குப்பின் நடந்த தேக் கச்சேரி

ஸ்ரீயுத டாக்டர் கே. என். கேசரி, கனம் சாம்பமூர்த்தி, சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் முதலியோர் சிற்றுண்டி அருந்துகிறார்கள்.

ஆகவே மேல்நாடுகளில் செய்யப்படும் அநேக ஔஷதங்களுக்கு சமமான (ஏன் மேலானதுகூட) மருந்துகளை என்னால் செய்ய முடியும்.


லோத்ராவின் மேன்மையும், பெருமையும், அதனால் நானடைந்த ஊதியமும், இந்திய ஸதிரீகளுக்காக என்னாலான சேவையைச் செய்ய எனக்கு சந்தர்ப்பமும் சாதனமும் அளித்தது. அதுமட்டுமல்ல. என் மனப்பான்மை மாறுதல் அடைந்தது. விரிந்த எண்ணங்களும், பரந்த நோக்கமும் உண்டாய் நான் அதிகமாக அவர்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றியது.

பத்து வருஷங்களுக்குமுன், ஸ்திரீகளின் தேக ஆரோக்கிய சம்பத்துக்களை விருத்திசெய்யும் நோக்கத்துடனும், அவர்களின் அறிவு வளர்ச்சியடையவும், சமூ

கத்தில் அவர்கள் உன்னதஸ்தானம் பெற்றுத்திகழ வேண்டுமென்றும் "கிரஹலக்ஷ்மி" என்ற தெலுங்கு மாதாந்த சித்திரப் பத்திரிகையை ஆரம்பித்தேன். தெலுங்கு "கிரஹலக்ஷ்மி"க்குக் கிடைத்த பொதுஜன ஆதரவும், அதன் பிரபல்யமும் எனக்கு இன்னொரு பத்திரிகை ஆரம்பிக்கத்தக்க ஊக்கத்தை அளித்தது. அதன்படியே இவ்வருஷ ஆரம்பத்தில் மேற்சொன்ன லட்சியங்களுடனே "கிரஹலக்ஷ்மி" என்று தமிழிலும் ஒரு மாதாந்தப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்திவருகிறேன். அதுவும் தனது தெலுங்கு சகோதரியைப்போல் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

இந்த நோக்கத்துடனும், இன்னும் எனது தொழில், வியாபார சம்பந்தமான அலுவல்களை உத்தேசித்தும் ஒரு அச்சுக்கூடம் ஏற்படுத்த வேண்டுவது அவசியமென எனக்குத் தோன்றியது. ஆகையால் 1927ம் வருஷம் நான் "லோத்ரா அச்சுக்கூட"த்தை ஆரம்பித்தேன்.


கேஸரி குடீரம், ராயப்பேட்டை, மதராஸ்



என் தொழில் சம்பந்தமான எல்லாக் கிளை இலாகாக்களையும் ஒரே கட்டடத்திலேயே வைத்து நடத்தவேண்டுமென்பது என் அவா. அது என் மனத்தில் வெகு நாட்களாய் ஊசலாடிக் கொண்டிருந்தது. நான் எழும்பூரில் மருந்துகள் செய்ய ஒரு தொழிற்சாலையும், பெங்களூரில் முக வசீகரப்பொருள்கள் உற்பத்தி செய்யும் சாலையும், சாஸ்திரோக்தமான மூலிகைகள் ஏதேஷ்டமாகக் கிடைக்கும் திருச்சூரில் ஒரு காரியாலயமும் நிர்மாணித்தேன். அவைகள் எல்லாம் ஒரே இடத்திலிருந்தால் வெகு சௌகர்யமாக இருக்கும். அதிலும் நான் குடியிருக்கும் கிரஹத்தை யொட்டியே அவைகளும் இருந்தால் மிகவும் நல்லது. எல்லா விஷயங்களையும் நானே நேரில் கவனித்து செவ்வனே காரியங்கள் நடைபெறச் செய்ய இயலும். இந்த எண்ணம் என் மனதை வெகுகாலமாய் ஆட்கொண்டிருந்தது.

இப்பொழுது திறந்து வைக்கப்போகும் இந்தக் கட்டடம் மேற்படி தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு நான் நேரில் விஷயங்களைக் கவனிக்க வசதிகளிருக்கின்றன.

இந்தக் கட்டடத்தின் வேலை சென்ற அக்டோபர் மீ ஆரம்பிக்கப்பட்டது. இவ்வளவு விரைவில் இவ்வளவு உன்னத



கேஸரி குடீரம், பெங்களூர்.

கட்டடத்தைச் சிறந்த முறையில் கட்டித் தந்ததற்காக கண்ட்ராக்டர் திரு. கே. ரத்னம் அவர்கட்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என் சுயசரிதத்தைப்பற்றி யான் இங்கு பேசுவதற்காக தயவுசெய்து என்னை மன்னியுங்கள். நான் இதைப்பிரஸ்தாபித்ததின் நோக்கம் வாலிபர்களுக்கும், யுவதிகளுக்கும் நம்பிக்கையும், ஊக்கமும், புத்துணர்ச்சியும் ஏற்படவேண்டுமென்ற நோக்கத்துடன்தான். வாழ்க்கையில் வெற்றியை விரும்புபவர்கள் தன்னம்பிக்கையும், தங்கள் சக்தியில் நம்பிக்கையும், தொழிலில் இடையரு ஊக்கமும் கவனமும் செலுத்த வேண்டும். தூயநோக்கத்துடனும், எண்ணத்துடனும் நடத்தப்படும் எந்தக்காரியமும் நிச்சயம் வெற்றி அடையும்; வெற்றியுற்று தகுந்த பலனை அளிக்கும். வாலிபர்களே இதைப்பற்றி சற்றே சிந்தியுங்கள்! சகோதர சகோதரிகளே நீங்களும் இதைப்பற்றி யோஜித்துப் பாருங்கள்!

எவ்வளவோ அலுவல்களுக்கிடையில் என் வேண்டுகோளுக்கிணங்கி "கேஸரி குடீரத்தின்" புதிய மாளிகையைத்திறந்து வைக்க மனமுவந்து இசைந்து இங்கு வந்திருக்கும் சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரவர்களுக்கு என் நன்றியை செலுத்தி முடியாது.

என் அழைப்புக்கிணங்கி அவரும், நீங்களும் இங்கு விஜயம் செய்திருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. உங்களுடைய விஜயமும், ஆதரவும் என்னை மென்மேலும் சமூக சேவை செய்ய தூண்டும் என்பது நிச்சயம்.

மேற்படி பிரசங்கத்துக்குப்பின் டாக்டர் கேசரி, திறமைமிக்க கண்ட்ராக்டர்

திரு. கே. ரத்னத்துக்கு மாளிகையை சீக்கிரம் முடித்துக் கொடுத்ததற்காக ஒரு தங்கப் பதக்கம் பரிசளித்தார். காங்கிரஸ் மஹாசபைக்கு 116 ரூபாயும், சென்னை ஸேவாஸதனத்துக்கு 116 ரூபாயும், ஔவை ஆசிரமத்துக்கு 116 ரூபாயும், சென்னை ஹரிஜன சேவாசங்கத்துக்கு 50 ரூபாயும் நன்கொடை அளித்தார். காங்கிரஸின் சார்பாக கனம் சாம்பமூர்த்தியும், சேவாஸதனத்தின் சார்பாக கனம் சர். எம். வெங்கட சுப்பராவும், ஔவை விடுதியின் சார்பாக டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டியும், ஹரிஜன சேவாசங்கத்தின் பிரதிநிதியாக திவான்பகதூர் பாஷ்யமய்யங்காரும் முறையே மேற்படி நன்கொடைகளை வாங்கிக்கொண்டார்கள்.

பெருத்த கரகோஷத்தினிடையே சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் எழுந்து கீழ்கண்ட பொற்பொழிவு நிகழ்த்தினார்:—
சீமாட்டிகளே, சீமான்களே!

இன்றைய விழாவை சாமர்த்தியமாய் நடத்திவைக்கும் திறமை எனக்கு உண்டா என்பது எனக்கே சந்தேகம். திரு. கேசரி என்னை இந்த விழாவை நடத்திவைக்கக் கேட்டுக் கொண்ட போதும் எனக்கு அந்த எண்ணமிருந்தது. ஆனால் நாங்களிருவரும் நெல்லூர் ஜில்லாக்காரர்கள் என்ற பந்துத்துவம் என்னை இந்த அழைப்புக்கிணங்கும்படி தூண்டி அதற்கு வேண்டிய ஊக்கத்தையும் கொடுத்தது. நாங்களிருவரும் எங்கள் வாழ்க்கையை ஒரே மாதிரியே ஆரம்பித்தோம். அவரவர்களுடைய தொழில் முறையில் கௌரவஸ்தானம் அடைந்துள்ளோம். டாக்டர் கேசரி தன் வாழ்க்கையை 15 ரூபாய் மூலதனத்துடன் ஆரம்பித்தார். ஆனால் நானே அதுகூட இல்லாமல் "மைனஸ் பாலன்ஸுடன்" **(Minus balance)** ஆரம்பித்தேன்.

இந்த ஸ்தாபனத்தில் ஒரு விசேஷமிருக்கிறது. இன்று சமூகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பொருளாதார நிலைமையே உயர்த்திக் கொள்ளுவதில் கண்ணும் கருத்துமாயிருக்கையில் இந்த ஸ்தாபன கர்த்தா தான் அடைந்த லாபத்தில் ஒரு பகுதியை மற்றவர்கட்கு மனமுவந்து கொடுப்பது விசேஷமே. மேல் நாடுகளில் மண்ணெண்ணை அரசர்களும், கப்பல் ராஜாக்களும், இரும்பு கோடீஸ்வரர்களுமிருக்கிறார்கள். அதே போல் தொழில் அபிவிருத்தியால் பம்பாயில் முன்னுக்கு வந்த கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். ஆனால் நம் மாகாணத்தில், அதிலும் ஹிந்துக்களில் வியாபாரத்தால் பெருநிதியம் படைத்தவர்கள் வெகு துர்லபம். டாக்டர் கேசரியவர்கள் இந்த "குடீரத்தை" தன் நம்பிக்கையுடனும், புராதன வைத்திய முறைகளிலும், மருந்துகளிலும் பூரண நம்பிக்கையுடனும் ஆரம்பித்தார். ஒரு ஸ்தாபனம் பொது ஜனங்களின் ஆதரவைப் பரிபூரணமாகப் பெற்று பிரபலமடைவதென்பது ஓரிரண்டு வருஷங்களில் சாத்தியமானதல்ல; பல வருஷங்களாக வேண்டும். இதன் உண்மை என்ன? டாக்டர் கேசரியின் மீது மக்களுக்கு கண்மூடித்தனமான நம்பிக்கைமட்டுமிருந்தால் இந்த ஸ்தாபனம் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்க முடியாது. ஆனால் அவருடைய மருந்துகள் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு சுகத்தையும், குணத்தையும் அளித்ததே இதன் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் காரணம். "உங்கள் பலத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள்; நீங்கள் உன்னத திசையடைவீர்கள்" என்ற உண்மையை டாக்டர் கேசரி ருஜூப்படுத்தியிருக்கிறார். என்னுடைய அபிப்பிராயத்தில் நம் சுற்றுப்புறமும், நாம் பழகும் சமூகமும் நம்மை எவ்வளவோ பாதிக்கின்றன என்பதே. தங்களுடைய சுய சாமார்த்தியத்தால் செல்வமடைந்தவர்களிடமிருந்து சமூகம் ஒருபங்கு அடைவதற்கு உரிமை உள்ளதே. சென்னையிலும், நெல்லூரிலும் உள்ள பல பொதுஸ்தாபனங்களுக்கு டாக்டர் கேசரி அவர்கள் எவ்வளவு தூரம் உதவியளித்து வந்திருக்கிறார் என்பது அவருடன் நெருங்கிப் பழகியவர்கட்கு நன்கு தெரியும். உதவி வேண்டுமென்று கையேந்தி வந்தவர்களொருவரையாவது அவர் "இல்லை" என்றுகூறி அனுப்பினதாக நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை. இப்பொழுது இருந்து வரும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை கண்டிப்பவர்கள்கூட டாக்டர் கேசரியைப் போன்ற தாள தர்ம சீலரைக்கண்டு வெறுக்கமாட்டார்கள். அவரது வியாபாரம் மென்மேலும் விருத்தியடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால் அவர் செல்வ வளர்ச்சி பெற்றால் காங்கிரஸ், சேவாஸதனம் போன்ற ஸ்தாபனங்களும் அதனால் பலனடைகின்றன. நசுக்கப்பட்டு தரித்திரத்தால் அல்லலுறும் பாமரமக்களின் முன்னேற்றத்துக்காகத் தன்னாலியன்ற கைங்கர்யத்தைச் செய்ய டாக்டர் கேசரி சற்றும் தயங்கமாட்டார் என்று நான் திண்ணமாகக் கூறுவேன். அவரது அழைப்புக்கிணங்கி நீங்களெல்லோரும் இங்கு வந்திருப்பதற்காக நான் சந்தோஷம் அடைகிறேன். இக்கூட்டத்தில் சமூகத்திலுள்ள எல்லாபிரிவின் பிரதிநிதிகளும் வீற்றிருக்கிறார்கள்.

கேஸரி குடீரம், திருச்சூர்



ஒவ்வொருபிரிவின் அங்கத்தினர்களும் இங்குவிஜயம் செய்திருப்பதே இந்த ஸ்தாபனத்தின் உயர்வையும், இவரது ஔஷதங்களின் பெருமையையும் எடுத்துக் காட்டுகிறது.

இந்த பவனத்தை திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

திறப்பு விழாப்பிரசங்கம் முடிவடைந்த பின் வந்திருந்த விருந்தினர்களுக்கு உயர்தர சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. பின்னர் ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம் பாட்டுக்கச்சேரி நடைபெற்றது. அதற்குப்பின்னர் கூட்டம் கலைந்தது. ஒவ்வொரு ஆடவருக்கும் வெள்ளை கதர் பையில் கேசரியின் பற்பசையும், தாம்பூலம், பழமும், ஒவ்வொரு ஸ்திரீ விருந்தினருக்கும் ஆரஞ்சு கலர் பையில் குந்தல காந்திதைலமும், குங்குமபழ புஷ்பதாம்பூலமும் அளிக்கப்பட்டது.

மறுநாள் இரவு (ஆகஸ்ட்மீ 22உ) முன்தினம் விழாவில் கலந்து கொண்டவர்கட்கெல்லாம் ஒரு விருந்து அளிக்கப்பட்டது. கேஸரி குடீரத்தில் வேலை செய்யும் சிறு வேலைக்காரன் முதல் உயர்ந்த உத்தியோகஸ்தர்வரை யாதொரு பாரபக்ஷமுமின்றி வெகு அன்புடனும், ஆதரவுடனும் கௌரவமளிக்கப்பட்டு உபசரிக்கப்பட்டது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

# ஸ்திரீகள் பிரச்சினை

## ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

"ஸ்திரீகள் பிரச்சினையைப் பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று என்னை அடிக்கடி பத்திரிகாசிரியர்களும், இதரர்களும் கேட்கிறார்கள். இந்தக் கேள்வி எழுப்பப்பட்ட ஒவ்வொரு சமயமும் ஸ்திரீகள் பிரச்சினை என்பது எது என்று நான் வியப்பெய்துவேன்.



ஐக்கிய மாகாண ஸ்தலஸ்தாபன சுகாதார இலாக்காக்களின் மந்திரி.

நம் நாடு இன்று அடிமைச் சங்கிலியால் கட்டுண்டு கிடக்கின்றது. அன்னை பாரதமாதா சுதந்தரமற்று அடிமைச் சிறையில் வதிந்துகிடக்கின்றாள். அப்பேர்பட்ட தேசத்திலே நாம் இன்று சுதந்திரப் போராட்டத்திலே முனைந்து இருக்கிறோம். எனவே இப்பொழுது ஒரு பிரச்சினை தான் இந்த தேசத்தில் இருக்க முடியும். அதுதான் தேச விடுதலை. எவ்வளவு சீக்கிரம் நாடு அன்னியராட்சியை உதறித் தள்ளி சுதந்திரக் கொடியை உயர்த்த முடியுமோ அவ்வளவு விரைவில் அதைச்செய்து முடிப்பதே தேசத்தின் பிரச்சினை. இது தீரும் வரை வேறு ஒரு விஷயத்தைப் பற்றியும் சிந்திக்க முடியாது. தேசம் விடுதலை அடையும்வரை வேறு பிரச்சினைகளே இருக்கக்கூடாது.

இருந்த போதிலும் மாதர்களின் விஷயத்தைப்பற்றிய கேள்வி எழுந்து விட்டது; நானும் அதற்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று கருதுகிறேன்.

சமூக அமைப்பில் ஸ்திரீயின் நியாயமான, அவளுக்குத் தகுந்த, உகந்த ஸ்தானம் எது வென்றும், எவ்விதத்தில் அவள் சமூகத்துக்கும், தேசத்துக்கும் பூரண சேவை செய்ய முடியும் என்பதுவுமே ஆராயவேண்டிய விஷயமாகும்.

லக்ஷியங்களில் அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதும், சமையல் செய்து போடுவதுமே தங்கள் வேலை யென்ற நிலையிலிருந்து இன்று ஸ்திரீ சமூகம் எவ்வளவோ முன்னேற்றமடைந்து விட்டது. இன்று ஸ்திரீகளுக்கு இந்த அலுவல்கள் மட்டும்தான் என்ற கட்டுப்பாடு இல்லை. பெயரளவிலாவது அவர்கள் சுதந்திரம் அதிகமாகியிருக்கிறது.

இருந்த போதிலும் முன் ஸ்திரீயை நசுக்கி அடக்கி அமுக்கி வைத்திருந்த பழைய தடைகளும், தளைகளும் இப்



பொழுதும் வேறு சொரூபங்களில் கிளம்பி அவளின் முன்னேற்றத்துக்கு தடங்கல்களாயிருக்கின்றன.

தற்காலக் கல்விமுறை, ஸ்திரீ, உலகத்தில் தனது சுய கௌரவப் பிரயோஜன ஸ்தானத்தை திறமையுடன் வகிப்பதற்கு அவளை ஹேதுவாகச் செய்யாமல் பெரும்பான்மையோர் சமூகத்துக்கு அலங்கார பொம்மைகளாக்கப் படுகிறார்கள். இக் கல்வி முறை அவளைக் குடும்பத்துக்கும் லாயக்கற்றதாகச் செய்கிறது; தேசத்துக்கும் பிரயோஜனமற்றவளாய்விடுகிறாள். இங்கு நான் குறிப்பிட்டுப் பேசுவது இந்தியாவைப்பற்றி மட்டும் தான்.

சரித்திரத்தின் இந்தப் பகுதியில் நாகரிகம் ஆண்மயமாகவே இருக்கிறது. சமுதாய முறையில் ஸ்திரீ தனது நியாயமான அந்தஸ்தையும் ஸ்தானத்தையும் வஹிக்கவில்லை. நாகரிகத்தின் பெருமைக்கு ஆண் எவ்வளவு பிரதானமோ அவ்வளவு ஸ்திரீயும் அவசியமே. நாகரிகத்தில் ஆடவர் தனி உரிமை வகித்து வருவதையும், ஜீவன மார்க்கத்தை தாங்களே தேடி அனுபவித்து வருவதையும் எதிர்த்துப் "புதுமைப் பெண்" போராடுகிறாள்.

> கிரஹநிர்வாஹம் மட்டுமே முன்னெல்லாம் ஸ்திரீகளின் தொழிலாக இருந்து வந்தது. சமுதாய வாழ்க்கையைப் புதுப்பித்து சீர்திருத்தியமைப்பதில் ஏன் அவளும் தலையிடக்கூடாதென்பதற்கு யாதொரு நியாயமுமில்லை. ஸ்திரீகளின் கூர்ந்த விவேகம் அலங்கார வேலையில் மட்டுமின்றி அரசியல் நிர்வாஹத்திலும் மிகவும் உயர்ந்தது என்பதை எதிர்காலம் கட்டாயம் ருஜுப்படுத்தும். அவர்கள் உலக முழுவதையுமே வாழ்க்கைக் குகந்ததாகவும், நீதி நிறைந்ததாகவும், வனப்பு மிக்கதாயும் செய்யலாம்.

வம்ச விருத்திக்காக மாது குழந்தைகள் பெற்றுக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அந்தக் குழந்தைகளை தேகதிடத்துடனும், மனோதைர்யத்துடனும் கூடியவர்களாய் வளர்க்கும் வழியும் அவளுக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் சத்தியத்தை அறிந்து, "சாதல்நேரினும் சத்தியம் பூண்டு" ஒழுகுங் குணவந்தர்களாக, அன்னை அவர்களைச் செய்யவேண்டும்.

கிரஹ நிர்வாஹம் மட்டுமே முன்னெல்லாம் ஸ்திரீகளின் வேலையாக இருந்து வந்தது. சமுதாய வாழ்க்கையைப் புதுப்பித்து சீர்திருத்தியமைப்பதில் ஏன் அவளும் தலையிடக்கூடாதென்பதற்கு யாதொரு நியாயமுமில்லை.

முன்பு ஸ்திரீகள் லக்ஷிய பரமார்த்திகர்களாய் இருந்தார்கள்; அவர்கள் தற்காலம் உலகமிருக்கும் உண்மையை உணர்ந்து தங்கள் நிலையைப்பற்றி மிகவும் தெளிவாக சிந்திக்கவேண்டும். குடும்ப நிர்வாஹத்தை மேற்பார்த்து வந்தது போல் தங்களாலான தொண்டுகளிலும் ஈடுபட்டு வேலை செய்ய வேண்டும். ஸ்திரீகளின் கூர்ந்த விவேகம் அலங்கார வேலை

களில் மட்டுமின்றி அரசியல் நிர்வாஹத்திலும் மிகவும் உயர்ந்தது என்பதை எதிர்காலம் கட்டாயம் ருஜுப்படுத்தும்.

இது சரியான லட்சியந்தானா என்று இப்பொழுது சொல்ல இயலாது; ஆனால் இது ஒரு உன்னத லட்சியத்தைப் பூர்த்தி செய்யும் பாதையில் ஒரு படிக்கல் என்று சொல்லலாம்.

ஸ்திரீகள் தாராளமாக கிரஹயஜமானிகளாக இருக்கட்டும். அவர்கள் தங்கள் இல்லங்களை இன்பக்கோவில்களாகவும், எழில்மிக்க ஸ்தலங்களாகவும் வைத்துக் கொள்ளட்டும். அவர்களின் இந்தக் குணம் அத்துடன் நின்றுவிடாமல் வேறு உயர்ந்த விஷயங்களிலும் லயிக்கவேண்டும்.

அவர்கள் உலகமுழுவதையுமே வாழ்க்கைக் குகந்ததாகவும், நீதி நிறைந்த இடமாயும், வனப்பு மிக்கதாயும் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். இந்திய ஸ்திரீயின் உண்மையான அழகு நேர்மையான காரியத்தை தைரியமாகச் செய்யும் குணமே என்பதை உலகம் உணரும்படி செய்வோம்.

நேர்மையான நடத்தையே ஸ்திரீகளுக்கு முடிவில் வெற்றிக்கிரீடம் அளிக்கும்.

[பம்பாய் "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி" யில் ஐக்கியமாகாண ஸ்தல ஸ்தாபன இலாகா மந்திரி ஸ்ரீமதி. விஜயலக்ஷ்மி பண்டிட் எழுதிய வியாசத்தின் மொழிபெயர்ப்பு. ப—ர்.]

## பெண்கள் விடுதலை

பட்டங்காளாள் வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி.

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடு வோம்.

காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.



# ரஜபுத்திர ரமணிகள்

ஸ்ரீமதி எஸ். கமலா

இந்திய சரித்திரத்தில் ரஜபுத்திரர்களின் வீரமும், தீரமும் பெரிதும் போற்றற்குரியது. ஆண்பெண் இருபாலாரும் தைர்யலக்ஷ்மியின் குழந்தைகளாக இருந்திருக்கிறார்கள். லட்சியமே பெரிதென்றும், உடல், பொருள், ஆவி மூன்றும் உயர்ந்த லட்சியங்கட்குமுன் வெறும் துரும்புகள் என்றும் தங்களது அபூர்வச் செய்கைகளால் கணக்கற்ற ரஜபுத்ரரமணிகள் நம் நாட்டின் சரித்திரத்திலே நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். கர்னல் டாட் என்னும் ஆங்கிலேயரின் "ராஜஸ்தானம்" (Rajasthan) என்ற நூலை வாசிக்கும் எந்த இந்தியன்தான் தன் தேசத்தின் பெருமையைக் கண்டு இறுமாப்பு அடையாதிருக்க முடியும்? ராஜஸ்தான ரத்தினங்கள் அரச குடும்பங்களில் மட்டுமின்றி பாமரக் குடும்பங்களிலும் பொதிந்துகிடந்து சமயம் நேருங்கால் புத்தொளி பெற்றுப் பிரகாசித்தன. அவற்றுள் ஒன்றிரண்டைப்பற்றி மட்டும் இங்கு பிரஸ்தாபிக்கிறேன்.

உதயபுரிக்குச் செல்லும் ஒவ்வொரு சரித்திர ஆசிரியரின் உள்ளமும் அந்த ஏரிக்கரையைப் பார்க்கும்போது ரஜபுதனத்தின் மங்கா விளக்காகிய, வாடாத புஷ்பமாகிய அரசிளங்குமாரி கிருஷ்ணகுமாரியைப்பற்றி நினைந்துருகும். அவளுக்கு வயது பதினைந்திருக்கும். எழிலும், வீரமும் செறிந்த முகவதனமும், கண்கவர் வதனவிலாஸமும், இன்னோரன்ன குணங்கள் சிறந்து விளங்கும் அந்த ஜயசீலியை யார்தான் அடைய விரும்பமாட்டார்கள்.

சிந்தியாவின் ஹோல்கார் தானே அவளுக்குகந்த மணாளன் என்று அவளைத் தனக்கே மணம் செய்து கொடுக்கவேண்டுமென்று கிருஷ்ணகுமாரியின் தந்தையை வற்புறுத்தினான். ஆனால் அம்பார் நாட்டு மன்னனாகிய ஜகத்சிங் அவளைத் தன்னிராணியாக்கிக் கொள்வதற்காக போரிடவும் தயார் என்று குமாரியின் பிதா உணரும்படி செய்தான். மார்வாரின் மகிபன் ராஜா மான் கிருஷ்ணகுமாரியைத்தனது மனைத்துணைவியாகப் பெற்றுமகிழ எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்து நின்றான். ஒரே புஷ்பத்தையடைய மூன்று வீரர்கள் விரும்பினார்கள். என் செய்வான் உதயபுரியின் ராணா. அவனோ ரஜபுத்ரவம்சத்துக்கு ஒரு திருஷ்டிபரிகாரம். யுத்தம் நேரிட்டால் மூன்று அரசர்களும் சேர்ந்து தன் ராஜ்யத்தை அழித்துவிடுவார்களே என்று நெஞ்சங் கலங்கினான். இந்த யுத்தத்துக்குக்காரணம் தன் புத்திரியாகவே இருப்பதால் அவள் மாண்டுபோனால் தன் ராஜ்யம் பகைவர்வசம் அகப்பட்டு நாசமாகாது என வியாக்கியான நியாயம் கூறினான். நாட்டைக்காப்பாற்ற வாளுருவிப் போர் புரிய அஞ்சிய அவன் தன் புதல்வியை தன்னின்னுயிரை மாய்த்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டான். தயங்கினாளா தையலார் திலகம்? இல்லை. தந்தையின் ஆஞ்ஞையைப் புன்முறுவல் கொண்ட பூமுகத்துடன் ஏற்றுக்கொண்டாள்.

ஆனால் தாயின் மனம் தத்தளித்தது. தன் அருமைப் புதல்வியை மார்போடணைத்துக்கொண்டு உச்சிமுகந்து கண்ணீர் சொரிந்து கலங்கி அழுதாள். சௌந்தர்யத்தாலும், யௌவனத்தாலும் வீரதீரத்தாலும் பிரகாசித்த கிருஷ்ணகுமாரி நீர் உகுத்து நிற்கும் நிர்மலையாகிய தன்

தாயை நோக்கி "அன்னையே, அழுவானேன். பிறந்தவர்யாவரும் இறப்பது உறுதி என்ற பெற்றியை உணர்ந்தவர் யாரும் மரணத்தைக்கண்டு சற்றும் அஞ்ச மாட்டார்கள் அம்மா! மேலும் தந்தை இன்று வரையிலாவது என்னை உனக்கு அளித்து வைத்தற்காக என் அருமைத் தந்தைக்கு நீ நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளாய். மேலும் தந்தை என்னை ஏன் இறக்கச் சொல்லுகிறார்? என் தாய் நாட்டின் க்ஷேமத்துக்காக. என் நாட்டிற்காக, அது க்ஷேமமுற வேண்டி, என் உயிரைத்தியாகம் செய்ய எனக்கு சந்தர்ப்பமளித்த என் தந்தைக்கும், எனையாளும் ஈசனுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை விட இந்த ஜன்மம் எடுத்ததில் சிறந்த பாக்கியம் வேறு ஒன்றுமில்லை தாயே! நான் விடைப்பெற்றுக் கொள்ளுகிறேன்" என்று வனிதா ரத்னம் கிருஷ்ணகுமாரி பகர்ந்தாள். மலர்ந்த முகத்துடன் விஷத்தைக் கைகொண்டு அன்னை தடுக்க முயன்றும் மீறி உண்டு மாண்டு மறைந்தாள். ஆனால் அவள் பெயர் என்றும் மறையாது. இச்சம்பவம் பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்றது.

அர்சி என்ற மீவார் அரசிளங்குமரன் ஒருநாள் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றான். அங்கு வனத்தைக் காத்துக் கொண்டிருந்த ராஜபுத்திர மெல்லியலாள் ஒருவள் தானே காட்டைக்கலைத்து துஷ்டமிருகங்களை வெளிப்படுத்த முன் வந்தான். நீண்டு வளர்ந்திருந்த ஒரு சோளத்தட்டையைப் பிடுங்கி சென்றவள் சற்று தூரத்தில் ஒரு முரட்டுக் காட்டுப் பன்றியை அரசிளங்குமரன் முன் கொணர்ந்து நிறுத்திவிட்டுச் சென்றாள்.

வேட்டைக் கூட்டம் பக்கத்திலிருந்த நதிக்கரையில் களைப்பாறிக் கொண்டிருக்கும் சமயம் ஒருகளிமண் உருண்டை பட்டு ராஜகுமாரனின் குதிரையின் முழங்கால் பெயர்ந்து விட்டது. அம்மண்ணுருண்டை அக்கன்னிகையால் விளையாட்டாகத் தன் பரணியினின்றும் பக்ஷிஜாலங்கள் பயிரை அளிக்காதிருக்க தன் அம்பினின்றும் எய்ததுதான். தான் தெரியாமல் செய்த தவறுக்காகத் தன்னை மன்னிக்குமாறு அந்நங்கை அவர்களிடம் வந்து கேட்டுக்கொண்டாள். இது அவர்களுக்கெல்லாம் விந்தையாக இருந்தது.

பின்னர் வேட்டையாடித் திரும்பி வரும்போது அதே நாரீமணி தன் தலையில் ஒரு பெருத்தகுடத்தில் பாலைச் சுமந்து கொண்டு இருகைகளில் இரு எருமைமாடுகளைப் பிடித்துக்கொண்டு நடந்து வந்தாள். ராஜகுமாரனின் தோழன் ஒருவன் அவள் பால்குடத்தை தட்ட எண்ணி தன் குதிரையை விட்டடித்தான். ஆனால் குடம் விழவில்லை; அவனே குதிரையினின்றும் கீழே விழுந்தான். அக்கன்னிகை தேகமனோபலம் அவ்வளவு அதிகம். அர்சி அவள் யாரென விசாரித்த பொழுது [illegible] வகுப்பைச் சார்ந்த ஒரு ராஜபுத்ர ஏழையின் குமாரி என்றறிந்தான். [illegible] தந்தையை [illegible] மணம் [illegible] கொடுக்கும்படி [illegible] கேட்டான். [illegible] மறுத்தான். ஆனால் [illegible] புத்திரியை [illegible] புத்திரி [illegible] [illegible] மன்னன் [illegible] மணம் புரிந்து மகிழ்வதைக் கண்டு[illegible]

# பூங்கோதை

'மைதிலி'

நாதனின் நல்லடிகளைக் காதலோடு கருதி, மாதவனையே மணம்புரிவதெனத் துணிவுடன் இருந்து, அவனைப் பாமாலையாலும், பூமாலையாலும் பூஜித்து, பக்த கோடிகள் முன்னிலையில் ஸ்ரீரங்கநாதனை மணம் புரிந்து மேன்மையுற்றவள் கோதை. பூமி தேவியின் அம்சமாய் இவ்வுலகில் அவதரித்து நாராயணனையே நினைந்துருகி, அவன் மேலெழுந்த அடங்காக் காதலாலேற்பட்ட உணர்ச்சிகளை தேனெனத் தித்திக்கும் பாடல்களிலமைத்துப் பாடி பக்தியின் சிறப்பையும் சக்தியையும் யாவர்க்கும் உணர்த்தி, தமிழுலகிலும் ஓர் அரியமணியாய் விளங்குகிறாள் கோதை.

கோதையின் தந்தை விஷ்ணுசித்தர். மஹா பக்தர். கண்ணனின் கைங்கரியத்தில் ஈடுபட்டு அக்கைங்கரிய சாம்ராஜ்ஜியத்திற்கோர் அதிபனாய்த் திகழ்ந்தவர். தனக்கென்றோர் நந்தவனமமைத்து, அப்பூஞ்சோலையில் பெருகும், சுவை மிக்கத் தேன் நிறைந்த நறுமணமலர்களை மாலைகளாகப் புனைந்து ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்குச் சாற்றி வந்தார். வழக்கம்போல் ஒரு நாள் காலை அவர் மலர் கொய்ய வரும்போது, நந்தவனத்தில் ஒரு துளசி விருக்ஷத்தின் கீழ், மிகுந்த அழகுடன் கோடி சூரியப்ரகாசம் நிறைந்த ஓர் பெண் குழந்தையைக் கண்டார். திருத்துழாயின் கீழ் எழுந்த வந்திழையைக் கையில் எடுத்துக் கொண்டு சர்வலோக விதாதரனின் சன்னதி அடைந்து துதித்து நின்றார். உடனே அமலன் அசரீரியாக, "இக்குழந்தைக்குக் கோதை எனப் பெயரிட்டு வளர்த்து வாரும்" என்று கட்டளையிட்டான். கண் பெற்ற குருடனைப் போலும், திரவியமெடுத்த வறியனைப் போலும் மிகுந்த உவகையுடன் மயோனருளால் வந்த மகவைத் தன்னகத்திற் கெடுத்துச் சென்று அருமையாக வளர்க்கலானார் விஷ்ணுசித்தர்.

உழவு நிலத்தில் அகப்பட்ட வைதேஹியைப்போல் சோலையில் அகப்பட்ட கோதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து கன்னிப் பருவத்தை அடைந்தாள். இளம் பருவத்தில் தன் தந்தையோடு நந்தவனம் சேர்ந்து, செடிகளுக்கு நீர் மாறியும், மலர்களைக் கொய்தும், தந்தையார் மனமகிழ விளையாடினாள். கோதை மங்கைப் பருவமடைந்தவுடன் நந்தவனம் செல்வதையொழித்து அகத்திலேயே இருந்து, பிதா கொண்டு தரும் மலர்களை மாலையாகத் தொடுத்தாள். மாசற்ற இளநெஞ்சினளாம் கோதை அம்மாலைகளை அணிந்து பார்த்து நன்றாய் இருக்கிறதென்று அறிந்தபின் எடுத்து வைத்தாள். நடந்ததை அறியாத விஷ்ணுசித்தர் அம்மலர்களை எடுத்துப் போய் அர்ச்சகரிடமளித்தார். மலர்கள் என்றுமில்லாத புதிய பரிமளத்துடன் வீசின. அணங்கின் அழகிய கழுத்தினதும், அளகபாரத்தினதும் ஸ்பரிசம்பட்ட மலர்கள் மணமும் வனப்பும் பெற்று விளங்கியதில் அதிசயம் என்ன?

இவ்வாறு பல நாட்கள் நடந்து வந்தன. கோதையின் பக்தி விசேஷத்தையும், சூடிக்கொடுத்த அவளது அன்பின் திறத்தையும் அறிவிக்க எண்ணினார் பகவான். அன்று அர்ச்சகர் மாலை சாற்றும்போது ஒரு மாலையில் மயிரிருந்ததைக் கண்டு வியப்புற்றார். கண்ணன் திருமேனிக்கு அபசாரமேற்பட்டதே என்று வருந்தினார். மாலைகளை யெல்லாம் விஷ்ணுசித்தரிடம் திருப்பித் தந்துவிட்டார். ஆழ்வார் நடந்ததையெண்ணி மனங்கலங்கி, "மாலைகளை இவ்வாறு மாசுபடுத்தியவர் யாவர்?" என்று யோசனைசெய்து பார்த்தும் அவரால் நிச்சயமாக ஒன்றையும் முடிவுசெய்ய முடியாமல் போயிற்று.

மறுநாள் மலர்களைக்கொண்டு வைத்த பின் மறைந்து நின்று நடப்பதை அறிய விரும்பினார். கோதையும் வழக்கம் போலவே மலர்களைத் தொடுத்துத் தான் சூட்டிக் கொண்டாள். மிக்கக் கோபத்துடன் வெளிப் போந்தார் தந்தையார். "எல்லாமறிந்த நீயும் இவ்வாறு பகவானுக்கபசாரம் புரியலாமா? உடனே வேறு மலர்களைக் கொண்டு மாலையைத் தொடுப்பாய்" என்று கூறினார். புதிய மலர்களாலாய மாலைகள் அன்று கோயிலுக்கு அனுப்பப்பட்டன. ஆயின் கோதையின் அருளில்லாமையால் அவை நன்றாகப் பரிமளிக்கவில்லை.

அன்றைய இரவு விஷ்ணுசித்தர் அல்லது பெரியாழ்வார் கனவில் கண்ணன் தோன்றி, "பூமிதேவியே எனக்குப் பாமாலையும் பூமாலையும் சாற்ற உலகில் உமது புத்திரியாய் அவதரித்தாள். ஆகையால் அவளன்புடன் சூடிய இன்ப மலர்களே எனக்குகந்தவை. அவற்றையே எனக்குச் சாற்றுவீர்" என்று கூறி மறைந்தான். மற்ற யாவர் கனவிலும் இவ்வாறே திருமால் கூறி மறைய யாவரும் மிக்க வியப்புற்று பூங்கோதையின் மங்காவன்பைப் புகழ்ந்தனர். அந்நாள் தொடங்கி சூடிக்கொடுத்த சுடர்க்கொடி அணிந்து பார்த்த மாலைகளே பகவானுக்கர்ப்பிக்கப்பட்டன.

கோதை ஸ்ரீமந்நாராயணனது பாத கமலங்களையே சிந்தித்தவளாய் அவன் மேல் அளவற்ற காதல்கொண்டு அவனை எண்ணி எண்ணி மனம் உருகியும், நித்திரை நீங்கியும், மோஹம் மிகத் தன் னுணர்ச்சிகளை பாடல்கள் மூலமாய் வெளியிடலானாள்.

எல்லே! இளங்கிளியே
  இன்னம் உறங்குதியோ!
சில்லென்றழையேன் மின்!
  நங்கையீர்! போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள்
  பண்டே உன்வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே
  நானே தானாயிடுக
ஒல்லைநீ போதாய்
  உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ?
  போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானைக் கொன்றானை
  மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப்
  பாடேலோ ரெம்பாவாய்.

என்று பாவையின் மூலமாக மாயோனை மனமுருகி சிந்தித்தும்,

காயுடை நெல்லொடு கரும்பமைத்துக்
  கட்டியரிசி அவலமைத்து
வாயுடைமறையவர் மந்திரத்தால்
  மன்மதனே! உன்னை வணங்குகின்றேன்





தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
  திருக்கைகளால் என்னைத் தீண்டும்
    வண்ணம்
சாயுடை வயிறும் என் தடமுலையும்
  தாரணியில் தலைப்புகழ் தாக்கிற்றியே.

என்று காமனை அறைகூவித் தன்னைக் கண்ணன்பால் சேர்க்கும்படி கல்லுங் கரைந்துருகப் பாடினாள் கோதை.

தனித்தனி பத்து பாடல்களமைந்த 143 பாமாலைகளைச் செய்த கோதை ஸ்ரீரங்கநாதனைக் காண ஆர்வமிக்கவளாய்த் தன் தந்தையிடம் தெரிவிக்கத் தந்தையும் அவளைப் பொற் சிவிகையிலேற்றி தம் பந்து ஜனங்களுடன் ஸ்ரீரங்கம் சென்றார். தென் திருக்காவிரியை நெருங்கியவுடன் கோதை 'இனிமேல் நாம் நடந்து செல்ல வேண்டும்' என்றெண்ண, நங்கை நடந்தால் வருந்துவள் என்று இரங்கி நாயகன் கோதை சந்நிதியில் வந்து இருக்கத் திருவுள்ளங்கொள்ள, உடனே கோதையும் சந்நிதி சேர்ந்தாள். கோதை சிவிகையிலில்லாததை உணராத அவள் தந்தையும் மற்றவரும் கோயிலையடைந்து கோதையை அழைக்க அவளில்லாமை கண்டு, பெரியாழ்வார் ஐயன் சன்னதி சென்று முறையிட, கோதை வீற்றிருந்த இடத்தை ஐயன் காட்டினான். மனமகிழ்ந்த பெரியாழ்வார் "பெருமானே, கோதையைத் தாம் மணக்க வேண்டும். அக்கோலத்தை அடியேனும் மற்ற யாவரும் காண அருள் புரிய வேண்டும்" என்று வேண்டினார். விமலனும் பங்குனி உத்திரத்தில்தான் வில்லிபுத்தூருக்கு வந்து கோதையை மணம்புரிவதாகக் கூற, விஷ்ணுசித்தரும், தம் மகளுடன் தம்மூர் சென்று விவாகத்திற்குத் தயார் செய்தார். தேவேந்திரன், தேவர்கள், கந்தருவர், கின்னரர், கிம்புருடர், அயன், அரன் முதலியோர் சூழ ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்து, கோதையின் கிருஹம் சேர்ந்து, கோதையைப் பாணிக்ருஹணம் செய்து கொண்டார். அத்திருமணக் கோலத்தைத் தேவர்களே யன்றி, மனிதர்களும் கண்டு களித்தனர். அவர்கள் செய்த பாக்கியந்தானென்னே! மகேச்வரனின் மணக் கோலத்தைக் காணத் தவம் எத்தனை புரிந்திருக்க வேண்டும் அவர்கள்!

பக்தி மேலிட்டு, ஸ்ரீரங்கனையே சிந்தித்து, அவன் மேல் அடங்காக் காதல் கொண்டு அவனை மணம் புரிந்த கோதையின் சிறப்புதான் என்னே! உலகிலுள்ள பெண்டிர் யாவரும் கோதையின் வழியைப் பின்பற்ற வேண்டும். ஐயன் நமக்களித்துள்ள வாயினால் வம்பு பேசாமல் அவனது கல்யாண குணங்களைப் பாடித் துதித்து, அவனது மேனியைக் கண் குளிரத் தரிசித்து, மனமென்னும் கோயிலில் அவனை வைத்துப் பூஜிப்பவர்களுக்கு மிக மேலான பதவிகிட்டும் என்பதற்கையமொன்றுமில்லை.

அன்னவயல் புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—
    இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

# பரதநாட்டியம்

ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள்

பரத நாட்டியம் என்பது ஒரு புராதனமான உயர்ந்த கலை. அநேக ஆயிர வருஷங்களுக்கு முன் அதாவது மனிதன் தன்னுடைய மனதில் இருப்பதை வெளிக் காட்டுவதற்கு சரியான பாஷை ஏற்படாமலிருந்த காலத்தில் கைகளால் ஜாடைகள் செய்து வந்திருந்தான். பிறகு நாகரிகம் உண்டாகி பாஷை ஏற்பட்டது. இந்நாளிலும் மனிதர்கள் பேசும்பொழுது சிறிது கண்களையும், கழுத்து கைகள் முதலிய உறுப்புகளையும் தக்கபடி அசைப்பதை சாதாரணமாக நாம் காண்கின்றோம். அதிலும் மனதில் உணர்ச்சியோடு பேசும்பொழுது அவசியமாக மேற்சொன்ன உறுப்புகள் அசைவது நிச்சயம். அப்படி அசையாமலிருந்தால் அவனுடைய பேச்சில் ஒருவித ஸ்வாரஸ்யமும் இல்லாமல் மந்தமாக இருக்கிறது. இதனால் ஒருவனுடைய மனதில் இருக்கும் உணர்ச்சிக்கும் அவனுடைய அங்க அவயவங்கள் அசைந்து ஜாடைகள் காட்டுவதற்கும் நெருங்கின சம்பந்தம் இருக்கிறதென்று தெரிகிறதல்லவா?

பாஷையிலிருந்து இலக்கண இலக்கியம் உண்டாகிற மாதிரியும், மனிதர்களுடைய சாரீரத்திலிருந்து சங்கீதம் உண்டாகிற மாதிரியும், ஜாடைகளிலிருந்து நடிப்பு (action) உண்டாகின்றது. பரத நாட்டியத்தைப்பற்றி சுமார் ஐம்பது புத்தகங்கள் வரையில் நமது பெரியோர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. புராதனமான கோவில்களில் செதுக்கப்பட்டிருக்கும் சிலைகளிலிருந்தும் நாட்டியக்கலையின் மேன்மை விளங்குகின்றது. சிவபெருமான் தில்லையம்பதியில் நாட்டியமாடினதாக புராணங்கள் கூறுகின்றன. இக்கலையைப்பற்றி அறிந்துகொள்ள "நாட்டிய சாஸ்திரம்," "ஹஸ்தலக்ஷண தீபிகை," "அபிநய தர்ப்பணம்," "சிலப்பதிகாரம்" முக்கியமான புத்தகங்கள். ஹஸ்தலக்ஷணங்களைப் பற்றி அதிக விவரமாக இந்த வியாசத்தில் எழுதுவது சாத்தியமில்லை. பரத சாஸ்திரப்படி ஒரு ஹஸ்தத்திற்கு இருபத்தினான்கு முத்திரைகளும், இரண்டு ஹஸ்தங்களும் சேர்ந்து பதின்மூன்று முத்திரைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

பரத நாட்டியத்தில் இரண்டு பாகங்கள் உண்டு. நிருத்திய அதாவது நாட்டிய பாகமும், அபிநயபாகமும். ஸ்வரஜதிகளினால் அடவுகள் சேர்த்து தாளத்துக்கேற்றபடி நாட்டியம் ஆடுவது நிருத்திய பாகம். சிறந்த அர்த்த புஷ்டியுள்ள பதங்களைப்பாடிக் கொண்டு அவைகளுக்குத் தக்கபடி அபிநயம் பிடிப்பது அபிநய பாகம். இதற்கு முக்கியமாக முகத்தில் பலவித பாவங்கள் காண்பிக்க வேண்டிய தவசியம். ஸ்ருங்காரம், வீரம், காருண்யம், அத்புதம், ஹாஸ்யம், ரவுத்ரம், சாந்தம், பிபத்ஸம், பயம் ஆகிய ஒன்பதுவித உணர்ச்சிகளையும் முகத்தில் காண்பிக்கும் சாமர்த்தியம் உண்டாகவேண்டும். சிறந்த அர்த்தமுள்ள வாக்கியங்களை வாயினால் வாசகமாக சொல்லுவது சர்வ சாதாரணமாயும் உணர்ச்சியற்றதாகவும் இருக்கும். உதாரணமாக

"வாலிபமும் சேல்விழியும் வில்லுபுருவ
வடிவ நூலிடையும் மதிவதனமும்"

என்னும் வாக்கியத்தில் பொருந்தியுள்ள அர்த்தத்தை அபிநயம் செய்து காண்பித்தால் அந்த வாக்கியத்தில் உள்ள வர்ணனையை வெகு அழகாக சித்தரித்துக் காண்பிக்க முடியும். பார்ப்பவர்கள் மனதில் பதிந்து களிப்பை உண்டாக்கும்.

அநேக வருஷங்களாக நாட்டியக் கலையைக்கற்றுக்கொண்டு அதை அப்பியாசத்தில் வைத்திருந்தவர்கள் தேவதாசிகள். இவர்கள் நமது கோவில்களில் தொண்டு செய்யும் நோக்கத்துடன் கடவுள் சன்னிதானங்களில் பக்திரஸம் ததும்பும் பாடல்களைப்பாடி அபிநயம் செய்துவந்தார்கள். இக்கலையின் மேன்மையை நன்கு அறியாமலும் கலையை நன்றாகக்கற்றுக்கொள்ளாமலும் நாட்டியத்தை ஆடி வந்ததால் பொது ஜனங்களுக்கு இந்தக் கலையில் அதிருப்தி உண்டாகி கலை சீர்கேடான நிலைமையில் இருந்துவந்தது. ஆனால் சென்ற சுமார் ஏழுவருஷங்களாக நாட்டியக்கலை அபிவிருத்தி அடைந்து வருவதை நாம் காண்கிறோம். இக்கலைக்கு புத்துயிரளித்து இதனுடைய உயர்வை படித்தவர்களும் பொது ஜனங்களும் அறியும்படி செய்த கௌரவம் ஸ்ரீமான் இ. கிருஷ்ணய்யருக்கு உரியது. ஸங்கீதக் கழகம் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டதும் பரத நாட்டியக் கலையை நன்கு பயின்றிருந்த ஸ்ரீமான் இ. கிருஷ்ணய்யர் அதிக முயற்சி எடுத்துக்கொண்டு தன்னுடைய தீவிரப் பிரசாரத்தினால் கலையில் பொது ஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பை அகலச் செய்து அதில் அவா உண்டாகும்படி செய்தார். சமீபகாலமாக சென்னையிலும் மற்ற இடங்களிலும் பரத நாட்டியக் கச்சேரிகள் அடிக்கடி நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கலையில் அதிக தேர்ச்சி பெற்றவர்கள் வெகு சிலரே இருக்கின்றனர். இந்தக்கலை முக்கியமாக பெண்மணிகளுக்கே உரியது. சிறுமிகளுக்கு சங்கீதம் கற்றுக்கொடுக்கிறாப்போல் நாட்டியமும் கற்றுக் கொடுக்கலாம். பொது மக்கள் ஆதரவு மேன்மேலும் ஏற்படுமானால் இன்னும் அநேகர் இக்கலையை கற்றுக் கொள்ள முன்வருவார்கள் என்பது திண்ணம். ஸ்ரீமதி ருக்மணிதேவி பரத நாட்டியத்தைதான் நன்றாகக் கற்றுக்கொண்டதோடு நிற்காமல் இதில் பயிற்சி அளிக்க ஒரு டான்ஸ் வகுப்பையும் அடையாற்றில் ஏற்படுத்தியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. புத்துயிர் பெற்ற இந்தக்கலை வளர்ச்சிக்காக நமது சமூகத்தில் உள்ள பெரியோர்கள் உதவி புரிவார்களாக.

# கம்பிரக்காதல்

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை

இந்த வருணனை வரலாற்றில் காணும் கதாநாயகன் தேசத்துக்காக உயிர் துறந்தவன். ஆனால் இவனிடம் இவனுடைய தரும பத்தினிக்கிருந்த காதலைப் பற்றி நினைக்குங்கால், மனித உள்ளங் கொண்ட எவரும், திடுக்கிட்டு நடுங்கினாலும், பூரிப்பு அடையாமல் இருக்க முடியாது. மனித சமாஜத்தில் இப்பொழுதும், எப்பொழுதும், அற்பத்தனம் இருந்தது இருக்கும் என்று நெஞ்சு வறள வாதாடும் நாநயம் கொண்டவர்களுடைய இதயமும் இந்த உத்தமியின் காதலின் பயங்கரத்தைக் கண்டு கலங்கும் என்பது உறுதி. இத்தகைய உத்தமிகள் தாய்மார்களானால், அவர்களுடைய செல்வக் குழந்தைகள் வீரர்கள் ஆவார்கள் என்று சொல்லத் தடையுமுண்டோ? உலகம் புண்ணிய பூமி என்று சங்கு கொண்டு ஊத நமக்கு உரிமை உண்டு.

... ... ...

மொட்டு, வெடித்து மலரும் பருவத்திலிருந்தது. மலரின் இதழ்களின் வனப்பையும் மேன்மையையும் கண்டு மயங்கி, குயில் கீதம் பாடிற்று. தோட்டக்காரன் வந்தான், குயிலும் பறந்து ஓடிப்போயிற்று. தனது காதலியான மலரைச் சுற்றிச் சுற்றிக் 'கொண்டான்' அடித்தது. தோட்டக்காரனோ இரக்க மின்றி மலரைப் பறித்துப் பிய்த்து இதழ்களைத் தனியாயெடுத்துக் கூடையில் போட்டுக் கொண்டான். குயில் அலறிற்று, அழுதது. பயன் படவில்லை. உடனே குயில் மூர்ச்சை போட்டுத் தரையில் விழுந்தது; மலர்க் காதலி இருந்த இடத்திலேயே உயிர் நீத்தது.

... ... ...

கோடை. அவர் சிறையிலிருந்தார். நான் வீட்டிலேயே ஆறுமாத காலமாய், என் நல்ல காலத்தை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருந்தேன். முட்டாளாயிராதே என்று அவர்கள் சொல்லுவதுண்டு. அவன் விடுதலையடைந்து மீண்டும் உன்னிடம் வந்து சேருவான் என்றும் அவர்கள் சொல்லுவார்கள். அதற்கு நான், "அந்த நாள் எப்பொழுது விடியப் போகின்றது? அந்தச் சூரியன் என்று உதயமாகப் போகின்றான்? நடுவே நிற்கும் பாழான இரவு எப்போது மடியும்? அந்த நல்ல மணியின் ஓசை எப்பொழுது கேட்கும்?" என்பேன். இராசதானி நகரைப் பார்ப்பதற்கு எனக்குச் சமயம் வாய்த்தது. அவரை அங்கே சிறை வைத்திருந்தார்கள். அங்கே தான் விசாரணையும் நடந்து வந்தது. ஆகையால் நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். சிறையிலே அறைகள் பயங்கரமாயிருந்தன. கருங் கோடை மாதங்களில், இரவு பகலாய் அந்தப் பயங்கரமான குறுகிய அறைகளிலே தான் அவர் வைக்கப்பட்டிருந்தார். எனது காதலரைக் கண்டேன்.

"அவர்கள் உங்களுக்குக் கட்டில் கொடுத்திருக்கிறார்களா?" என்று என் கணவரைக் கேட்டேன்.



"என்ன! நீ பேதையாய் இருக்கின்றாயே! இங்கே கட்டில் எதற்காக?" என்றார்.

"பின்னர் நீங்கள் எவ்வாறு படுத்து உறங்குகின்றீர்கள்?" என்று நான் மிகப் பயந்து கேட்டேன்.

"தரையிலே ஒரு கம்பளியைப் போட்டு அதன்மேல் படுத்து உறங்குகின்றேன்" என்றார்.

பின்னர் நான் வீட்டுக்குத் திரும்பி வந்தேன். மொட்டை மாடியில் மற்றவர்கள் கட்டில்களில் படுத்துத் தூங்குகிறார்கள். வீட்டின் அடித்தாழ்வாரத்தின் அருகே இருக்கும் அறைக்குச் சென்று, ஒரு கம்பளியைத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டேன். கொசுக்கள் கீதம் பாட ஆரம்பித்தன. எனது காதுகளைச் சுற்றி அவைகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவைகள் எனக்கு உபதேசம் செய்வதாகத் தோன்றிற்று; "முட்டாளே! இந்தக் கோடையில் இத்தகைய அறையில் மயிர்க் கம்பளியில் எவருக்கேனும் தூக்கம் வருமா?" என்று என்னை அவைகள் கேட்பது போலத் தோன்றிற்று. நான் எழுந்து உட்கார்ந்தேன். ஜன்னல் துவாரங்களின் வழியே சந்திர கிரணங்கள் நுழைந்து கொண்டிருந்தன. நான் சந்திரனைப் பார்த்து, "ஏ! ஒளி வீசும் பொருளே! என்னறையை நீ ஒளி திகழச் செய்கின்றனையோ? அவரும் தம் அறையில் இராத்தூக்கம் இன்றி விழித்துக் கிடக்கின்றனரோ? அது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

திரும்பத் திரும்ப நான் சந்திரனைப் பார்த்தேன், ஆனால் மறுமொழியொன்றும் எனக்குக் கிடைக்கவில்லை, மீண்டும் நான் படுத்துக் கொண்டேன். கொசுக்கள் என்னைக் கடுமையாய்க் கடித்தன. மறுநாள் இரவிலும் அதே அறையில் அதே படுக்கையில் படுத்துக் கொண்டேன். மூன்றாம் இரவிலும் கொசுக்களின் தொல்லை ஒழிந்த பாடில்லை. அச்சமயம் எனது நாத்தி—கணவனுடைய சகோதரி—திடீரென்று என் முன்னே நின்றாள்.

"உன்னை நீயே கொன்று கொள்ளுவது நலம் என்று நீ தீர்மானம் கொண்டிருக்கிறாயா?" என்று என்னைக் கேட்டாள்.

"ஏன்? நான் செத்துக் கொண்டிருக்கிறேனா?" என்று கேட்டேன்.

"இவைகள் தாம் சாவு வருவதற்கு நிலையான சாதனங்கள்."

"இவ்வாறு தூங்குபவர்கள்..............."

"ஆம், ஆம் அவர்கள் சாவார்கள்."

என் கண்கள் திறந்தன. நீர் கண்களில் சுரந்தது. "அவரே சிறையில் இவ்வாறு படுத்துறங்கும் பொழுது நானும் அவரைப் போலப் படுத்துத் தூங்கக் கூடாதா?" என்றேன்.

மறுபடியும் எனக்கு அனுமதி கிடைத்தது, இராசதானி நகருக்குச் சென்று அவரைப் பார்த்தேன். என் கணவனையொத்த கைதிகளின் தற்கால நிலைமையைப்பற்றி வினவினேன். "நாங்கள் நாளுக்கு ஒரு தடவைதான் சாப்பிடுகிறோம்" என்றார். "அவர்கள் சாப்பிடும் ரொட்டி எப்படியிருக்கும்" என்று கேட்டேன். அவர் ரொட்டியின் ஒரு துளியை எடுத்து என் கையில் கொடுத்தார். அதை

என்னுடன் கூடக்கொண்டு வந்தேன். அதிலே கடலை இருந்தது; கோதுமை இருந்தது; இன்னும் பலவித தானியங்களும் சரக்குகளும் இருந்தன. நான் வீட்டுக்குத் திரும்பி வந்தேன். மேற்சொன்ன சரக்குகள் யாவையும் சேர்த்து ஒரு ரொட்டி செய்து கொண்டேன். ஒரு வேளை மட்டும் சாப்பிட்டேன். வேறு உணவு தண்ணீர்தான். இவ்வாறு பல மாதங்கள் கழிந்தன. இடைவிடாமல் விசாரணை நடந்துகொண்டு வந்தது. எனது அறையில் உட்கார்ந்துகொண்டு அவரைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். வெளியிலிருந்து அழுகைச் சத்தம் என் காதில் விழுந்தது. எனது உள்ளங் குதிக்கத் தலைப்பட்டது. எனது நெற்றி முத்து முத்தாய் வியர்த்துக் கொண்டிருந்தது. என் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு நான் வெளியே வந்தேன். எனது கணவருடைய பெயரை எனது நாத்தி திருப்பவுஞ் சொல்லி, "மரணதண்டனை! மரணதண்டனை!" என்று உரத்துச் சொன்னாள்.

மீண்டும் நான் இராசதானிக்குச் சென்றேன். கடைசியாக அவரை அதே சிறையில் கண்டேன். அந்தச் சிறையிலேதான் இளைஞர்கள் தங்கள் உயிர்களை இழக்கின்றனர்; அங்கேதான், மெல்லிய, மிருதுவான மலர்களை யொத்த உயிர்கள் வாட்டமடைந்து அழிகின்றன. எனது நாயகனைச் சந்தித்தேன். "சில சொற்கள் கலந்து கொள்வோம்" என எனது உள்ளம் கூவிற்று. ஆனால் அதற்கு ஏற்ற சக்தி எங்கள் இருவருக்கும் இல்லை என எனது உதடுகள் கூறிக்கொண்டிருந்தன. ஆமாம்; அவருடைய உதடுகள் அசைந்தன. அவருடைய மெல்லிய குரல் வெளி வந்தது. "கண்மணியே! உலகம் சாசுவதம் அல்ல. இங்கு வந்தவன் திரும்பவும் போய்த் தீரவேண்டும். எவரும் மற்றவர் துணையை நாடமுடியாது. எனது தேசத்துக்காக எனது உயிரை விடுகிறேன் என்பதைத் தெரிந்து கொண்டு, உன்னைப் பாக்கியவதி என்று எண்ணிக்கொள்" என்றார் அவர்.

எனது காதுகள் இம்மொழிகளைக் கேட்டன; ஆனால் கண்களிலிருந்து நீர் வெள்ளமாய்ப் பெருகிக் கன்னங்களில் வழிந்தது. திரும்பத் திரும்ப நீரின் ஓட்டத்தைத் தடுத்து எனது நாயகருடைய முகத்தின் முழு தரிசனத்தைக் கடைசியாகக் காணமுயன்றேன். ஆனால் அந்த முயற்சி பலிக்காமல் போய்விட்டது.

மறுநாள் அவருடைய உடலைக் கொளுத்துவதற்கு வேண்டிய சாமான்கள் தயாராய் இருந்தன. "இதுதான் அவருடைய ஆத்மாவுக்குக் கடைசிக் கிரியை" என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். "அப்படியானால் அவருடன் கலந்து கொள்ள இது தான் எனக்கு ஏற்ற தருணம்" என்று எனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டேன். ஆனால் அவர் உடல் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள்.

மறுநாள் என்ன நடந்தது என்று என்னால் சொல்ல முடியாது. சென்ற பதினைந்து நாட்களாக நான் பட்டினி கிடந்து பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய மனோரதம் பூர்த்தியாகும் நாள் நெருங்கி விட்டது.




புத்த ஜனனம்



‘‘பாப்பா, போறு, வார்த்துக்கோ’’



இதைச் சொல்லி விட்டு, அந்த உத்தமி மௌனமாய் இருந்து விட்டாள். இந்தத் துன்ப மயமான வரலாற்றை அவள் சொல்லி வரும்பொழுது எனக்கு மயிர்க்குச் செறிந்தது. எனது கண்களினின்றும் நீர் பெருகிற்று. எனது இதயத்தில் வலி தோன்றிற்று. பின்னர் அந்த உத்தமி ஒரு பருக்கையாவது சாப்பிடவில்லை. நீர் ஒரு துளியாவது குடிக்கவில்லை. இவ்வாறு பதினெட்டாம் நாள் முடிந்தது. அதே இடத்தில், அதே நிலையில் உட்கார்ந்து கொண்டு, தனது தியானத்துக்கு மூர்த்தியான தன் கணவனைப் பற்றித் தியானம் செய்து கொண்டிருந்தாள். கடைசியாக அவளுடைய நாள் வந்தது. வானம் களங்கமற்று விளங்கிற்று. சூரியன் திகழும் ஒளியுடன் வெளிவந்து கொண்டிருந்தான். ஜனங்கள் தங்கள் தொழிலில் அமர்ந்து நின்றனர். அவள் தன் இடத்தை விட்டுப் பெயர்ந்து நின்றாள். தானே சுத்த ஜலம் கொண்டு வந்தாள். நீராடினாள், சுத்தமான உடை தரித்துக் கொண்டாள். பழைய இடத்தில் போய்ப் படுத்துக் கொண்டாள். “எனது அருமையான நாயகரே! என்னை வெகு நாட்களாக சோதித்து விட்டீர்கள், இன்றைக்கு நான் உங்களை விடப் போவதில்லை. உங்களைப் பிரிந்து இனிக் கணமும் என்னால் இருக்க முடியாது” என்றாள். இதைச் சொன்னதும், அவளுடைய கடைசி மூச்சு—அந்தக் கம்பீரக் காதலின் முடிவான காற்று—உடலிலிருந்து வெளியேறி விட்டது.




திரு. ஸி. எஸ். இராமன், எம்.ஏ., எல்.டி.

“கிரஹலக்ஷ்மி” வாசகர்களுக்கு முகலாய சக்ரவர்த்தி ஜஹாங்கீருடைய அழகிய மனைவி நூர்ஜஹானைப் பற்றிய விஷயம் தெரிந்திருக்கலாம். இருந்தாலும் சில புஸ்தகங்களிலிருந்து நான் அறிந்த உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு சரித்திர சம்பந்தமான அந்த வனிதா ஜோதியின் கதையை வரைகிறேன்.

பிரசித்தி பெற்ற நூர்ஜஹான் பாரசீகத்தில் பிறந்தவள். அவள் பிறந்த பொழுது அவளுடைய பெற்றோர்கள் வறுமைப் பிணியில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தமையால் தீர்க்க யோசனையின்மேல் வேறு தேசத்திற்குப் போகவேண்டும் என்று முடிவு செய்தனர். அவளுடைய தகப்பனார் மிர்சாகியாஸ் தமது மனைவியோடும், குழந்தை மிகிருனிசா (நூர்ஜஹானின் உண்மைப் பெயர்)வோடும் இந்தியாவுக்குச் சென்றார். அங்கு முகலாய சக்ரவர்த்தி அக்பருடைய சமஸ்தானத்தில் வேலைக்கு அமர்ந்தார். அக்பருடைய அரண்மனைக்கு மிகிருனிசா அடிக்கடி போய் வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கையில், சக்ரவர்த்தியினுடைய புதல்வர் ஸலீம் இளவரசர் அப்பேரழகு பொருந்திய வனிதையைக் கண்ணுற்றுக் கடுங்காதல் கொண்டார். அதை அறிந்திட்ட அக்பர் அப்பெண்மணியை ஷேர் ஆப்கன் என்ற வீரனுக்கு மணம் புரிவித்து மனச்சாந்தி பெற்றார். அதைக்கண்டு காதல் தீ அழியாமல் இருந்த இளவரசர் ஸலீம் தாம் ஜஹாங்கீர் என்ற பட்டப் பெயருடன் முகலாய சக்ரவர்த்தியானபோது மிகிருனிசாவை எங்ஙனமாவது தமது மனைவியாகச் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைகொண்டார். வங்காளத்தில் பர்த்வான் ஜாகீருக்கு அதிபதியான ஷேர் ஆப்கனைக் கொன்றுவிடுமாறு ஜஹாங்கீர் தமது நண்பனை குத்புதீன் கோகா என்பவனை அனுப்பினார். கோகாவும் ஷேர் ஆப்கனும் சண்டை செய்து மடிந்து போனார்கள். அதன் பிறகு ஷேர் ஆப்கனுடைய விதவையைச் சிறை செய்து முகலாய சக்ரவர்த்தியின் தலை நகருக்கு வேறு மனிதர்கள் கொண்டு போனார்கள். முதலில் தனது புருஷனைக் கொன்ற சக்ரவர்த்தியின் மீது மிகிருனிசா மிக்க கோபம் கொண்டு, நான்கு வருஷங்கள் வரை தனிமையில் இருந்து, பின்னர் முகலாய மகுடாதிபதியைப் பதியாக்கிக் கொண்டனள்.



அண்ணாமலை சர்வகலாசாலையில் இந்து தேச சரித்திர விற்பனராகச் சிறந்து விளங்கும் ராவ்சாகிப் ஸி. எஸ். ஸ்ரீனிவாசாசாரியவர்கள் தமது “இந்தியாவில் முஹம்மதியர் ஆட்சி” என்ற ஆங்கில நூலில் சில விஷயங்களைச் சொல்லுகிறார்கள். “அக்பருடைய ஜீவிய காலத்தில் மிகிருனிசாமீது இளவரசர் ஸலீம் காதல் கொள்ளவில்லை. அவளுடைய கணவன் ஷேர் ஆப்கனைக் காதல் பொருட்டுக் கொல்லவில்லை. வங்காள கவர்னர் பர்த்வான் ஜாகீர்தாருடைய ராஜத்துரோக சிந்தனையை யறிந்து, அவனோடு சண்டை செய்து, ஷேர் ஆப்கனைக் கொன்று விட்டான். முகலாய சக்ரவர்த்தி அரண்மனையில் இருந்த ஸ்திரீகள் ஒரு வேடிக்கையான கடை வீதியை ஆரம்பித்த பொழுது அங்கு விஜயம் செய்திருந்த மிகிருனிசாவைக் கண்டு, ஜஹாங்கீர் காதல் கொண்டார். இதுதான் உண்மை. ஏனைய விஷயம் சரித்திராசிரியர்களுடைய மனப்போக்கின்படி எழுதப்பட்டதாகும்” என்று திரு. ஸ்ரீனிவாசாசாரியார் சொல்லுகிறார்.

பெயட்ரோ டெல்லா வெல்லி எனும் ஐரோப்பிய பிரயாணி நூர்ஜஹானைப் பற்றிச் சொல்லுகையில், “நூர்மகால் (நூர்ஜஹான்) ஜஹாங்கீருக்கு பிராணன் போன்றவள். எல்லா ஸ்திரீகளைக் காட்டிலும் சக்ரவர்த்தி அவளை நேசிக்கிறார். இந்நாள் கூட அவளுடைய புத்திமதியின்படி ராஜாங்கம் நடக்கிறது. அவள் அரண்மனையின் ஜோதி (நூர்மகால்)........ என்பதில் சந்தேகமில்லை,” என்று கூறியிருக்கிறார்.

ஜஹாங்கீர் 1611-ம் ஆண்டில், நாற்பத்தினான்கு வயதாகியும் அழகும் யௌவனமும் சிறிதளவும் குலைந்து போகாத மிகிருனிசாவைக் கலியாணம் செய்து கொண்டார்.

சரித்திரம் எழுதுபவர்கள் நூர்ஜஹானுடைய குணாதிசயங்களைப் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். உலகத்திற்கே அதிசயம் என்று சொல்லக்கூடிய வகையில் உருவிலும் திருவிலும் நிகரற்றவள். சிறந்த புத்தி கொண்டவள். பாரசீக பாஷையில் மேதாவி. சகல கலைகளையும் அறிந்தவள். வேட்டையாடுதல், குறிதவறாமல் சுடுதல், குதிரைச் சவாரி செய்தல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்றவள். சதா புதிய உடைகளைக் கண்டுபிடித்து அணிந்து கொள்வதிலும் ஆபரணங்களைப் பூணுதலிலும் ஆர்வம் கொண்டவள். தர்ம சிந்தனையும் தயாள குணமும் கொண்டவள். அரசியல் விஷயங்களை நன்காராய்ந்தவள்.

அத்தகைய ஸ்திரீயை மனைவியாக்கிக் கொண்ட ஜஹாங்கீர் தமது நாணயங்களில் அவளுடைய உருவத்தையும் சேர்த்து வெளியிட்டார். “முஹம்மதிய நாணயத்தில் இச் செய்கை அபூர்வமானதும் ஆச்சரியமானதும் ஆகும்” என்று அயல் நாட்டு ஆசிரியர் மிஸ்டர் ஸ்டேன்லிலேன் பூல் சொல்கிறார். சடுதியில் சகல அரசியல் விஷயங்களிலும் முகலாய சக்ரவர்த்தி குறுக்கிடுவதை நிறுத்தி, எல்லாவற்றையும் தமது அருமை மனையாட்டி கவனித்துக் கொள்ளுமாறு விட்டு விட்டார். தமக்குச் சாப்பிடுவதற்கு கொஞ்சம் இறைச்சியும் ஒயினும் இருந்தால் போதும் என்று சொல்லுவதற்கும் தயங்கவில்லை. நூர்ஜஹான் சர்வ ஜாக்கிரதையோடும் ராஜாங்கத்தை நடத்தி எல்லோ

ரும் 'சபாஷ்' என்று சொல்லுமாறு செய்து கொண்டாள். அவளுடைய விரோதிகள் மட்டும் அவ்வாறு சொல்லவில்லை. தனது கணவன் அதிகமாகக் குடிப்பதைக் குறைத்து விடுவதற்கு இராணி நூர்ஜஹான் காரணமாக விளங்கினாள்.

நூர்ஜஹான் இராணியாக சர்வாதிகாரம் செலுத்துகையில் அவளுடைய சகோதரன் அஸாப்கான் மிக்க உதவியாக இருந்தான். நற்குணவதியாக விளங்கிய அந்த அழகிய ஸ்திரீ தனது சுற்றத்தார்களுடைய சுய நலத்தையும் தனது செல்வாக்கையும் விருத்தியாக்கிக் கொள்ளுவதில் மிக்க சிரமம் எடுத்துக் கொண்டாள். சில தினங்களுக்குப்பின் தனக்கும் ஷெர்கானுக்கும் பிறந்த பெண்ணை முகலாய சக்ரவர்த்தி ஜஹாங்கீருடைய கடைசி குமாரன் ஷாரியர் எனும் அரசிளங் குமாரனுக்கு விவாகம் செய்து வைத்தாள். அவனையே ஜஹாங்கீருக்குப்பின் பட்டத்திற்கு வருமாறு பிரயத்தனப்பட்டாள்.

அதுவரையிலும் நூர்ஜஹான்மீது நம்பிக்கை வைத்திருந்த ஜஹாங்கீருடைய குமாரன் குர்ரம் அல்லது ஷாஜஹான் அவளுக்கு விரோதமாகக் கலகம் செய்யவாரம்பித்தான். அஸாப்கான் அவனுக்குத் தனது குமாரி மும்தாஜ்பீகம் எனும் ரதிதேவியைக் கலியாணம் செய்து கொடுத்திருந்தமையால் மாப்பிள்ளை பக்கம் சேர்ந்து கொள்ள நேரிட்டது. ஜஹாங்கீருக்கு ஷாஜஹான் மீதும் ஷாரியர் மீதும் பிரேமை இல்லாதிருந்தமையால் தமது மூன்றாவது குமாரன் பார்விஸ் எனும் குடிகாரனுக்கு ஸிம்மாசனத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இதனால் உள் நாட்டுக்கலகம் ஏற்பட்டது. ஷாஜஹான் போருக்கு முற்பட்டு விட்டான்.

கலகம் செய்து நூர்ஜஹானோடும் அவளுடைய புருஷனோடும் சண்டை செய்து தோல்வியடைந்தான். 1624-ம் ஆண்டில் பீகாரிலும் வங்காளத்திலும் ராஜ்யபாரம் புரியத்தலைப்பட்டான். அதுவும் சரியாக முடியவில்லை. கடைசியில் தனது தந்தையின் பரம விரோதியான மாலிக் ஆம்பர் எனும் தக்காணத்து வீரனோடு சேர்ந்து மறுமுறையும் கலகம் செய்தான். ஜஹாங்கீர் தமது குமாரனைத் தோற்கடித்து மன்னிப்பு கேட்குமாறு செய்து விட்டார். இத்தனை ரகளையிலும் அஸாப்கான் ரகசியமாக ஷாஜஹானுக்கு உதவி புரிந்து, வெளிக்கு சக்ரவர்த்திக்கும் தனது சகோதரிக்கும் நேசப்பான்மை கொண்டவன் போல் நடித்தான்.

முகலாய சாம்ராஜ்யத்தின் வடமேற்கு எல்லையில் இருந்த காண்டஹார் பிரதேசத்தைப் பாரசீகர்கள் கைப்பற்றிக் கொள்ள ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். யுத்தத்தில் சென்று மாளட்டும் என்று கருதிய நூர்ஜஹான் ஷாஜஹானைக் காண்டஹாருக்குப் போகுமாறு சக்ரவர்த்தி மூலியமாக உத்திரவிட்டாள். தான் யுத்தத்திற்குச் சென்று விட்டால் ஏதாவது சூட்சி செய்து தன்னைக் கொன்று விடலாகும் என்று நினைத்த ஷாஜஹான் போக மறுத்து விட்டான். அதைக்கேட்டு கோபமடைந்த அரசர் அவனுடைய பட்டம், விருதுகள் யாவற்றையும் நீக்கி, பார்விஸை பட்டத்திற்குரியவனாகச் செய்து விட்டார். பரவும்





வல்லமைமிக்க நூர்ஜஹானுடைய ஆலோசனைமேல் நடந்ததாகும்.

தளகர்த்தன் மகபத்கானைத் தனது கைக்குள் போட்டுக்கொள்ள விரும்பிய நூர்ஜஹான் அதில் ஜெயிக்கவில்லை. அவன் சக்ரவர்த்தியையும் நூர்ஜஹானையும் பிரித்து, ஜஹாங்கீரைச் சிறைசெய்து விட்டான். தைரியத்தோடு நதியொன்றை யானைமீது கடந்து சென்று தப்பித்துக் கொண்டாள் நூர். பின்பு தனது கணவனோடு அவளும் சிறையில் இருந்தாள். கடைசியில் சில உத்தியோகஸ்தர்களுடைய உதவியைப் பெற்றுக்கொண்டாள். ஜஹாங்கீரையும் விடுதலை செய்தாள். சேனா வீரர்கள் இராணியின் கட்டளையை ஏற்றுக்கொண்டதால் மகபத்கான் ஷாஜஹானிடம் ஓடி விட்டான்.

1627ம் ஆண்டில் அக்டோபர் மாதத்தில் காஷ்மீரத்திற்கு தேகாரோக்கியத்திற்காகச் சென்ற முகலாய சக்ரவர்த்தி அங்கே இறந்து போனார். அவர் மரித்தது நூர்ஜஹானுக்கு வலதுகை போனது போலாகி விட்டதால் இனிமேல் ஷாஜஹானுக்கு விரோதமாக நடப்பது ஜெயமளிக்காது என்று தெரிந்து கொண்டாள். அவளுடைய மருமகன் ஷாரியர் கொலை செய்யப்பட்டான்.

ஷாஜஹான் சக்ரவர்த்தியானதும் பிரபலமான இராணி நூர்ஜஹான் ஏகாந்தமான வாழ்க்கையை மேற்கொண்டனள். தனது இறந்துபோன சக்ரவர்த்தி புருஷரின் பொருட்டு விசனங்கொண்டு வெள்ளை உடையை மேற்கொண்டாள். ஆடம்பர வாழ்வை நீத்தாள். சக்ரவர்த்தி ஷாஜஹான் நூர்ஜஹான் மீது மரியாதை காண்பித்து, அவளுக்கு ஜீவியகாலம் வரை உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தான். 1646-ம் ஆண்டில் நூர்ஜஹான் காலகதி அடைந்தாள். லாகூரில் ஜகாங்கீருடைய கல்லறையில் நூர்ஜஹானும் தக்க மரியாதைகளோடு புதைக்கப்பட்டாள்.

நூர்ஜஹான் முகலாயர் காலத்தில் ஒரு பெரிய அழகுத் தெய்வமாகவும் பிரதம அரசியாகவும் விளங்கியதற்குக் காரணம் அன்னவளுடைய புத்தி தீட்சண்யமும் சாமர்த்தியமும் முக்கியமாகும். தனது கணவன் ஜஹாங்கீருக்கு யாதொரு கெட்டபெயரும் வராமல் பார்த்துக் கொண்டாள். தனது மருமகன் அரசனாக வேண்டும் என்று நினைத்து ஷாஜஹானோடு சண்டை புரிந்தது சுயநலம் என்று சிலர் சொல்லலாகும். மனித சுபாவம் என்று சொல்லிவிட்டால் நூர்ஜஹான் அப்படிச் செய்தது தவறாகாது. கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற அந்த நாகரிக ரமணியை இந்தியர்கள் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள்.

# தேவமாதல்லவா?

## ஸ்ரீமதி எம். சி. சிங்காரம்மாள்

"ஏண்டீ' எப்பொழுது பார்த்தாலும் இங்கிபுட்டியும், பேனாவும் பேப்பரையும் வைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறாயே? நீ என்ன, துரைசானியா! ஆனா, ஊனா, தெரிந்து விட்டால் அதற்கு இவ்வளவு ஆடம்பரமா? நன்றாய் இருக்கிறது உன் நடத்தை! சற்றாவது பெரியவான் என்ற பயமிருக்கா? வந்து வருஷமாகல்லே! அதுக்குள்ளே என்ன தைர்யம்டீ. உங்கப்பன் உனக்குக் கொடுத்த சீர் இங்கிபுட்டியும் பேனாவும், பேப்பருந்தான். வெக்கக்கேடு! நாலு யெழுத்துத் தெரிஞ்சா இப்படியா தலைகால் தெரியாமல் ஆடுவா! உன்னோடு மாறடிக்க யாரால் முடியும்?" என்று கோதையம்மாள் தன் மருமகளை (வஸந்தா) வழக்கம்போல் வசை மொழிகளால் வாழ்த்தினாள்.

வஸந்தா மாமியின் வசை மொழிகளை சிரமேற்கொண்டு, மிகப்பணிவுடன் தன் மாமியை நோக்கி "அம்மா! எதுக்கம்மா இவ்வளவு கோபம்! நான் உங்களுக்கிஷ்டமில்லாத காரியத்தைச் செய்யமாட்டேன். நான் எவ்வளவு சொல்லியும் மாமா (மாமனார்) அவர்கள் என்னை எழுதச் சொல்லி ரொம்ப கட்டாயப்படுத்தினதால் எழுத உட்கார்ந்தேன். தவிர வீட்டு வேலைகளெல்லாம் முடித்து வெறுமனே இருப்பதற்கு பதில் எழுதலாமென்று தோன்றியது. இப்பொழுதும் என்ன? இனிமேல் நான் ஒரு வரிகூட எழுதுவதில்லை. உங்கள் விருப்பமே, என் விருப்பம். என் எண்ணம் எல்லார் வீட்டு மாமி மருமகளையும் போலிராமல் தாயும் பெண்ணுமிருக்கிறாப்போல், நானும் நீங்களும் ஒத்து வாழவேண்டுமென்பதே. என் பேரில் தயைசெய்து என்னை மன்னியுங்கள்" என்று கூறினாள்.

இவர்கள் சம்பாஷணையை வெளியில் நின்று கேட்டுக்கொண்டிருந்த ரங்கையருக்கு வந்தது கோபம். "என்ன, என்ன? பெருத்த தர்க்கம் நடக்கிறதே! (இங்கிபுட்டி பேப்பரைப் பார்த்து) ஓகோ! தெரிந்து விட்டது. (கோதையம்மாவை நோக்கி) "அடியே! உனக்கென்ன புத்தியிருக்கா! இல்லையா! உன் தலையை சுத்த களிமண்ணால் கூட பிரம்மன் செய்யவில்லை போலிருக்கிறது. ஜாம்பவானாட்டம் வயசு முழுங்கியிருக்கா. இவ்விஷயத்துக்கெல்லாம் நீ வராதே என்று இதோடு நூறுதரம் சொல்லியிருக்கேன். சற்றாவது பயமிருக்கா, பார். நீயும் தான் எழுதேன் அவள் எழுதறாளே என்று பொறாமையிருந்தால்" என்றார்.

கோதையம்மாள்: போரும்! போரும்! அதான் குறைச்சலாயிருக்கு இருக்கிற அழகுக்கு. எழுதி எழுதி உங்க நாட்டுப் பெண் நல்ல பேரெடுத்திருக்கிறாளே. எனக்கு அந்தப் பாழாய்ப்போன எழுத்தும் வேண்டாம் அந்தப் பேரும் வேண்டாம். சிவனே என்று காலத்தைக் கழிக்கிறேன். இந்தச் சிறுக்கியைப்பற்றி ஊராரெல்லாம் என்னவெல்லாம் வம்பளக்கிறார்கள். அதெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? என்னெ அடக்கவரேறே, இத்தனை நாள் வாழ்ந்தும் ஒன்றுமில்லை. இப்பொழுதுதான் வீட்டில் எல்லாம் தலைகீழாயிருக்கு. நாட்டுப் பெண் ஏதாவது தலைக்குத் தேய்த்துவிட்டாளாக்கும்!

ரங்கையர்: (கண்ணில் நெருப்புப் பறக்க) ஏது, ஏது, உனக்கு நல்லகாலமில்லை. வரவர மரியாதை வேரோடு அற்றுப் போய்விட்டது. ஊராராம், உற்றாராம் அவர்கள் சொல்வதை கேட்டுக்கொண்டு இந்த ஆட்டமெல்லாம் ஆடுகிறாயாக்கும். ஊரார் வீட்டுக்கே போ! ஊரார் பவிஷை அவிழ்த்து விட்டால் தெரியும். உன் ஆப்த சிநேகிதி அம்புஜம் அடுப்பங்கரையிலேயே அக்ரமங்கள் செய்கிறாள்.



நமக்கு நியாயம் சொல்ல வந்து விட்டாளாக்கும். இன்னொருதரம் ஊரார் என்ற பேச்செடுக்கப் போகிறாய், பத்திரம்.

கோதையம்மாள்: மத்தியான வேளையிலே சந்தை (திருவாய் மொழி) சொல்லிக்கொண்டு இலை தைப்பதை விட்டு விட்டு, எழவு படிப்பு என்ன வேண்டியிருக்கு? நியாயத்தைச் சொல்ல வந்தால் இவ்வளவு ஆத்திரமா, நன்னாயிருக்கு.

ரங்கைய்யர்: சந்தையு மாச்சு, இலையு மாச்சு வாயை மூடிக்கொண்டு போ, உளராதே. உன் நாட்டுப் பெண்ணுக்கு பணம் வந்தால் அதை மூட்டை கட்டிக் கொள்கிறாயா? அப்பொழுது உன் நாட்டுப் பெண் நல்லவள் தான்?

கோதை: இந்த சரஸ்வதி (வஸந்தாவைக் குறித்து)யின் வாக்சாதுர்யத்துக்கு மகிழ்ந்து பணம் கொடுத்து விடுவார்கள். போதும், போதும், உங்கள் பெருமை. எங்காவது மிளகாய் பொடி இடிப்பதோ, தோசை, இட்டிலிக்கு மாவு அறைப்பதோ, அப்பளம் வடம் இட்டு விற்பதோ இவைகளில் எதுவாயினும் செய்யலாம். அதற்கெல்லாம் இந்த சிறுக்கிக்கு உடம்பு வணங்க வேண்டுமே, இப்போ இருக்கிற கஷ்டத்துக்கு எதுவாயினும் செய்யலாம்.

ரங்கைய்யர்: 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை' என்கிறாப்போல் உனக்கு படிப்பு கிடிப்பு தெரிந்திருந்தால் இப்படி ஏன் உளறுவாய்? மேலும் குலத்தளவேயாகுங் குணம் என்பதற்குத் தகுந்தாற்போல் உங்கப்பன், தோசை, வடை விற்பவன். உனக்கு அந்த புத்தி தோன்றுவதில் ஆச்சரியமேயில்லை.

ஏதோ பூர்வ ஜன்ம புண்ணியத்தால் சரஸ்வதியவதாரம் போல் நமக்கு நாட்டுப் பெண் கிடைத்திருக்கிறாளே. அவளுடன் சுகமாக இருப்பதற்கு நீ கொடுத்து வைக்கவில்லை. எப்போதும் ரகளை பண்ணிக்கொண்டும் அயலாருடன் வீட்டு விஷயங்களை வெளிப்படுத்தி வம்பளந்து கொண்டிருப்பதே உன் வழக்கமாய் விட்டது.

என் உயிருள்ள வரையில் உன்னையாவது உன் நாட்டுப் பெண்ணையாவது அயலார் வீட்டில் வேலை செய்ய விடமாட்டேன். இது கண்டிப்பு. மறுபடியும் வசந்தா எழுதுவதைப் பற்றி ஏதாவது வாயெடுத்தாயோ நான் உன்னை இலேசில் விடமாட்டேன் தெரியுமா? ஜாக்கிரதை" என்று வெகு கண்டிப்பாய் சொன்னார்.

கோதையம்மாளுக்கு கோபம் உச்ச நிலையையடைந்தது. "நான் எங்காவது தொலைஞ்சு போறேன்" என்று வீட்டை விட்டு எங்கேயோ சென்றாள்.

... ... ...

வசந்தா மிகுந்த பயத்துடனும் அடக்க ஒடுக்கத்துடனும் தன் வயோதிக மாமனாருக்கு நமஸ்கரித்து, "இனிமேல் நான் ஒரு எழுத்துக்கூட எழுதாமலிருக்கும்படி எனக்குத் தாங்கள் உத்திரவு கொடுக்க வேண்டும்" என்று பகர்ந்தாள்.

ரங்கையர்: என்ன வசந்தா? நீ கூட பைத்தியக்காரியாயிருக்கிறாயே? உன்மேல் யார் என்ன சொன்ன போதிலும் சரி நான் அதை லக்ஷியம் செய்யமாட்டேன். மேலும் உன்னை இழிவு படுத்த வேண்டுமென்றா சொல்லுகிறேன்! உன் நன்மையை யுத்தேசித்தே உன்னை உற்சாகப்படுத்தி எழுதச் சொல்வது. நமக்கும் வருமானம் போதாதே. கட்டுரைகள் ஏதாவது எழுதிப்பார்ப்போமென்றுதான். இதில் ஒரு தப்பிதமில்லையே? ஏதோ உன் மாமியார் ஊராரோடு சேர்ந்து கொண்டு தலைகீழாய் குதிக்கிறாள். ஊரார் செய்யும் அட்டூழியங்களைக் காதால் கேட்கக்கூடுமா? நாம் செய்யப்போகும் காரியத்தால் தேசத்துக்கும் நன்மை, வீட்டுக்கும் சம்பத்து. ஆகையால் நீ கண்டிப்பாய் எழுத வேண்டியது.

வசந்தா : (தலை குனிந்தவாறு) அம்மாவுக்கும் எனக்கும் இதனால் மனஸ்தாபமாகிறதே என்பதுதான் எனக்கு. வேறொன்றுமில்லை.

ரங்கையயர் : அம்மா கிடக்கட்டும். என் பேச்சைக் கேட்க வேண்டுமென்றால் நான் சொல்லியபடி செய்ய வேண்டும். அவளுக்கென்ன தெரியும். என்னமோ சொல்வார் பேச்சைக் கேட்டு உளறுகிறாள். கையில் நாலு காசு விழுந்தால் வாய் திறக்கமாட்டாள். கப், சிப் பென்று வாய் மூடிக்கொண்டு விடுவாள். இது உனக்குத் தெரியாது.

... ... ...

வீட்டில் நடந்த விஷயம் வசந்தாவின் கணவன் விஜயனுக்கு தெரிந்தது. அவனுக்கும் தாயாருக்கு விருப்பமில்லாத விஷயத்தைச் செய்வது சரியல்லவென்று தோன்றியது. மெதுவாய் தன் தகப்பனாருக்கு தாயாருக்கு விரோதமாய் வீட்டில் ஏன் செய்யவேண்டுமென்று சொல்லிப் பார்த்தான்.

ரங்கையயர் ஓரே பிடிவாதமாய் தான் நினைத்த யோசனையை செய்தேயாக வேண்டுமென்று சொல்லி விட்டார்.

மேலும் வசந்தாவுக்கு ஏதோ கடவுளருளால் அறிவு (கல்வி ஞானம்) இருப்பதனால் தான் நான் இவ்வளவு தொந்திரவு படுத்துவது. இருக்கிற புத்தியை பாழடிப்பார்களா? என்று சொன்னார்.

வசந்தா மெட்ரிக்குலேஷன் பரீக்ஷை பாஸ் செய்திருந்தாள். அத்துடன் அவளுக்கு கல்பனாசக்தியும் இருந்து வந்தது.

ரங்கையயர் ஒரு சமயம் பழைய புத்தகத்தையெல்லாம் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அங்கே வசந்தாவின் புத்தகம் ஒன்றிருந்தது. அதையும் பிரித்துப் பார்த்தார். அதில் ஒரு பெரிய காகிதச்சுருள் இருந்தது. அதைப் பிரித்து படித்தார். அது வெகு அழகாய் எழுதிய ஒரு கதை. இம்மாதிரி 3-4 கதைகள் அன்று அவருககுக கிடைத்தன. அன்றிருந்து இவர் மூளையும் வேலை செய்ய ஆரம்பித்தது.

கோதையம்மாள் அன்று வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தாள். வசந்தாவுடன் பேச்சு நிறுத்திக் கொண்டாள். வீட்டு வேலையொன்றையும் செய்யமாட்டாள். சுருங்கச் சொன்னால் சாப்பிடும் வேளையைத் தவிர மற்ற வேளைகளில் அவளை வீட்டில் நீங்கள் காணமாட்டீர்கள்.

வசந்தா தன் மாமிக்கு முன்போலவே எல்லா வேலைகளையும் செய்து வந்தாள். அவள் வீட்டு வேலைகளைக் கவனிக்காததைப்பற்றி சற்றும் வருத்தப்படமாட்டாள்.

வீட்டு வேலைகளெல்லாம் செய்தானபிறகு ஒழிந்த வேளைகளில் தன் மாமனாரின் கோரிக்கையின்படி கதை எழுதி வந்தாள்.

கதைகள் பிரசுராலயத்துக்கு அனுப்பப்பட்டன. (மாருபெயருடன்) அடுத்த வாரமே "கிரஹலக்ஷ்மியில்" ஒரு கதை வெளியாகியது.

கதைகள் எளிய நடையிலும், மனதைக் கவரும்படியான முறையிலும் எழுதப்பட்டிருந்ததனால் எல்லோரும் வசந்தாவின் கதையை விரும்பிப்படித்தனர்.

ரங்கையருக்கோ, அளவிட முடியாத ஆனந்தம். தான் எண்ணிய காரியம் பலித்ததைக் கண்டால் யாருக்குத்தான் ஆனந்தமாயிருக்காது. வசந்தாவிடம் முன்னமே பேரன்பு கொண்டிருந்தவர். இப்பொழுது கேட்க வேண்டுமா? வசந்தா சரஸ்வதி யவதாரமென்றே நினைத்து விட்டாரென்றால் அதிசயமென்ன?

தன் மனைவி, வசந்தாவின் மீது கொண்டிருக்கும் வெறுப்புக்காக மிகவும் வருத்தப்பட்டார்.





அவ்வூரிலும் அநேகர் பத்திரிகை, கட்டுரைகள் வாசித்து வந்தபடியால் தங்கள் ஊரில் யாரோ ஒரு பெண் கதை எழுதுவதாக தெரிய வந்தது.

"அந்தக் கதை எழுதுகிற பெண்யாரோ தெரியவில்லை? வெகு நன்றாயிருக்கிறது! நல்ல சமத்து, படிப்பில் நல்ல ஞானம்," என்று பலவாறு சொல்லி வந்தார்கள்.

இச்சமாசாரம் கோதையம்மாளின் காதிலும் பட்டது. ஆனால் தன் நாட்டுப் பெண்ணுக்கு இவ்வளவு புகழ் ஏற்படாதென்றே எண்ணினாள், "அந்த மூதேவிக்கா இந்த புகழெல்லாம் வரும்" என்று தன்னுள் சொல்லிக் கொள்வாள்.

... ... ...

ஒருநாள் தபால்காரன் "ரங்கையயர் வீடு இது தானா?" என்று கூவிக்கொண்டே அவர் வீட்டுக்குள் நுழைந்தான்.

"சாமி, மணியார்டர் வந்திருக்கிறது," என்றான்.

ரங்கையயர் வேகமாய் வந்து, "என்ன? என்ன?"

தபால் சேவகன் : மணியார்டர் ரூபாய் ஐம்பது. வஸந்தா வென்பவர் யாராவது இருக்கிறார்களா? இது அந்த அம்மணிதானே? ஆமாம். ஜல்தி கையெழுத்துப் போடச் சொல்லுங்க. ரங்கையயர் சந்தோஷ மிகுதியால் வசந்தா வென்று கூப்பிட முடியாமல் தத்தளித்தார். தபால்காரன் மறுமுறை கர்ஜிக்கவே வசந்தாவை அழைத்தார்.

வசந்தா கையெழுத்துப்போட்டு விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

உடனே தன் மாமனார் கையில் பணத்தைக் கொடுத்து நமஸ்கரித்தாள். ரங்கையயர் "வசந்தா! உன் கல்வி மேன் மேலும் அபிவிருத்தி யடையட்டும்," என்று மனமார வாழ்த்தினார்.

அன்று வெள்ளிக்கிழமை. இவர்கள் வீட்டுக்கு மூன்றாவது வீடுகாலியாயிருந்தது. அவ் வீட்டில் அன்று யாரோ புதிதாக வந்தவர்கள் "சரஸ்வதி தேவி" க்குப் பூஜை செய்வதாகவும் அதற்காக கோதையம்மாளை சாயங்காலம் பூஜைக்குக் கட்டாயம் அனுப்பச் சொல்லி சென்றதாகவும், ரங்கையயர் தன் மனைவி கோதையம்மாளிடம் வினயத்துடன் மொழிந்தார். கோதையம்மாள் "அவர்களுக்கு என்னை எப்படித் தெரியும்?"

ரங்கையயர் :—"இது ஒரு பிரமாதமா? தெரிவதற்கென்ன? நீ தான் பெரிய சுமங்கிலியாச்சே? என்று மிக வற்புறுத்திக் கூறிச் சென்றிருக்கிறார்கள். நீ அவசியம் போய்வா?" என்றார்.

ரங்கையயர் வீட்டின் மூன்றாவது வீட்டில் நன்றாய் அலங்கரித்து ஒரு கூடத்தில் சரஸ்வதியின் படம் பல பூமாலைகளால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. படத்துக்கு முன்னால் பலவிதப் பழங்களும், தேங்காய் வெற்றிலை பாக்குகள் வைக்கப்பட்டிருந்தன.

சரஸ்வதி பூஜை செய்யும் மாது க்ஷத்திரிய வம்சத்தை சேர்ந்தவளாதலால் ஒரு பட்டு முந்தாணியை தலைக்குப் போர்த்திக் கொண்டிருந்தாள்.

சரஸ்வதி தேவிக்கு பூஜை பக்தியுடன் நடத்தப்பட்டது.

இரண்டாவது பூஜை கோதையம்மாளுக்கு. ஒரு பெரிய தாம்பாளத்தில் மஞ்சள் குங்குமம், பூச்செண்டுகள், தேங்காய், பழங்கள் ஒரு சிறிய பெட்டி முதலியவைகளுடன் கோதையம்மாளுக்கு தாம்பூலமளிக்கப்பட்டது. அவள் "இதென்ன டீம்மா? ஏதோ பெட்டியிருக்கே" என்றாள்.

அந்த மாது "இருக்கட்டும். அதை உங்கள் வீட்டில் திறந்து பாருங்கள். தயவு செய்து இங்கு திறந்து பார்க்கக் கூடாது" என்று

வெகு வணக்கத்துடன் கோதையம்மாளின் பாதத்தைப் பிடித்துக்கொண்டு நமஸ்கரித்தாள்.

கோதையம்மாள் :— நன்னாயிரு, பூர்ணாயுசோடே, நீ என்னாட்டுப் பெண்ணாயிருந்தால் எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பேன். கொடுத்து வைத்ததுதானே. எங்காவது குழந்தை குட்டியுடன் நூறு வருஷம் நன்னாயிரு. நான் வரேண்டியம்மா.

... ... ...

கோதையம்மாள் வீட்டுக்குள் அவசர அவசரமாக நுழைந்து "பாருங்கோ, அந்த பெண் எவ்வளவு மரியாதை, என்ன அடக்கம். எனக்கு வெத்திலை பாக்கு, பழம் தேங்காய் எல்லாம் கொடுத்து இன்னும் ஏதோ பெட்டி ஒன்று கொடுத்து உங்க வீட்டிலே திறந்து பாருங்கள் என்று சொன்னாள். அந்தப் பெண் "தேவமாதல்லவா?" என்று சொல்லிக் கொண்டு பெட்டியைத் திறந்து பார்த்ததில் அதில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள் இருந்தன.

கோதையம்மாள் ஆச்சரியமும் திகிலும் கொண்டவளாய் பெட்டியை அப்படியே (நோட்டுக்களை யெல்லாம் அதில் வைத்து மூடி) எடுத்துக்கொண்டு மூன்றாவது வீட்டுக்கு ஓடினாள். அங்கு கதவு பூட்டியிருந்தது.

கோதையம்மாள் திரும்பி தன் வீட்டுக்கு வந்து ரங்கைய்யருடன் "இதென்ன? ஆச்சரியமாயிருக்கே? அதற்குள்ளே அந்த வீடு பூட்டியிருக்கே? அந்த தேவமாது எங்கே போயிருப்பாள்? ஒன்றும் புரியவில்லையே?" என்றாள்.

ரங்கைய்யர் இடி இடியென்று சிரித்து "அந்த தேவமாது இங்கேயே இருக்கிறாள். வாடியம்மா! தேவமாது," என்றார்.

உள்ளிருந்து ஒரு பெண் தலைக்குப் போர்வை மூடியபடியே வந்து கோதையம்மாளுக்கு நமஸ்கரித்தாள். எழுந்திருக்கும் பொழுது தலைப்போர்வை விழுந்து விட்டது.

கோதையம்மாள், "நீயா? வசந்தாவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள். வசந்தா "நான் தான் அம்மா? தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். சரஸ்வதி பூஜை செய்தவள் நான்தான். அம்மா?" என்று பதில் சொன்னாள். கோதையம்மாள் கோபம் பஞ்சாய்ப் பறந்தது. "அடி! என் கண்ணே! நீ நிஜமாய் தேவமாது தாண்டீ? இத்தனை நாளும் நான் உன்னை ஏரெடுத்துப் பார்க்கா விட்டாலும் நீ என் பேரில் இவ்வளவு அன்பு வைத்திருப்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை, பாவி, உன்னை இம்சித்தேன்" எனக் கூற, வசந்தா இடைமறித்து "அப்படியெல்லாம் தாங்கள் ஒன்றும் வருத்தப்படக்கூடாது. சென்றதை மறந்து விடுங்கள். அம்மா!" என்றாள்.

கோதையம்மாள், "வசந்தா, என்னை மன்னித்துவிடு," என்று தன் நாட்டுப் பெண்ணை கட்டிக்கொண்டாள்.

அச்சமயம் வெளியே சென்றிருந்த விஜயன் உள் நுழைந்தான். தன் தாய் வசந்தாவை அணைத்துக் கொண்டிருப்பதைக்கண்டு திகைப்பும், ஆச்சரியமும் கொண்டான்.

ரங்கைய்யரால் அவனுக்கு சகல விஷயமும் தெரியவந்தது. எல்லோரும் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். கோதையம்மாள் அவசர அவசரமாய் உள்ளுக்குச் சென்று கர்பூரத்தை எடுத்து கொளுத்தி வசந்தாவை சுற்றி திருஷ்டிகழித்தாள்.

இப்பொழுது வசந்தாவை ஒரு வேலைக்கு விடமாட்டேனென்கிறாள். ஏன்! அவள் தன் கண் முன் காணாவிட்டால் உலகமே சூன்யமாகி விட்டதென்கிறாள் போங்களேன்!



# முத்து

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகியம்மாள்

முன்னர் கீழ்த்திசையோராகிய இந்தியரும், சிங்களவரும், முத்தெடுக்கும் விதத்தைக் கூறினோம். இனி மேலைத் திசையோராகிய வெள்ளையர்கள் அதை பெறும் விதத்தை அறிவிப்போம்:—இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லப் புகுமுன் முக்கியமாய் அறியவேண்டிய முதலாவது சங்கதி ஒன்று உளது. அதுயாதெனில்,— உள்ளே சொட்டு நீர் கூட இல்லாமல் நன்றாய் உலர்ந்திருக்கும் அரிக்கும் சட்டி ஒன்றை எடுத்து ஓர் தொட்டி ஜலத்தில் தலை கீழாக வைத்து அமிழ்த்தினால் ஜலம் அச்சட்டிக்குள் சிறிதே தூரம் சென்று மேற்கிளம்பு மன்றி முழுவதும் உட்புகுந்து அதனை நிரப்புவதில்லை. அச்சட்டியை அசைக்காமல் அது இருந்தபடியே மேலே தூக்கி ஜலத்தினின்றும் எடுத்துப் பார்த்தால் இவ்வுண்மை இனிது விளங்கும். அச்சட்டியின் உட்புறத்தில் வாயு நிறைந்திருத்தலே அதனுள் ஜலம் ஏறாததற்குக் காரணமாகும். இம்மர்மத்தை அனுசரித்து ஹால்லி என்ற ஓர் ஆங்கிலேயன் குளிமணி ஒன்று முதல் முதல் இயற்றினான். அதொரு பிரமாண்ட கோவில்மணி போன்றது. மரத்தினாலாயது. அம்மணியின் உட்புறத்தில் முழுகுவோர்கள் பாதாதிகேச பரியந்தம் ஜலத்தை உள்ளே புகவிடாத ஓர் வகைக் கவசம் பூண்டு உட்கார்ந்து கொள்வார்கள். பின்னர் அம்மணியின் வாய் கீழ் நோக்கும்படி வைத்து அதனை ஜலத்துக்குள் மெதுவாய்ப் படகிலுள்ளோர் இறக்குவர். மணிக்குள் வாயு நிரம்பியிருக்கும் காரணத்தால் நீர் உள்ளே சென்று நிரம்பாது. மணிக்குள் இருப்பவர் விடும் மூச்சு சீக்கிரத்தில் விஷக்காற்றாக மாறாதிருக்கவும் சுவாசம் தாராளமாய் விடவும் போதுமான சுத்த வாயு பீப்பாய்களின் மூலமாய் முன்னாலேயே இறக்கிவிடப்பட்டிருக்கும். அப்பீப்பாய்களிலிருந்து அவற்றுடன் பொருத்தப்பட்டிருக்கும் தோற் குழாய்களின் மூலமாய் மணிக்குள் இருப்போருக்குச் சுத்தவாயு கிடைத்துக் கொண்டிருக்கும். இம்மணியிலும் சிற்சில குறைகளிருந்தன. ஆனால் காலம் செல்லச் செல்ல ஸ்மீட்டின் முதலிய சாஸ்திர பண்டிதர்களின் ஆராய்ச்சி வன்மைக்கும் மதி நுட்பத்திற்கும் தக்கவாறு, குளிமணிகள் சதுர வடிவாயும், முழுகுதற்கான வசதிகள் யாவும் குறைவற வாய்ந்தவைகளாயும், இரும்பினால் நிர்மாணிக்கப்பட்டன. ஆதலால் மேல் திசையோர்கள், கோவணத்துடன் மூழ்கிக் கஷ்ட நிஷ்டூரங்களுக்குள்ளாகக் கூடிய நிலைமையிலுள்ள இந்திய குளிகாரர்கள் போலச் சிரமப்படாமல் மிகுந்த ஸௌகரியத்துடன் உடைதரித்தே முழுகக்கூடும். ஆயினும் இந்திய சிங்களவர்கள், சாமர்த்தியத்திலும் சாதுரியத்திலும் மேற்றிசை யோரிலும் மிகப் பேர்போனவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இன்னோர் தம் கால் விரல்களைக் கொண்டே, ஆங்கிலேயர்கள் தம் கை விரல்களால் பிடுங்கி எடுக்கும் பொருள்களை அவர்களினும் அதி

தீவிரமாயும் எளிதாயும் எடுப்பார்கள். நிற்க: பாலினிஷீயாவிலுள்ள குளிகாரர்கள் கற்களின் உதவியின்றியே கடலில் முழுகுவார்கள். இவர்களுள் ஆடவர்களினும் பெண்டிரே முழுகுவதில் சாமர்த்தியசாலிகளாம்.

## முத்தின் குணவிசேஷங்கள்

முத்தின் பரிமாமணம் அதுபக்குவமாகச் செல்லும் காலத்திற்கேற்ப வேறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருஷங்களும் பூரண பக்குவமுற ஏழு வருஷங்களுமாகும். உஷ்ணப்பிரதேசங்களில் கர்ணப்படும் முத்துக்களே நேர்த்தியாயும், பருமனாயும், மனோகரமான குளிர்ந்த ஒளியுடனும், விலை மிகுந்தவையாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிற் காணப்படுவன சிறு முத்துக்களே.

நக்ஷத்திரங்கள் போல ஒளியும் உருட்சியும், காற்றேறு, மண் ஏறு, கல் ஏறு, நீர்நிலை முதலிய குற்றமில்லாமையும், கையினால் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்றாயும் ஸ்படிகம் போல் இருத்தலும் உயர் நன்முத்தின் குணங்களாம். இவ்வாறு குணங்களும் ஒருங்கமைந்த முத்துக்களை அணிந்தால் மூதேவியும், தரித்திரமும் அணிபவரை விட்டு நீங்குமென்றும் லட்சுமியும், செல்வமும், ஆயுளும் பிரபலிக்குமென்றும் பெரியோர் கூறுவர்.

“உடுத்திரள் அனைய காட்சி
உருட்சி, மா சின்மை, கையால்
எடுத்திடில் திண்மை, பார்வைக்
கின்புறல், படிகம் என்ன
அடுத்திடும் குணம் ஆறு, இன்ன
அணியின் மூதணங்கோ டின்மை
விடுத்திடும் திருவந் தெய்தும்
விளைத்திடும் செல்வம் வாழ்க்கை”

—திருவிளையாடற் புராணம்.

எவ்வளவுக் கெவ்வளவு வெண்மை, பளபளப்பு, திரட்சி, களங்கமின்மை, நல்ல நீர் முதலியவற்றுடன் கூடி முத்து இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அது விலை உயர்ந்ததாகும். ஏறக்குறைய ஓர் அங்குல கனமும் இரண்டு அங்குலத்திற்கு அதிகமான நீளமும் உள்ள முத்து ஒன்று அராபியாவில் பத்து லக்ஷ ரூபாய்க்கு சில காலத்துக்கு முன் வாங்கபட்டதாம். சர்வ லக்ஷணங்களும் பூரா அமைந்த முத்து இந்திய முத்தே எனத் தெரிகிறது.

## முத்தின் குற்றங்கள்

“தங்கிய முள்ஏறு, முகம் கறுத்தல், செந்நீர்
சார்வன, மண்ஏறு இடப்புத், திருநல்கோணை
மங்குருசிப்பிப் பற்று,க் காகவன்னி,
மருண்டிருத்தல்”

என்னும் பத்துக் குற்றங்கள் முத்துக்கு உண்டெனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராண முடையோர் கூறுகின்றார்.

## முத்தின் அழிவும் அதனை உயிர்ப்பிக்கும் விதமும்

முத்து உயிருள்ள பிராணியிடத்துத் தோன்றிய உயிரற்ற பொருளாக இருந்தும் அதற்கு அழிவும் இறப்பும் உண்டு. முத்து க்ஷீணிக்கும் என்ற விஷயம் நம் முன்னோர்கள் நன்கறிந்திருந்தனர். முத்தின் அழிவிற்குக் காரணம் பல. அவற்றுள் சில கூறுவாம்:—முத்துக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டுமாம். உயிர்பிராணிகள் உணவில்லாமற்





போனால் வாடி வருந்திச் சாதல்போல் முத்தும் உணவில்லாவிடில் வரவர வலிமை வனப்பாதிய குன்றி வாடிச் சாகுமாம். மெல்லியலாரின் மிருதுவான தோலின்கண் உள்ள ஓர்வகை உயிருள்ள சத்தையே முத்து உணவாகக் கொண்டு பிழைக்கின்றதாம். முத்தை ஸ்திரீகள் சதைப் பற்றுள்ள இடங்களிலேயே அணிந்து கொள்ளவேண்டுமென்று ரத்னப் பரிக்ஷகர் கூறுவது யாவருக்கும் தெரிந்ததே. ஆயினும் முத்துத் தரித்துக் கொள்ள யோக்கியதையே யில்லாத சில ஸ்திரீகள் உளர். ஏனெனில் முத்துக்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி மிகுதியும் உண்டு. ஆதலின் அவற்றைத் தரித்துக் கொள்ளும் சில ஸ்திரீகளின் மார்பாதிய இடங்களில் அவற்றின் ஆகாரத்திற்கு வேண்டியனவாகவும் அவைகட்கே தீமை செய்வனவுமான வஸ்துக்கள் இருக்குமாம். இது உண்மை என்பதை வேறு சில விஷயங்களைக் கொண்டு விளக்கிக் காட்டலாம். வைடூரியத்தைச் சில ஸ்திரீகள் அணிந்தால் என்ன ஜொலி ஜொலிக்கிறது? அதே கல்லை வேறு சில ஸ்திரீகள் அணிந்தால் அது உயிரற்ற களிமண் மாதிரி ஆகிவிடுவதைக் காண்கிறோமன்றோ?

ஆகவே, முத்து முதலிய இரத்தினங்கள் மங்கிச் சாவதற்கும் ‘டால்’ வீசி ஜ்வலிப்பதற்கும் ஸ்திரீகளின் அங்க இயலே காரணமென நன்கு தெரிந்து கொண்டே ரத்தின வியாபாரிகள், சில தக்க ஸ்திரீகளை ரத்னம் அணிந்து கொள்வதற் கென்றே கூலி கொடுத்து வேலைக் கமர்த்தியிருக்கிறார்கள். ஆ! இவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்! முத்தை அணிவதற்கு அருகரல்லாத ஸ்திரீகளிடமிருந்து, அவர்கள் அணிந்ததால் மங்கி நிறங்கெட்ட முத்து மாலையை மிகக்குறைந்த விலைக்கு வாங்கி அம்மாலைகளையும் தம்மால் ஏற்கனவே புதிதாய் வாங்கப்பட்டும் ஊட்டமில்லாக் குறையால் வாடி நிறங்குன்றி இருக்கும் மாலைகளையும் இந்தக் கூலிக்கார ஸ்திரீகளுக்கு அணிந்து, முத்தைக் கூடியமட்டும் முன்னிலையுறச் செய்து விற்றுப் பெறுலாபம் பெறுவர். இம்மர்மத்தையறிந்த பிரபு பத்தினிகள் பலர் தாம் முத்துக்களணியத் தகுதியற்றவர்களானதைக் கண்டுகொண்ட போதெல்லாம் அவற்றைச் சில காலம் தமது தோழிமார் மார்பிற் பூட்டி வைத்திருந்து அவர்கள் அணிதலால் அவற்றிற்குக் காந்தியும் பளபளப்பும் வந்தவுடன் தாம் அணிந்து வருகின்றனர்.

தக்க ஸ்திரீகள் அணிந்தும் கூடத் துலக்கமுறாது க்ஷீணிக்குந் தன்மையுள்ள முத்துக்களுமுண்டு. இத்தகைய முத்துக்களை உயிர்ப்பிக்க இரத்தினப் பரீக்ஷையில் தேர்ந்தோர் ஓர் உபாயம் செய்து பார்ப்பர். இவ்வுபாயத்தால் பெரும்பான்மையும் காரியசித்தி உண்டாம். அவ்வுபாயமாவது:—கடல் நீர் தாராளமாய் உட்புகுந்து ஓடிக் கொண்டிருக்கும்படியாய் இடுக்குகள் பல வாய்ந்திருக்குமாறு இருப்புக் கம்பிகளால் இணைத்துச் செய்த ஓர் கூண்டில் முத்துக்களைச் சாவதானமாய் வைத்து அக்கூண்டைக் கடல் நீரில் சில மாதங்கள் அமிழ்த்தி வைப்பதே. இவ்வாறு செய்தால் ஒளி குறைந்த முத்துக்கள் முன்போற் பிரகாசமுறும் என்பதற்குப் பின்வரும் விஷயங்களே போதிய சான்றாகும்.

அலெக்ஸாண்ட்ரா மகாராணியாருக்கு முத்துப் பைத்தியம் மிகுதியும் உண்டாம். அவர் சேர்த்து வைத்திருக்கிற மாதிரி பல வகைப்பட்ட முத்துக்கள் எவருமே இது வரை சேர்த்து வைத்ததில்லையாம். அவர்கட்கு முத்துக் கிரீடமும், முத்து உடையும் முத்து அரைக்கச்சும் உண்டு. அவர் பாதாதிகேச பரியந்தம் முத்துடை தரிக்குங்கால் அவரிடம் காணப்படும் முத்தை மதிப்பிட்டால் அவை நான்கு லட்சம் பவுன் ஆகும் என்று கூறியிருக்கின்றனர். இவற்றைத் தவிர இனி "உருப்படாது" என்று ஒதுக்கப்பட்டிருந்தவை இரண்டு லட்ச ரூபாய் பெறும்படியான முத்துக்களாம். இவை தரித்துக் கொள்ளாமல் உள்ளே வைக்கப்பட்டதால் கேடுற்றவைகளாம். முத்தாரம் ஒன்று நிறம் மங்கிப் பிணியுற்றதாம். அதை ஓர் பிரபல ரத்தினப் பரீக்ஷகனிடம் கொண்டு போகப்பட்டபோது அதை அவன் பரிக்ஷித்தறிவதாய்ச் சொல்லிப் பெற்று எவரும் அறியாமல் முன் சொல்லியபடி ஓர் கூண்டுக்குள் போட்டுச் சமுத்திர ஜலத்தில் மூன்று மாதம் போட்டு வைத்திருந்து பிறகு எடுத்துப் பார்த்த போது, அது குறை ஏதுமின்றி முத்துக்குரிய லட்சணங்கள் யாவும் பூரா அமைந்து முன்போல் ஜ்வலித்துக் கொண்டிருக்கக் கண்டு அதி சந்தோஷத்துடன் அதனை அரசியிடம் தந்தானாம்.

## உபயோகங்கள்

(1) முத்து பல தேசத்தாராலும் ஆடவர், இளையோர், முதியோர் என்ற ஏற்றத் தாழ்வின்றி அலங்காரத்திற்காக அணியப்படுகிறது. பெண்கள் புலாக்கு, மூக்குத்தி முதலிய ஆபரணங்களில் அவைகளை பதித்தும், மாலையாகக் கோத்தும் அணிவர். சிலர் கடுக்கன், மோதிரம் முதலியவைகளில் அவற்றைக் கட்டி அணிவர். ஸ்வாமிக்கும் ராஜாக்களுக்கும் செய்யப்படும் கிரீடங்களில் முத்தை விசேஷமாய்க் காணலாம்.

(2) இது ஒரு அரிய வியாபாரச் சரக்காயிருப்பதால் வணிகர்க்கு இதனால் பெருத்த லாபம் உண்டு.

(3) முத்து ஓர் மருந்துச் சரக்காதலின் பொடி முத்துக்களைச் சீனரும் இந்தியரும் புடம்போட்டு பிற மருந்துடன் கூட்டி விற்றுப் பணம் பெறுவர்.

(4) மேற்றிசையோர் பலர் பவளத்தைக் கொள்வது போலவே, சிலர் மலடு நீங்கவும், திருஷ்டி அழியச் செய்யவுங்கூடிய ரக்ஷையாகக் கருதி உபயோகிக்கின்றனர்.

(5) நகைகளுக்கு உபயோகிக்க முடியாத கடுகுபோன்ற 'விறை' முத்துக்களைச் சில தனவான்கள் வாங்கிச் சுட்டுச் சாம்பலாக்கித் தாம்பூலத்துடன் அருந்துவர்.

(6) தென் ஐரோப்பாவில் உள்ளோர் முத்துடன் சில பொருள்கள் சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதனை முகத்தில் பூசிக் கொள்வார்களாம். அவ்வாறு செய்தால் அவர்கள் நரைத்தலையாங் காலத்தும் முகத்திரை காணுதாம்.

(7) முத்துச் சிப்பிகள் நானாவித பொத்தான்கள் செய்யவும் உபயோகமாகும்.

## நித்திலம் உணர்த்தும் நீதிகள்

இனி முத்து சம்பந்தமாய்த் தாமாக விளங்கக் கூடியவையும், அன்றி, உய்த்துணரத்தக்கவையுமான அரிய நீதிகள்





சில இங்குரைத்தல் மிகையாகாதென்று எண்ணுகிறேன்.

(1) "அளவிடவும் முடியாத
ஆழ்கருங் கடலினுக்
கடியினுட் குகையினுள்ளே
அதிசுத்த மானபிர காச
ஒளி உமிழ்கின்ற
அரியமணி பல உறுதல்போல்
ஒளியபுக ழோடுதித்
தும்தமது பெருமையும்
உறைவிடமும் ஒருவராலும்
உணரமுடி யாதபடி மறை
நிலையில் உத்தமர்கள்
உறைவர் பலர்" என அறியலாம்.

(2) "பொங்கு திரைக் கடல்மேல்
புன்துரும்பே தோன்றுதல் போல்
இங்கெவர்க்கும் தோன்றும்
இழிகுணமே—அங்குயர்ந்த
முத்தெடுக்க வேண்டுபவர்
மூழ்குவது போல முயலின்
உத்தமகுணம் வெளியாகும்"

இதன் கருத்து என்னவெனில், சமுத்திரத்தில் பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் இழி துரும்புகளே. அதுபோல, ஒருவனுடைய தவறுகளே மேலெழுந்த பார்வையுடன் நோக்குவார் கண்ணுக்குப் புலப்படும். ஆனால் அதில் முத்தை நாடுவோன் அப்புன் துரும்புகளைப் புறம்பே தள்ளி, அடியில் ஆழ்ந்து நோக்கல் போல் நோக்கினால் தான் அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும் என்பதே.

(3) விலை யேறப் பெற்ற நன்முத்து உவர் நீரும் புலால் நாற்றமுங் கொண்ட கடலில் சிப்பி வயிற்றிற் தோன்றுவது போலவே நற்குண நற்செய்கையையுடைய பெரியோர் இழிகுலத்திலும் தோன்றற் இயல்பு. இதுபற்றியன்றோ.

"கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும்
மான் வயிற்றின்
ஒள் அரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல் விலைய முத்தம் பிறக்கும்
அறிவார் யார்
நல்லாளர் பிறக்கும் குடி?
என்னப்பட்டது?

(4) நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும் என்ற பழமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றதென்னலாம்.

(5) "ஆக்கும் அறிவான் அலது, பிறப்பினால் மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க." என்ற நீதியையும் முத்து கற்பிக்கின்றது. எவ்வாறெனில், முன்பு உரைத்தபடி "சேயார் முகத்துச் சென்றுதைக்கு கழிமுடைப் புன்புலால் நாற்றம்" புறம் பொதிந்தும் அகம் வதிந்தும் உள்ள சிப்பியில் தோன்றிய காரணத்தால் முத்தை இழிவு படுத்துவார் எவருமிலர். அதன் உயர்ந்த தன்மையையே எவரும் பாராட்டுவர். அதுபோல அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர்கள் இழிகுலத்தில் தோன்றினும் அவர்களது குணம் செயல்களைப்பற்றிப் பாராட்ட வேண்டுமேயன்றி அவர் தோன்றிய குலத்தின் இழிவு கருதி இகழலாகாது. நீதிவெண்பாவிலும்,

"தாமரை பொன் முத்து சாமரை
கோரோசனை பால்
பூமருதேன் பட்டுப் புனுகு சவ்வா—
தாம் அழல் மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே
நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்."

என்று கூறி இருத்தல் காண்க.

(6) மழைத்துளி ஒன்று பழுக்கக் காய்ச்சிய இரும்பிற் படுமாயின் தன் உருவமே தெரியாமற் மறைந்து சுவருகின்றது. அதே மழைத்துளி தாமரை இலைமேல் தங்குமாயின் நீர் உரு நீங்கி முத்தின் உருக்கொண்டு விடுகிறது. அம்மழைத்துளியே ஆடிமீ சுவாதி நக்ஷத்திரம் உச்சத்தில் இருக்கும்பொழுது சிப்பியின் அகட்டில் விழுமாயின் மிக்க வனப்பும் விலையும் வாய்ந்த முத்தே ஆகிறது. இதனால் அதமர் சேர்க்கையால் அயர்ச்சியும் அழிவும், மத்திமர் சேர்க்கையால் மகிமைத் தோற்றமும், உத்தமர் சேர்க்கையால் உயர்ச்சியும் பெருமையும் உறலாகும் என்பது புலப்படும். இவ்வாறே சிநேக பாத்திரத்தைப் பற்றிச் சொல்லும் காலையில் பர்த்ருஹரியார்

"காய்ந்தகரும் பொன்வாவிக்
கமல இலை கடற்சிப்பி
தோய்ந்த நீர் பெயர்கெடல் மேல்
தோன்றல் முத்துத் தோன்றிடல் போல்
வாய்ந்த தமன் மத்திமன் உத்
தமர் தம்பால் மருவினர்கள்
ஆய்ந்துமேற் சொன்னபடி
அனுபவிக்கப் பெறுவாரே"

எனக் கூறியிருக்கின்றனர்.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற்காம் சில குறிப்புடையது. சற்குணமுடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்.








தோணிப்ரயாணம்

ஹம்பி ராணிவாசத்திலுள்ள காவற்கூ





பண்டித ஜவாஹரும், அவரது புத்திரி இந்திராவும்.



சீனக் குடியரசுத் தலைவர் மனைவி
மேடம் சியாங்காய் ஷேக்.

# ஹாலந்து

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

**ஹா**லந்து தேசம் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு புராதனப் பெருமை வாய்ந்த சிறியநாடு. இதற்கு வேறுபல பெயர்களும் உண்டு. நெதர்லாண்ட்ஸ் (Netherlands) என்றும் இதைச் சொல்லுவதுண்டு. இதற்கு அர்த்தம் தாழ்ந்த நிலப்பிரதேசம் (Low countries) என்பதாகும். இது ரொம்பவும் தாழ்வான தேசம். இந்நாட்டின் 99% பாகம் சமுத்திர மட்டத்துக்கு 16 அடிக்கு மேலில்லை; சமுத்திரமட்டத்துக்கு கீழுள்ள பாகங்கள் சிலவும் உள்ளன. இதற்குத் தெற்கில் பெல்ஜியமும், கிழக்கில் ஜெர்மனியும், வடக்கிலும், மேற்கிலும் வடசமுத்திரமும் (North Sea) எல்லையாக அமைந்துள்ளன. இது ஆதியில் அடிக்கடி சமுத்திரப் பிரளயத்தால் சிரமப்பட்டு வந்தது. ஹாலந்தின் விஸ்தீரணம் 12,580 சதுர மைல்கள். இதனுடைய நீர்பாகத்தையும் சேர்த்தால் இதன் விஸ்தீரணம் 15,760 சதுர மைல்களாகும். ஹாலந்தின் ஜனத்தொகை சுமார் 6,841,000 ஆகும். ஜனத்தொகை பலவித இனத்தார்களாலானது.

அதில் முக்கிய மூன்று இனத்தினர் ப்ரிஸியர், (Frisians) பராங்குகள், (Franks) ஸேக்ஸன் (Saxon) ஆவர். ஹாலந்து மக்களைப் பொதுவாக டச்சுக்காரர் என்று அழைப்பதுண்டு. இவர்களிடத்தில் ஒவ்வொரு இனத்துக்கும் குறிப்பிட்ட சில அம்சங்களும் குணவிசேஷங்களும் இருந்தபோதிலும் பொதுவாக ஹாலந்து ஜனங்கள் தேசபக்தி மிகுந்தவர்களாயும், தாராளமனதுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய ஊக்கத்தாலும் விடாமுயற்சியாலும் அடிக்கடி சமுத்திர ஜலம் நாட்டை யழிக்காமலிருக்கப்பல அணைகளைக்கட்டி யிருக்கிறார்கள். சதுப்பு நிலங்களை விவசாயத்துக்கு லாயக்கான நிலங்களாகச் செய்திருக்கிறார்கள்.

இவர்களுடைய வீடுகளும், அதில் அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் பொருள்களும் பார்வைக்கு அழகாக இருக்கின்றன. தங்கள் குழந்தைகளுக்கு படகு கட்டுதல், வலைபின்னல் முதலியவற்றை அவர்களே கற்றுக் கொடுக்கிறார்கள்.

## ஸ்திரீகள்

ஹாலந்து தேச ஸ்திரீகள் நல்ல எழிலும், உடற்கட்டும் உள்ளவர்கள். தங்கள் குழந்தைகளின் மீது மிகுந்த பக்ஷமாயிருக்கிறார்கள். சிறுமிகள் அழகிய பாவாடைகள், ஜம்பர்கள், தலைத்துணிகள் முதலியவைகளை அணிந்து கொண்டு கைகோர்த்துக்கொண்டு பாட்டுக்கள் பாடிக்கொண்டு தெருவில் வட்ட வட்டமாக நடனமாடும் காட்சி மனதுக்கு இன்பமாய் இருக்கும். மீன் பிடிப்பவர்களின் மனைவியர் கடலோரங்களுக்கே தங்கள் கூடைகளுடன் வந்து காத்திருந்து தங்கள் கணவர்கள் கொண்டுவரும் மீன்களை குதூஹலத்துடன் வாங்கிக்கொண்டு மார்க்கெட்டுகளுக்கு ஓடுகிறார்கள். சென்னைக்

கடற்கரையிலும் இக்காட்சி சர்வசாதாரணமானது. ஸ்திரீகளே பசுக்களுக்கு புல் முதலிய ஆகாராதிகளைக் காலாகாலத்தில் கொடுத்து பால் கறந்து அதைப் பலவித உணவுப் பொருள்களாகச் செய்கிறார்கள். ஸீலந்து மாகாணத்தில் ஸ்திரீகள் சதுப்பு நிலங்களிலும் வேலை செய்கிறார்கள். தையல், நெய்தல் முதலிய தொழில்களிலும் மாதர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஸ்திரீகள் நூதனமாகவும் அழகாகவும், கௌண், ப்ராக், தலைத்துணி முதலியவற்றையணிந்து கொள்ளுகிறார்கள். டச்சுக்காரர்களின் சிறந்த வேலைப்பாடமைந்த தட்டு முட்டு சாமான்களும், உடைகளும் ஸ்திரிகளாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவர்கள் தங்கள் அன்பினால் தங்கள் கணவன்மார்களின் ஆசையைப்பெற்று இன்பமாகக் காலங்கழித்து வருகிறார்கள். வாலந்தம் நகரத்து ஸ்திரீகள் ஒரே சமயத்தில் பலவிதப் பாவாடைகள் கட்டிக்கொள்ளுகிறார்கள். சனிக்கிழமைகளில் யுவர்களும், யுவதிகளும் உல்லாசமாகக்காலம் களிப்பார்கள். நதியோரங்களிலும், சமுத்திரக்கரையிலும் ஆடவரும் பெண்டிரும் ஜதை ஜதையாகக் கூடி தங்கள் குழந்தைகளுடன் விளையாடிப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஸ்திரீகள் தங்கள் பாவாடைக்குமேல் வெள்ளி அல்லது தங்க ஜரிகையால் செய்யப்பட்ட பட்டைகளை அணிந்து கொள்கிறார்கள். கடைத்தெருக்களுக்குச் சென்றால் பேரம் பண்ணுவதில் டச்சு மங்கையர்கள் வெகு சாமர்த்திய சாலிகள். (நம் நாட்டு பெண்கள் அதற்குமேல்தான்)

நங்கையர்கள் தங்கள் காலத்தை வீணாக்க் கழிக்கமாட்டார்கள். கடற்கரைகளிலும், வாய்க்கால் ஓரங்களிலும் பொழுது போக்குக்காகவும் மீன்பிடிக்கச் சென்றிருக்கும் போதும் பூத்தையல் வேலைகளிலும், சிங்காரச் சித்திரத் தையல் வேலையிலும் ஈடுபட்டிருப்பார்கள். பக்கத்தில் அவர்கள் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கும். பொதுவாக ஆண் பெண் இரு



டச்சுமாது ஒருவித ராட்டையில் நூல் நூற்கிறாள்.

பாலாரும் மரக்கட்டையால் செய்யப்பட்ட பாதரக்ஷைகளையே (Wooden Slippers) உபயோகிக்கிறார்கள். ஆனால் அவற்றை வீட்டுக்குள் நடமாடும்போது போட்டுக்கொள்வதில்லை. வாசலோரத்திலேயே கழற்றி வைத்துவிடுகிறார்கள். குழந்தைகள் முதல் பெரியோர்வரை அதை யணிந்து கொள்ளுகிறார்கள். அதில் சாதாவும், பலவித சித்திர வேலைப்பாடுகள்





செய்யப்பட்டவையும் உண்டு. தங்கள் குழந்தைகளை ஏழாவது வயதில் தான் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள்.

## மணம்

இவர்கள் கல்யாண சம்பந்தமாய் அனேக நூதன பழக்கவழக்கங்கள் இருக்கின்றன. மணமக்கள் கல்யாணம் ஆனதும் ஊர்வலம் வரும் வழக்கம் இவர்களிடமும் உண்டு. ஆனால் ஒரு அழகிய திறந்த ஜாரட்டில் மாப்பிள்ளையும் பெண்ணும் தனியே உட்கார்ந்து கொண்டு தாங்களே அதை ஓட்டிச் செல்லுவார்கள். குதிரை லகானை புருஷன் பிடித்துக் கொண்டிருப்



ஹாலந்து ஸ்திரீ நாய் வண்டியில் பால்வைத்து விற்கும் காட்சி.

பான். சாட்டையை பெண் வைத்திருப்பாள். சாட்டை புஷ்பங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். இதன் தாத்பர்யம் குடும்பமாகிய வண்டியை தம்பதிகள் இருவரும் ஒத்து நடத்தவேண்டுமென்பதாகும். தம்பதிகளின் வண்டிக்குப் பின்னால் பந்துக்களும் நல்ல வண்டிகளில் போவார்கள். வழியில் சிறு குழந்தைகள் இவர்களைக் குதூகலத்துடன் வரவேற்பார்கள். அவர்களுக்கு தின்பண்டங்கள் அளிக்கப்படும்.

## நாய் வண்டி

இத்தேசத்தில் சிறு வண்டிகளை இழுக்க நாய்களை உபயோகிக்கிறார்கள். காய் கறி விற்கும் கன்னியர்கள், பால் விற்கும் பாவையர்கள், மீன் விற்கும் மெல்லியலார் முதலியோர் தங்கள் விற்பனைச் சரக்குகளை இந்த நாய் வண்டிகளில் போட்டுத் தெருத் தெருவாய்ச் சென்று வாடிக்கைக்காரர்களுக்கு விற்று வருகிறார்கள். டச்சுக்காரர்களின் ஆகாரம் முக்கியமாக பால், ரொட்டி, பாலாடை, காபி, டீ, தேன் கலந்த பணியாரம் முதலியன. இவர்கள் ஒரு வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு உணவு அருந்துகிறார்கள். இவர்கள் சுவர்கள், தட்டு முட்டு சாமான்கள், படகுகள், துணிமணிகள் எல்லாவற்றிலும் சித்திர அலங்காரங்கள் செய்கிறார்கள்.

## அரசியல்

ஹாலந்து தேசம் வம்சபரம்பரையாய் முடியாட்சியாகவே இருந்து வருகிறது. தேசத்தின் தலைவர் அரசர் பெருமானே. ஆனால் அரசருக்கு சர்வ அதிகாரமும் கிடையாது. இந்த முடியாட்சி இப்பொழுது இங்கிலாந்தில் மன்னர் ஆட்சி நடை பெறுவது போல் கட்டுப்பட்ட அரசாட்சி (Constitutional Monarchy) யாகும். மனனர், ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General) என்ற இரு சபைகள்

உள்ள பார்லிமெண்டின் அபிப்பிராயங்களை யொட்டியே நிர்வாஹத்தை நடத்திவர வேண்டும். உயர்தர சபைக்கு ஒன்பது வருஷங்களுக்கு ஒரு தடவையும், ஜனப் பிரதிநிதி சபைக்கு மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் தேர்தல் நடைபெறுகின்றது. 23 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண் பெண்களும் ஓட்டுப் பதிவு செய்யலாம். இத்தேசம் அரசியல் நிர்வாஹ சௌகர்யத்தை உத்தேசித்து பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தென் ஹாலந்து, ஸீலந்து, வட ப்ரபந்து, உட்ரெக்ட், ஜெல்டர்லந்து, ஓவரிஸல், ட்ரென்தி, ப்ரீஸ்லந்து, க்ரோனிங்கன் முதலியன. மாகாணங்களிலும் பிரதிநிதி சபைகள் இருக்கின்றன.

## ராணுவம்

ராணுவப் பயிற்சி எல்லோரும் கட்டாயம் பெறவேண்டும். ஒல்வொரு டச்சுக்காரனும் தன் தேசத்தைக் காப்பாற்ற எந்த சமயமும் அழைக்கப்படுவான். அந்த சேவைக்கு அவனைத் தயார் செய்ய சர்காரே முன் வந்து கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்கிறார்கள். சாதாரண சமாதான காலத்திலேயே ராணுவப் படையில் சுமார் மூன்று லட்சம் பேர்களிருக்கிறார்கள். இன்னும் கப்பல்படை, ஆகாய படை முதலியனவும் இருக்கின்றன. பற்பல நூதன ஆயுதங்களும் எதேஷ்டமாக உள்ளன.

## வியாபாரம், கைத்தொழில்

விவசாயம் ஒரு முக்கியத் தொழில். நிலத்தில் பெரும்பாகம் விவசாயத்துக்கே உபயோகப்பட்டு வருகிறது. மூன்றிலொருபங்கு பூமி மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. முக்கிய விளைபொருள்கள் கம்பு, ஓட்ஸ், கோதுமை, பீட்ரூட், சணல் முதலியன. ஆட்டுப்பால், பசும்பால் முதலியனவற்றால் செய்யப்பட்ட பலவித உணவுப் பொருள்களுக்கு ஹாலந்து மிகவும் பிரசித்தி பெற்றது. மீன் பிடித்தலும் முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. சுமார் 20000 பேர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். துணி மணிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தங்கம், வெள்ளி, நிலக்கரிச்சுரங்கங்களும் சில விடங்களில் இருக்கின்றன. இந்தப் பொருள்களில் வெளிநாடுகளுடன் வியாபாரம் நடக்கிறது. இரும்பு முதலிய பொருள்கள் இறக்குமதியாகின்றன.

## போக்குவரவு சாதனங்கள்

சுமார் 2600 மைல்கள் ரயில்பாதை இருக்கிறது; 3000 மைல்கள் ரோட்டுப் பாதையும், 2000 மைல்கள் வாய்க்கால் வசதியும், 2000 மைல்கள் ட்ராம்வேயும் இருக்கின்றன. தவிர போதிய அளவு தந்தி தபால், டெலிபோன் வசதிகளும் ஆகாய விமானப் பிரயாணவசதியும் கிடைக்கின்றன.

## மதம்

சர்க்கார் எல்லாவித மதஸ்தர்களுக்கும் தங்கள் கடவுளைத் தங்கள் இச்சைப்படி தொழ உரிமை கொடுத்துள்ளார்கள். ப்ராட்டஸ்டன்ட், (Protestant) ரோமன் கதோலிக், ஜூ முதலிய எல்லாமத ஆலயங்களுக்கும் சர்க்கார் பணவுதவி பாரபக்ஷமின்றி அளித்து வருகிறார்கள். ஜனத்தொகையில் 2/5 ரோமன் கத்தோலிக்கர்கள். எல்லோரும் நல்ல உடை





அணிந்து பிரதி ஞாயிற்றுக்கிழமையும் சர்ச்சுக்குச் செல்கிறார்கள்.

## கல்வி

கட்டாய இலவச ஆரம்பக்கல்வி அரசாங்கத்தாரே அளிக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாதவர்களைக் காண்பது துர்லபம். அவ்வளவு சிறிய ஜனத்தொகையுள்ள தேசத்தில் சுமார் 6500 எலிமெண்டரி பள்ளிக்கூடங்களும், 1500 பால பாடசாலைகளும் உள்ளன. ஆறு பல்கலைக் கழகங்கள் (University) இருக்கின்றன. அவற்றுள் நான்கு பொதுவானவை; ஒன்று தொழிற்கல்வி அளிப்பது; மற்றொன்று தனிப்பட்டவர்களால் நிர்வஹிக்கப்பட்டு வருகிறது. கல்வி கலை வளர்ச்சியில் அச்சிறிய நாடு காட்டும் ஊக்கத்தைக் கண்டு நம் சர்க்கார் தலை குனிய வேண்டியதே.

## முக்கிய நகரங்களும், நதிகளும்

ஆம்ஸ்டர்டாம் தலைநகரம். ராட்டர்டாம், ஹேக், உட்ரெக்ட், க்ரோனிங்கென்முதலியன இதரநகரங்கள். ரைன், வால், மாஸ், ஷெல்டி முதலிய பிரதான நதிகள்.

———:o:———

# உண்மையை வெளியாக்க நூதன மருந்து

லண்டனில் இரு வைத்தியர்கள் சென்ற ஐந்து வருஷ காலமாக ஆராய்ச்சி நடத்தி இப்பொழுது ஒரு அரிய மருந்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர். ‘பெண்டோதல்’ எனப் பெயர் கொண்ட இம்மருந்தைக் கொண்டு நோயாளிகளிடமிருந்தோ, குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்படுவோரிடமிருந்தோ, உண்மையனைத்தையும் கிரகித்துவிடலாம். ரஷ்யாவில் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஸினோவிப், கெமனிப் இவர்களுக்குக்கூட இந்த மருந்து கொடுக்கப்பட்டதாகவும், இதன் பேரில் அவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதாகவும் முன்பு ஒரு பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

இம்மருந்தை உட்கொள்வோருக்குச் சுமார் இரண்டரை மணிநேரம் வரை ஒரு மாதிரியான பிரமை இருந்து வருகிறது. அந்நேரத்தில் யார் என்ன கேள்வி கேட்ட போதிலும், அவர்கள் தாங்களறிந்த உண்மைகளனைத்தையும் கக்கிவிடுகின்றனராம்.

விவாகமான ஒரு ஸ்திரீக்கு இந்த மருந்து கொடுக்கப்பட்டதன்பேரில் அவள் பல கேள்விகள் கேட்கப்பட்டதாகவும், அவள் தன் கணவனைத் தவிர வேறொருவரை நெடுநாளாகக் காதலித்து வருவதாக ஒப்புக் கொண்டாளென்றும் மேற்குறிப்பிட்ட வைத்தியர்களில் ஒருவர் கூறுகிறார்.

மனோ வியாதியால் பீடிக்கப்பட்டவர்களையும் இம்மருந்தைக் கொண்டு குணப்படுத்திவிடலாமெனச் சொல்லப்படுகிறது.

# வைத்தியப் பகுதி

டாக்டர் குமரன்

## வாழைப்பழம்

வாழைப்பழம் தின்றறியாத மக்கள் தமிழ் நாட்டில் எவரும் இருக்க மாட்டார் என்றே கருதுகிறோம். சிலர் வாரந்தோறும் வாழைப் பழத்தைச் சாப்பிடுகின்றனர். சிலர் தினந்தோறும் இரவில் வாழைப் பழங்கள் சாப்பிடும் வழக்கமுடையவர்களா யிருக்கின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே வாழைப்பழமும், காய்களும், பூவும், தண்டும் நம் நாட்டவரின் ஆகாரப் பொருள்களாகவே இருந்து வருகின்றன. வாழையிலேதான் நாம் உணவை வைத்துக் கொண்டு சாப்பிடுவதற்குரிய விசேஷமான சாதனமாயிருக்கிறது. முந்தையோர் இவ்வாழைப்பழம் அறிஞரின் ஆகாரம் எனக் கூறுவதுண்டு.

வாழையில் பலவித முண்டு. பொதுவாக, ரஸ்தாளி, பூவன், பச்சை வாழை, சிறு மலை வாழை, பெருமலை வாழை முதலியவைகள் தாம் அதிகம் உபயோகத்திலிருக்கின்றன. இன்னம் பச்சை நாடன் வாழை, செவ்வாழை, கருவாழை, கொட்டை வாழை, தேன்கதலி, மொந்தன் வாழை, பேயன் வாழை, வங்காள வாழை, மலையாள வாழை நேந்திரங்காய் போன்ற பலவகை வாழைப்பழங்களும் உண்டு.

நாற்பது வருடங்களுக்கு முன் இங்கிலாந்தில் வாழைப்பழம் கிடைப்பது அரிதாயிருந்தது. வாழைப்பழம் சாப்பிடுவது பணக்காரர்களுடைய சம்பிரதாயமாகத்தானிருந்தது. இந்தப் பழங்களுள் ஒன்றிரண்டு சாப்பிட்டுவிட்டால் பசியாறி விடும். மேனாட்டுத் தொழிலாளர்கள் இப்போது தங்களுணவுடன் ஓரிரண்டு வாழைப்பழங்களைத் தின்று விட்டால் வயிறு நிரம்பி விடுகிறது. வாழைப்பழங்களைத் தனியாகத் தின்னலாம். பாலுடனும் சாப்பிடலாம். வாழைப்பழம் தடித்த தோல்கள் மூடப் பெற்றதாயிருப்பதால் பரிசுத்தமானவைகளாய் விளங்குகின்றன.

பழுக்காத வாழைக்காயில் முக்கால் பங்குத் தண்ணீரும், ஐந்தில் ஒரு பங்கு மாச்சத்தும் இருக்கின்றனவாம். பழுத்து விட்டால், இந்த மாச்சத்தானது சுலபத்தில் ஜீரணிக்கக்கூடிய பழச்சர்க்கரையாக மாறிப் பூரண சக்தி யுண்டாக்கக்கூடியதாகி விடுகிறது. ஒரு வாழைப்பழத்தில் உஷ்ண மூட்டக்கூடிய சத்து 100 பங்கிருக்கிறது. அஃதாவது ஒரு பவுண்டு பழத்தில் 460 பங்கு உஷ்ணச் சத்திருக்கிறது.

வாழைப்பழத்தில் மாச்சத்து, கொழுப்பு, புரொட்டீன் (வெண் கருச் சத்து), பெக்டின் முதலிய சத்துக்களுடன், மிக நுணுகிய அளவில் சுண்ணம், செம்பு, இரும்பு, கந்தகம், தீமுறு கற்பாஷாணம், லவணசாரம், வெண்ணாகம், வெட்டை நாகம், க்ஷாரவுப்பு, ஸ்படிக தாது, லவணதாது முதலியவற்றின் சத்துக்களும் ஏ. ஜீவசத்தும் அடங்கியிருக்கின்றன.

வாழைப்பழம் பழ வகைகளுள் மிகச் சிறந்ததாகும். இதர எல்லாப் பழங்களையும்விடக் குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதும், உடலுக்கு நலன் விளைவிக்கக் கூடியதும், ஏழைகள் முதல் பணக்காரர் வரை சர்வ தாராளமாக உபயோகிக்கக் கூடியதும், பரிசுத்தமானதும், வாழைப் பழம்தான். இஃது உணவுக்குரிய பூரணச் சத்துக்கள் பொருந்தியது. ஒரு வாழைப் பழத்தை இருபது திராட்சைப் பழங்களுக்கும், நான்கு பேரீச்சங் கனிகளுக்கும், இரண்டு அத்திப் பழங்களுக்கும், இரண்டு சிறிய ஆப்பிள்களுக்கும், ஒரு கோப்பை ஆரஞ்சுப்பழ ரஸத்துக்கும் சமமாகச் சொல்லலாம்.

வாழைப்பழத்தில் ஏ. ஜீவசத்து நிறைய விருப்பதால் கண் பார்வை இதனால் விருத்தியாகும். மேலும் சொறி சிரங்கு கரப்பான்கள் வராமற்றடுக்கும் சக்தியும் வாழைப்பழத்திற்கிருக்கிறது. இப்பழத்தில் மரவுப்புச் சத்து அதிகமாயிருக்கிறது. நோயாளிகள் வாழைப்பழத்தைத் தின்னக்கூடாதென்று நினைப்பதும், உடற் பருமனைக் குறைத்துக்கொள்ள நாடுபவர்களும் வாழைப்பழத்தைச் சாப்பிடக் கூடாதென்று எண்ணுவதும் சுத்தத் தவறான அபிப்பிராயமாகும்.

உடற் பருமனைக் குறைக்கவும் சரி, கூட்டவும் சரி இந்த ஒரே அற்புதப்பழம் உபயோகிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் பிரபல டாக்டராகிய டாக்டர் ஹாராப் செய்த ஆராய்ச்சியின் பலனாக, ஓர் உடற்பருத்த ஆளுக்கு ஆறு வாழைப் பழங்களையும் நாலு கிளாஸ் பாலையும் சேர்த்துத் தினசரி கொடுத்துக்கொண்டு வந்ததில் பத்து தினங்களுள் ஒன்பது பவுண்டு சதை குறைந்து விட்டதாம். எனவே, ஒரு நாளில் இருவேளை உணவை வாழைப்பழப் பாலுணவாக வைத்துக் கொண்டு, ஒரு வேளைக்கு மட்டும், காய்கறிகள், இறைச்சி, இதர பழங்கள், சாதம் முதலியவைகளை உடற்பருமனுயிருப்பவர்கள் சாப்பிடலாம் என்று அந்த டாக்டர் கூறுகிறார்.

பருமன் குறைவாய் மெலிந்து கிடப்பவர்கள் சாதாரண உணவுடன் வாழைப் பழங்களைப் பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டால் உடல் பருக்கும். இதர உணவுகளை விட வாழைப்பழம்தான் மிகச் சீக்கிரமாக ஜீரணித்துவிடும். ஆபிரிக்கக் குள்ளர்கள் என்னும் நாலு அடி உயரமேயுள்ள ஒரு சமூகத்தினர், ஒருமுறை உட்கார்ந்தால், அறுபது பழங்களுக்குமேல் தின்று விடுவார்கள். அதனால் அவர்கள் உடம்பும் நல்ல வலிமையுடையவைகளாயிருக்கின்றன. வாழைப்பழங்களை நோயாளிகள் சாப்பிடலாம். குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். அவை சீக்கிரம் ஜீரணமாவதைப் போன்று மலபந்தம் உண்டாகாமல் செய்யும் சக்தி முடையது. 1924-ல் டாக்டர் ஸிட்னீ வீ. ஹாஅஸ் நோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக் கெல்லாம் வாழைப்பழம் கொடுத்துப் போஷித்துப் பார்த்தார். இதைப்பார்த்து, அமெரிக்கா, கானடா முதலிய விடங்களிலுள்ள பிரபல டாக்டர்களும் ஆறு வாரக் குழந்தைகளிலிருந்து

இரண்டு வருடக் குழந்தைகள் வரை கொடுத்துப் பார்த்தார்கள். எல்லாக் குழந்தைகளும் நன்றாக வளர்ந்தன. நியூ ஆர்லியான்ஸைச் சேர்ந்த டாக்டர் வாலன்மேஸன்பக் 258 குழந்தைகளுக்கு வாழைப்பழ உணவைக் கொடுத்தே போஷித்தார். முதலில் அவர்கள் ஒரு கரண்டியில் பழத்தையும் பாலையும் கஞ்சி போலாக்கிக் கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அரைப்பழம்வரை கொடுத்தனர். சிலசமயங்களில் வாழைப்பழங்களை உலரவைத்துத் தூள் செய்து கொண்டு அவற்றை உபயோகித்து வந்தனர். வாழைப்பழங்களில் அதிக சத்திருக்கின்றபடியால் வளரும் பிள்ளைகளுக்கு வாழைப்பழம் ஒரு சிறந்த ஆகாரம். அதிலும் பாலுடன் வாழைப்பழம் கலக்கப்பட்டால் அதன் சத்துப் பெருகிவிடுகிறது.

நம் நாட்டில் வாழைக்காயையும் வாழைப்பழத்தையும் பல வகைகளாக உபயோகிக்கின்றனர். இதன் பெருமையை நம் நாட்டவர் நெடுங் காலத்திற்கு முன்னரே கண்டுவிட்டனர்.

இப்போது, ஐரோப்பாவில் வாழைப் பழ மாவுக்குக் கிராக்கி அதிகமிருந்து வருகிறது. வாழைப்பழங்களை உலர்த்தி மாவாக்கிவிடலாம். இது பிரயாணிகளுக்கு மிகவும் ஏற்ற ஆகாரப் பொருளாகும். இது ருசியிலும் நன்றாக இருக்கிறது. மலபந்தம், சீதபேதி, வயிற்று வலி, டைபாய்டு ஜுரம், கீல்வாதம் போன்ற பல நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் பேர்வழிகளுக்கு இது நல்ல ஆகாரமாயிருக்கிறதாம்.

எனவே, வாழைப்பழத்தை நம் நாட்டவர் அதிகம் உபயோகப்படுத்துகின்றனரே தவிர, வாழைப் பழமாவைத் தயாரித்து வைத்துக் கொள்வதில்லை. ஆபிரிக்கர்களோ, வாழைப்பழங்களை யுலர்த்தி மாவாக்கி வைத்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் முற்றின வாழைக் காயையும் மாவாக ஆக்கித்தான் ரொட்டி சுட்டுச் சாப்பிடுகின்றனர். இன்னம் வாழைப் பழத்தைப் போண்டாவாகவும், 'புட்டிங்' எனப்படும் ஆங்கில முறைப்படியான பலகாரமாகவும், பச்சடியாகவும், பாயசமாகவும் செய்து சாப்பிட மிக ருசியாய் இருக்கும்.



ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர்.

# ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர்

**"கண்ணன்"**

ஸ்திரீகளுக்கும் சங்கீதத்துக்கும் ஓர் வித இயற்கை உறவு—பந்தம்—இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. உருக்கமான கீதங்களை உள்ளமுருகும்படியான சாரீரத்தில் பாடக்கூடிய தன்மை பெண்களிடத்தில் தான் சிலாக்கியமாக உள்ளது. சங்கீத உலகில் ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர் அவர்களை அறியாதவர்களே இருக்கமாட்டார்கள்.

ஸ்ரீமதி அலமேலு அம்மாள் சென்னையில் பிரபல வக்கீலாக இருந்துவரும் ஸ்ரீமான் கே. எஸ். ஜயராமய்யரின் மனைவியாவார். எப்படி அம்மாளுக்கு சங்கீதக்கலையில் அபார அபிமானமுண்டோ அதேபோல அய்யரவர்களும் அக்கலையின் அபிவிருத்தியில் மிகவும் நாட்டமுள்ளவர். தன்மனைவியின் நோக்கங்களையும், , காரியங்களையும் மனமுவந்து ஆதரித்து வேண்டிய ஊக்கமும், இதர வசதிகளும் அவருக்குக் கொடுத்து வருவதுமன்றி தனக்கு சாகவாசம் கிடைக்கும் சமயங்களிலெல்லாம் தானும் நேரடியாகவே சங்கீத மஹாநாடுகளிலும், கச்சேரிகளிலும் கலந்து கொள்வார். இப்படி இவ்விருவரும் ஒருமனப்பட்டு கர்னாடக சங்கீதத்துக்குச் செய்துவரும் பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

ஸ்ரீமதி அலமேலு அம்மாள் சங்கீத சாஸ்திரத்தில் நல்ல பாண்டித்யம் பெற்றவர். அதுமட்டுமல்லாது இனிய சாரீரம் படைத்தவர். அவரது சங்கீதத்தைக் கேட்டு மகிழும் பாக்கியம் சென்னைமாநகர்வாசிகளுக்கு மட்டுமின்றி இதரர்களுக்கும் கிட்டும்படி அவர் சில பாட்டுக்களை வெகு அழகாக கிராமபோனில் பாடியிருக்கிறார். பக்திரசம் ததும்பும் கீர்த்தனங்கள், ஜயதேவரது அஷ்டபதிகளினின்றும் அவர் பாடியிருக்கும் பாக்கள் கேட்பவர் மனதைப் பரவசப்படுத்துகின்றன. ஒரு சில சந்தர்ப்பங்களில் ஸ்ரீமதி அய்யர் பாடுவதை நான் நேரில் கேட்டிருக்கிறேன். அச்சந்தர்ப்பங்களில் திரு. அய்யர் அவர்களும் பிரசன்னமாயிருந்து தன்னை மறந்து சங்கீதத்தில் லயித்திருப்பார். இவர் இவ்விதம் கச்சேரிகளிலும், கிராமபோனிலும் பாடமுன் வந்தது பலராலும் புகழத்தக்கது. குடும்ப ஸ்திரீகள் சில நுண்ணிய கலைகளில் தலைசிறந்து விளங்கி வருகிறார்கள். ஆனால் அவர்களின் சிறப்பையும், அவர்கள் அக்கலையை மனம் சந்தோஷமும் பரவசமும் அடையும்படி கையாளும் முறையையும் ரசிகர்கள் எல்லோரும் கண்டுகளிக்க முடியாதபடி இருந்து வந்தது. சபையில் வந்து பாடுவது ஒரு குறிப்பிட்ட குலத்து ஸ்திரீகளின் தொழில் என்ற பழக்கத்தையும் வழக்கத்தையும், முறையையும் மீறி ஸ்ரீமதி அய்யர் போன்ற பிரபல குடும்பஸ்திரீகள் முன் வந்து ஆடவரும், பெண்டிரும் நிறைந்த சபைகளில் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டி பொது ஜனங்களை மகிழச் செய்தது சங்கீதக் கலைவளர்ச்சியில் ஒரு பெரும் புரட்சியே உண்டாக்கியதாகும். "குடும்ப ஸ்திரீயாவது, கச்சேரி நடத்துவதாவது" என்ற மனப்பான்மை நாட்டைவிட்டு அகலச் செய்தார் ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர். சங்கீதக்கலையின் வளர்ச்சிக்காக எவ்வித நியாயமான முயற்சிகளும் அவசியமானால் சமூகக் கட்டுகளையும், அர்த்தமற்ற சம்பிரதாயங்களையும் புறக்கணித்துத் தான் ஆகவேண்டு

மென்ற மனப்பான்மை யுடையவர் அவர் என்பது அவர் சங்கீத உலகில் செய்து வரும் காரியங்களிலிருந்து புலப்படுகிறது.

சினிமாத் தொழில் சிறந்து விளங்க வேண்டுமானால் கௌரவ குடும்பஸ்திரீகளும், படித்த பெண்களும் அக்கலை வளர்ச்சியில் கவனம் செலுத்தவேண்டுமென்ற எண்ணம் பரவிவரும் இந்த நாளில் அந்தப்பணியிலும் தன்பங்கை எடுத்துக்கொள்ளத் தயங்கவில்லை. சில சினிமா டைரக்டர்களுக்கு தனது யோசனைகளையும், கருத்துக்களையும் எடுத்துச்சொல்லி உதவி வந்திருக்கிறார். ஒரு கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவராகவும் இருக்க முன் வந்தார். இப்படியே ஸ்ரீமதி அய்யர் தனது அவகாசத்தையும், சக்தியையும் கலைத்தேவிக்கு சேவை செய்வதிலேயே செலவளித்து வருகிறார்.

சென்னைமா நகரத்திலேயே ஸ்ரீமதி அய்யர் வாழ்ந்து வந்தும் மேல்நாட்டு நாகரிகத்தின் பகட்டான அம்சங்கள் அவரைப் பிடித்துக்கொள்ள அவர் சற்றும் இடங்கொடுக்கவில்லை. தனது நடை உடை பாவனைகளில் பழைய முறைகளையே அனுஷ்டித்து வருகிறார்கள். நம் நாகரீகத்தின் சிறந்த அம்சங்கள், நாம் இதர நாகரீகத்திலுள்ள சில முறைகளை ஏற்றுக்கொள்வதால் நசித்துப் போகக் கூடாது என்பதே அவர் விருப்பம். இன்றும் தன் கணவரின் தேவைகளைக் கவனிப்பதையே முதல் கடமையாகப்பாவித்து நடந்து வருகிறார். பொதுச்சேவைகளில் ஈடுபட்ட சில ஸ்திரீகளைப்போல் கிரஹ நிர்வாஹத்தைப் புறக்கணிப்பவரல்லர் ஸ்ரீமதி அலமேலு அவர்கள். வீட்டுக் காரியங்கள் சமயல் முதல் எல்லா விஷயங்களும் சரிவர நடந்து வருகிறதாவென்று நேரில் கவனித்து வருவதைக்காண இந்து ஸ்திரீயின் உயர்வு எவ்வளவு என்பது விளங்கும்! இன்றும் தனக்கு எவ்வளவு சுதந்திரம் இருந்தபோதிலும் எந்த விஷயங்களிலும் தன் கணவரைக் கலந்து கொண்டு தான் செய்வார்கள்.

சங்கீத ரத்தினங்களுள் ஸ்ரீமதி அய்யருக்கு தியாகய்ய ஸ்வாமிகளிடத்தில் அபார பக்தியுண்டு. அவரது பக்திமிகும் கீர்த்தனங்களை மிகவும் ஆழ்ந்து படித்துத் தெளிந்து தான் உணர்ந்த உண்மைகளையும், உணர்ச்சிகளையும் பிறரும் அறிந்து மகிழ்ச்சியுற வேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்ரீயுத ஸ்வாமிகளின் கீர்த்தனங்களைப் பற்றி சென்னை ஒய். எம். ஸி. ஏ. (Y. M. C. A.) யில் பல சொற்பொழிவுகள் ஆற்றி வந்திருக்கிறார். காலஞ்சென்ற சங்கீத ரத்னாகர கீர்த்தனாச்சார்யா ஸி. ஆர். ஸ்ரீனிவாசயங்காரிடத்தும் இவருக்குப் பரிச்சயமும், பக்தியும் உண்டு. பல சங்கீத கலை அபிவிருத்தி சங்கங்களில் ஸ்ரீமதி அய்யர் பலவித ஹோதாவில் பணியாற்றி வந்திருக்கிறார்.

ஸ்ரீமதி அய்யரின் சேவை சங்கீதக் கலைக்கு மட்டும்தான் என்று எண்ணிவிட வேண்டாம். சமூக முன்னேற்றத்துக்கான இதர ஸ்தாபனங்களில்தான் நேரடியாகக்கலந்து அதிகமாக வேலை செய்யாத போதிலும் அவற்றுக்கும் தன்னாலியன்ற பண உதவியும், ஆதரவையும் அளித்து வந்திருக்கிறார். ஆனால் அவரது மனதை பூரணமாகக் கவர்ந்துள்ளது சங்கீதக் கலையே. ஓர் உன்னதக்கலையின் வளர்ச்சியில் ஈடுபட்டு பாடுபட்டுவரும் ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர் நல்லதிடகாத்திரத்துடனும், தேகசௌக்கியத்துடனும் நீண்டகாலம் வாழ்ந்து வரவேண்டுமென்று எல்லாம் வல்ல பராசக்தியை வேண்டுகின்றேன். மற்றும் ஸ்ரீமதி அய்யர் அவர்கள் ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கான பலதுறைகளிலும் போதிய ஊக்கமும், ஆவலும் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர் மனது வைத்தால் எவ்வளவோ காரியங்கள் செய்யலாம். தன் சகோதரிகள் இன்புற வேண்டிய வேலைகளில் ஈடுபடுவாரென்று நம்புகிறேன்.



# மாதர் மறுமணம்

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி

நாகரிகமடைந்த மேனாடுகளில் பெண்களே முன் வந்து தங்களுடைய குறைபாடுகளையும், கட்டுப்பாடுகளையும் நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டில் ஸ்திரீகளுடைய குறைகளை புருஷர்கள் பரம்பரையாக நிவர்த்தி செய்து வருகிறார்கள். நூறு வருஷங்களுக்குமுன் வங்காளத்தில் அவதரித்த ராஜாராம் மோஹன்ராய் என்ற பெரியார் பெண்கள் உடன் கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை அரும்பாடு பட்டு நீக்கினார். வைதீக எதிர்ப்புகளை தகர்த்து எறிந்தார். பண்டித வித்யாசகரர் விதவைகள் மறுமண மசோதாவை சட்டமாக்கினார். ஆந்திரதேசத்தில் ராவ்பகதூர் வீரேசலிங்கம் பந்துலு என்ற மஹான் விதவைகளுக்காக ஒரு கல்லூரியை ஏற்படுத்தினது மட்டு மன்றி விதவா விவாஹங்கள் செய்ய முன் வந்தவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தையும், ஆதரவையும், வசதிகளையும் அளித்துதவினார். பஞ்சாப் மாகாணத்தில் சர். லாலா கங்காராம் என்ற பிரபு விதவா விவாஹசகாய சபைக்கு 50 லக்ஷரூபாய் நன்கொடை அளித்தார்.

இன்னும் பம்பாய், வங்காளம் முதலிய இதர மாகாணங்களிலும் பல பெரியோர்கள் விதவைகள் நன்மைக்கான பல காரியங்களைச் செய்து வந்திருக்கிறார்கள். பொதுவாக நம் தேசத்தில் கல்வி மிகவும் குறைவு. அதிலும் பெண்களில் 100ல் 3 பேர்தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். கொடிய பழக்க வழக்கங்கள் சமூகத்திற்கே தீங்கை விளைக்கின்றன. நம் நாட்டினர் படும்கஷ்ட நிஷ்டூரங்களுக்கு அளவில்லை. தேசமுன்னேற்றத்துக்காக பலதுறைகளில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. மஹாத்மா காந்தி அடிகள் ஒருவரே எல்லாத்துறைகளிலும் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பவர்.

இளம் பெண்கள் விதவையானால் மீண்டும் அவர்கள் மணம் புரிவதற்கு வேண்டிய தைர்யத்தையும், ஒத்தாசைகளையும் கட்டாயம் சமூகத்தின் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் செய்ய வேண்டியது கடமையாகும். நம் நாட்டில் பால்ய விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. பால்ய விவாஹம் பலவித இன்னல்களை உண்டாக்குகிறது. 5 வயதுக்குள் கல்யாணம் செய்யப்பட்டிருக்கும் பெண் குழந்தைகளின் தொகை 2,18,463ம், 10 வயதிற்குள் கல்யாணம் செய்யப் பட்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கை 20,166,87ம், 10 வயதிற்கும் 15 வயதிற்கு மிடையே மணம் செய்து கொண்ட மங்கையரின் தொகை 63,30,207ம் ஆகின்றது. 15 வயதுக்குட்பட்ட விதவைகள் சுமார் நான்கு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இது எவ்வளவு கொடூரமான நிலைமை! இவ்வளவு இளங் கன்னியரும் கைம்பெண்ணெனத் தள்ளப்பட்டு இயற்கைக்கு விரோதமான நரக வாழ்வை இப்பூவுலகில் வலுப்படுத்தி வாழும்படி செய்யவேண்டுமோ? இதனால் எவ்வளவு தீங்குகள் நிகழும்? பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர்கள் கூட பழக்க

வழக்கங்களுக்கு அடிமைகளாகி அத்தளைகளைத் தங்கள் மனச்சாட்சிக்கு மாறாகப் பூண்டு வருகின்றனர்.

இன்று பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்ரஸ்தம், சன்யாசம் என்ற நான்கு முறைகளும் நிலை கெட்டு நிற்கின்றன. மக்களும் அவைகளின் அடிப்படையான அஸ்திவாரங்களை கைநழுவ விட்டு விட்டனர். பாவம்! அறியாப்பெண்கள் மட்டும் சாஸ்திரத்துக்குட்பட்டு நடக்கவேண்டுமாம்! சாஸ்திரம் பால்ய மணத்தை ஆதரிக்கவில்லை. கைம்பெண்கள் தலையை மொட்டை யடிக்கவேண்டுமென்று எந்த சாஸ்திரமும் சொல்ல வில்லை. இந்த சமூக வழக்கங்கள் அவ்வப்போதிருந்த கால தேச நிலைமையை உத்தேசித்து மத்திய காலத்தில் மக்களால் புகுத்தப்பட்டவையேயன்றி நிரந்தர சாஸ்திர விதிகள் அல்ல. இன்று தேசத்தில் எவ்வளவோ நவீன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகள் தற்காலத்துக்குச் சற்றும் பொருத்த மற்றவை. அவைகளை இன்றும் கையாளுவது நியாயமாகாது. மற்றவர்களைக் கடைப்பிடித்து நடக்கும்படி வற்புறுத்துவதும் புத்திசாலித்தனமாகாது. விதவைகள் என்ற வகுப்பினர் அனுபவித்து வரும் கஷ்ட நிஷ்டூரங்களை போக்குவது ஒவ்வொருவருடைய தர்மமுமாகும். பால்யவிவாஹம் என்ற தீய முறை நாட்டினின்றும் ஒழியவேண்டும்.

முற்காலத்தில் மங்கையர்கள் கல்வி கற்று தகுந்த பக்குவமும் வயதும் அடைந்தபின் தங்களுக்கு விருப்பமான வரனைத் தாமே வரித்து மணம் புரிந்து இன்ப வாழ்க்கை நடத்தினார்கள். இக்காலத்தில் புருஷன் பெண்ணைப் பார்ப்பதில்லை; பெண் புருஷனைப்பார்ப்பதில்லை; மத்தியில் இருப்பவர்கள் மணத்தை தங்கள் சௌகரியங்களை யுத்தேசித்து முடிவுசெய்து வருகின்றனர். கல்யாணம் வியாபாரமாகி விட்டது. இதனால் தம்பதிகளுக்குள் பரஸ்பரம் ஒற்றுமை இல்லாமல் ஒருவரை ஒருவர் பிரிய நேரிடுகிறது. பதிவிருதா தர்மம், பத்தினி விரதம் இவைகளை ஆண் பெண் இருசாராரும் அனுசரித்தால்தான் தேசமும் குடும்பமும் தூயவாழ்வை அடைந்து மேன்மையுற்று விளங்கும். இவ்வித மேன்மையை அடைய இருபாலாரும் சமத்துவமாய் சம உரிமைகளுடன் வாழ்க்கை நடத்தவேண்டும். ஸ்திரீகள் அடிமைகள் என்றும், தாதரென்றும் கருதப்படும் மனப்பான்மை ஒழிந்து அவர்களுக்கு ஆடவருடன் சரிசமானமான வாழ்வை அளிக்கவேண்டும்.

[காரைக்குடி மாதர்மறுமண சகாய சங்கத்தின் நாலாவது ஆண்டு விழா செப்டம்பர் மாதம் 15உ பிற்பகல் ‘குமரன்’ ஆசிரியர் திரு. சொ. முருகப்பா அவர்களின் வீட்டில் அமைக்கப்பெற்ற அழகிய பந்தலில் நடைபெற்றது. பலதொகுதிகளிலிருந்தும் சுமார் 700 பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். பலஸ்திரீகளும் விழாவில் பங்கெடுத்துக்கொண்டனர். ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டியவர்கள் தலைமை வகித்துச் செய்த சொற்பொழிவின் சுருக்கமே மேலே பிரசுரித்திருப்பது ப—ர்.]



# ஸரஸ்வதி

"சமுனி"

**ஸ**ரஸ்வதி தொன்று தொட்ட தெய்வம். உலகத்திலுள்ள சக்திகளெல்லாம் சரஸ்வதியினருளே. சரஸ்வதி உலகத்தில் யாவரும் தொழ வேண்டிய தெய்வம். எல்லா சக்திகட்கும் சரஸ்வதியே மூல சக்தியாவாள். சரஸ்வதியை நாம் ஆண்டுக்கொருமுறையே ஆராதிக்கின்றோம். ஆகையால் அவள் கருணை இன்னும் நமக்குப் பிறக்கவில்லை.

யாவரும் கம்பராகிவிட முடியவில்லை. அனைவரும் வால்மீகியாகிவிட முடியவில்லை. ஏன்? அவர்கள்போல் நாம் அனைவரும் அவளைப் பூஜிக்கவில்லை. அவர்கள் அனுபவ பூசை செய்தார்கள். இப்போது ஐரோப்பா அந்த மாதிரி பூசையை சரஸ்வதிக்குச் செய்துகொண்டிருக்கிறது. அதனாலே எத்தொழிலும் அங்கிருந்தே உண்டாகி நமக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. அவர்கள் பூஜிப்பதாவது அறிவை வளர்ப்பதென்பது. சரஸ்வதி அறிவு மயம், அறிவே அவள். ஆயுத பூசையும் ஐரோப்பியர்கள் செய்கிறார்கள். அதனால் அவர்களே அறிவையும் தொழிலையும் ஆள்கிறார்கள். அவ்வறிவாலே, தொழிலாலே ஐரோப்பியர் நம்மெல்லோரையும் ஆள்கிறார்கள்.

கம்பர் சரஸ்வதி பூசையை நன்கு இயற்றினர். திருவள்ளுவரைப்போல் முன்னுமில்லை, பின்னுமில்லை, உண்டாகப்போவதுமில்லை. இவ்விருவரும் சரஸ்வதியைப் பூசித்தவர்கள். அறிவை நன்கு வளர்த்தவர்கள். அறிவை இயற்கையுடன் சேர்த்து வளர்த்தார்கள். இவ்விருவருமே தமிழ் நாட்டுக்குக் கண்மணி போன்றவர்கள்.

சரஸ்வதியை கிரேக்கர், "மினர்வா" என்னும் பெயரால் அழைத்தார்கள். சில காலத்துக்கு முன்னர் அவர்கள் அந்தச் சக்தியின் புத்திரர்களாகக் கொண்டாடப் பெற்றார்கள்.

நமது நாட்டினரான—சரஸ்வதியின் உண்மை இந்தியப் புத்திரரான—டாக்டர் போஸ் என்பவர் புதிய முறையான சாஸ்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். மேல்நாட்டாராலும் வெல்ல முடியாத தொழிலை யுடையவராக இருக்கிறார். நமது தேகம் போலவே தாவரங்களும் இருக்கின்றனவென்று அவர் கூறுகிறார். தாவரங்களிலும் உயிரிருக்கின்றது, சுகம் இருக்கின்றது, துக்கமிருக்கின்றது, ஆனந்தமிருக்கின்றது, வாட்டமிருக்கின்றது என்று அவர் கண்டிருக்கிறார். இப்படி இதுவரையில் யாரும், எத்தேசத்து விஞ்ஞான சாஸ்திரியும் காணவேயில்லை. இவற்றிற்குக் கருவிகளும் கண்டிருக்கிறார்.

நமது முன்னோர் தொழில் வல்லார். நாமோ தொழில் முறையைக் கைவிட்டு விட்டோம். நமது முன்னோர்கள் சிற்ப வல்லமையை இன்னும் எல்லோரா, மகாபலிபுரம் முதலிய இடங்கள் காட்டிக்கொண்டிருக்கின்றன. தனிகர்கள்

தமக்குப் பெயர்வரவேண்டுமென்றெண்ணி, அதிகாரிக்கு ஆட்பட்டு நகரங்களில் டாம்பீகமாகத் தருமம் செய்கிறார்கள். அது தருமமாகாது. நமக்கு அடுத்த தலை முறையைக் காப்பாற்றக் கூடியபடி பிள்ளைகட்கு வித்தையைக் கற்றுக் கொடுப்பதே தருமம்.

சரஸ்வதி பூசையன்று நாம் எல்லோரும் சரஸ்வதி தேவியின் உருவத்தை அலங்கரித்துப் பண்டப் பலாதிகள் சமர்ப்பித்துத் தொழுகின்றோம். இப்படிச் செய்வதைப் பூரணமான, உண்மையான சரஸ்வதி பூசையாக நமது முன்னோர்கள் கருதவில்லை.

அறிவைச்சம்பாதிக்கும் பொருட்டுத் தீராத ஆவலால் சிரத்தையோடு கல்வி பயின்று வருபவர்களும், வித்தையைச் சம்பாதிக்கும்பொருட்டு வருந்தி உழைப்பவரும், பூமி—வான—தாவர—கணித—அரசாங்க—சமய சாஸ்திரங்களைக் கற்றோரும், இயற்கையின் எண்ணற்ற அற்புதங்களை அறியவிரும்பி இயற்கை சாஸ்திரம் பயில்வோருமே, உண்மையான சரஸ்வதியைப் பூசிப்போராவர்.

சரஸ்வதி அறுபத்துநான்கு கலை ஞானங்களின் தூயவடிவாய் விளங்குகின்றாள். ஆகவே அறிவுத் தெய்வமாக நாம் சரஸ்வதியைக்கருதி, நாளும் அத்தெய்வத்தை நமது உள்ளத்தினிடமாக தூய சிந்தனையோடு போற்றிப் பரவுதலே இலாக்கியம். இயற்கையின் அழகுச் செல்வம் சரஸ்வதியாகவும் நாம் கொள்ள வேண்டும்.

சரஸ்வதியாம் கலை தெய்வத்திற்கு ஞானமே மேனி; தூய்மையே ஆடை; வாய்மையே மெய்யணி; சாஸ்திரமே முகம்; கற்பனையே இதழ்; காவியமே இதயம்; சிற்பம் முதலான கலைகள் தேவியின் மலர்க்கரங்கள்; கவிஞர் செந்நாவே இவள் மலர்ப்பதம்.

வெள்ளைக்கலை யுடுத்தி, வெள்ளைப்பணி பூண்டு, வெள்ளைக்கமலத்தில் வீற்றிருக்கும் வெள்ளைத் தெய்வத்தை நமது மனக்கண்களிலே சிந்திப்போம்.

பெண்கள் சரஸ்வதிஸ்வரூபம். திருவிளக்குகளுக்கு நிகரானவர்கள். விளக்கை விளக்கி, எண்ணெயும் திரியுமிட்டு, பூச்சூட்டி, தீபமேற்றினால் தானே அது சோபிக்கும். அப்படியே நமது பெண்கள் கல்வி அறிவுடனும், நற்குணங்களுடனும் விளங்கினால் அல்லவோ அவர்கள் தீபமேற்றப்பட்ட திருவிளக்குக்கு நிகராகச் சோபிப்பார்கள்.

தமிழ்ப் பெண்கள் சரஸ்வதிபோலவும், லட்சுமி போலவும் விளங்க வேண்டும். உலகாண்ட மீனாட்சி தமிழ்ப்பெண். நமது தாய்மார்களான கண்ணகி, வாசுகி, மங்கையர்க்கரசி, ஆண்டாள், புனிதவதி, திலகவதி முதலியவர்கள் அறிவும் திருவும் மிக்கத் தமிழ்ப்பெண்மணிகளாவார்கள்.

சகோதரிகாள்! அதிகாலையில் எழுந்திருங்கள். சுத்த நீரிலே நீராடுங்கள். தேவி விழையும் அறிவைத்தினே தினே கல்வியைக்கொண்டு பெருக்கி, தமிழுலகுக்கு உபகரியுங்கள். தேவி உங்களுக்குச் சகல மங்களங்களையும் அருளுவாள். எனது தாய்மாருக்கு வணக்கம். எனது சகோதரிகளுக்கு வாழ்த்து. வாழ்க யாவரும். வந்தே மாதரம்!



# விடுகதை வினா

திரு. ஸி. எஸ். ஜகதீசசுந்தரம்

1. பட்டை பட்டை நீக்கி பதினாறு பட்டை நீக்கி முத்து பட்டை நீக்கி முன்னே வாராள் சீமாட்டி.

2. பந்து பந்தடா புளியம் பந்தடா நின்று தாக்கடா உயிரைப் போக்கடா.

3. பத்துவிரல் பந்தாட ஐந்து விரல் அமர்ந்திருக்க சூரியனுடன் சூதாட எமனுடன் வாதாட.

4. பச்சை பச்சென்றிருக்கும் பாகற்காயுமல்ல பக்கத்தில் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல உருக்கினால் நெய்யொழுகும் வெண்ணெயுமல்ல.

5. போவான் வருவான் திம்மப்பன் ஒரு காலில் நிற்பான் திம்மப்பன்.

6. வட்டமதி போலிருக்கும் வன்னி கொடிதாவும், கொட்டுவார் கைநின்று கூத்தாடும், சுட்டால் அரகரா வென்னுமே அம்பல சோமாசி ஒரு விடி விட்டேனீ துரை.

7. மூக்குத்தி போல் பூ பூக்கும் அப்படா என்று காய் காய்க்கும்.

8. அடிமத்தளம் இலை பர்வதம் குலை சிறுசு காய் துவர்ப்பு பழம் இனிப்பு.

9. ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது.

10. ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே பச்சைப்பாம்பு தொங்குகிறது.

11. ஆழக்குழி வெட்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை.

12. மந்திரமெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே.

13. பந்தற்கால் நாலு பவழப்பல் பத்து வெள்ளித்தடி இரண்டு வெண்சாமரம் ஒன்று.

14. எங்கள் தம்பி நல்லதம்பி பந்தடிப்பான் பயிரடிப்பான் நூறுபேரை நொறுங்கடிப்பான்.

15. ஆயிரம்பேர் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்ட, ஒருவன் கண்பட்டே உருகுலைந்து போயிற்று.

16. காஞ்சிபுரம் சேலையை மடிக்க முடியாது பட்டணத்து சில்லறையை எண்ண முடியாது.

---

1. வாழைப்பூ, 2. துப்பாக்கி, 3. வறட்டி, 4. முத்துக்கொட்டை, 5. கதவு, 6. வறட்டி 7. நெரிஞ்சிப்பூ, நெரிஞ்சிமுள், 8. வாழைமரம், 9. எலுமிச்சம்பழம், 10. புடலங்காய், 11. பனைமரம், 12. பருத்தி, 13. பசு, 14. ஈர்வலி, 15. தேன் கூடு, 16. வானம், நக்ஷத்திரம்,

17. கொக்கு நிற்க நிற்க குளம் வற்ற வற்ற.

18. ஒரு குதி குதிப்பான் திம்மப்பன் பல்லை இளிப்பான் திம்மப்பன்.

19. அன்புடன் ஒரு பறவை இன்பமுடன் வந்து தென்புடன் பாடியது, அதை அன்புபாராட்டாமல் அடித்துத் துரத்தி விட்டேன்.

20. கார்த்திகை மார்கழி பூக்கும் பூ, கானகர் ஜோனகர் விற்கும் பூ, மன்னுதி மன்னர் மதிக்கும் பூ, மதியுள்ள மந்திரி கொள்ளும் பூ.

21. காக்கையைப்போல கருமை நிறம், கையால் விண்டால் ஊதாநிறம், வாயால் மென்றால் நீல நிறம், சதுர்த்தியில் வந்திடும், பாம்பின் பெயரே அதற்குண்டு, பெண்மணியே இதன் பெயரை விளம்புவாயே.

22. பார்க்கப் பெருத்திருக்கும் வெள்ளரியுமல்ல, பச்சைப் பச்சென்றிருக்கும் பம்பளிமாசல்ல, உள்ளே சிவந்திருக்கும் கொய்யாவுமல்ல, கறுத்த கருவிதைகள் வரிசைபடவிருக்கும் பாங்குடனே இதன் பெயரை பகருவாயே.

23. அடிசிவப்பு நடுபச்சை நுனிவெள்ளை அன்புடனே இக்கதையை அறைகுவாயே.

24. நட்டாற்றில் முட்டை மிதக்குகிறது.

25. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி.

---

17. விளக்கு, 18. நெல் பொரி, 19. கொசு, 20. சிப்பி முத்து, 21. நாவல்பழம், 22. கும்மட்டிப்பழம், 23. வெங்காயம், 24. கப்பல், 25. மழை.

## மதிப்புரை

### பத்மராஜு

(இனியதுப்பறியும் நாவல்)

இதை எழுதியவர் நம் "கிரஹலக்ஷ்மி" க்கு அடிக்கடி சிறுகதைகள் எழுதி ஆதரவு காட்டிவரும் ஸ்ரீமதி பத்மாசனி அம்மாள் அவர்கள். இந்த மனம் கவரும் நவீனம் சில ஆண்டுகளுக்கு முன்னர் "சுதேசமித்திரன்" தினசரியில் பிரசுரமாயிருந்தது. அது சமயம் அதைப்பலர் புகழ்ந்து புத்தக ரூபமாகப் பிரசுரிக்கும்படி ஆசிரியை வேண்டிக் கொண்டனர். கதைப் போக்குரொம்பவும் அழகாக அமைந்திருக்கிறது. தமிழ்மக்கள் அனைவரும் ஸ்ரீமதி பத்மாசனியின் இம்முயற்சியை ஆதரிக்கக் கோருகிறோம். புத்தகம் விலை ரூபாய் 1-12-0. "சுதேசமித்திரன்" புத்தகசாலையிலும் இதர இடங்களிலும் கிடைக்கும்.



## சமையல்

# பிஸிபேளே ஹுளீ அன்னமும் உருளைக்கிழங்கு வடையும்

"ஜயம்"

ஆடி பதினெட்டாம் பெருக்கன்றைக்கு சாயந்திரம் இரண்டு பஸ்ஸை ஏற்படுத்திக்கொண்டு எங்களூர் ஸ்த்ரீ சமாஜம் மூலம் சுமார் ஐம்பது ஸ்திரீகள் (குழந்தைகள் கணக்கு ஸ்திரீகளின் ரெட்டிப்பிருக்கலாம்) 'கட்டிஞ்சாதம்' பிசைந்துகொண்டு தமாஷாக எங்களூர் அருகிலிருக்கும் பிரசித்தி பெற்ற "பிருந்தாவன" த் தோட்டத்திற்கு (Picnic) (வனபோஜனம்) போயிருந்தோம். மிகவும் வேடிக்கையாக இருந்தது. எங்களில் பத்து பெயர்கள் ஆளுக்கிரண்டு தினுசு சாப்பாடும் பக்ஷணமும் செய்து கொண்டு போ[illegible]னும். ஒன்றும் தர சாப்பாடு, எல்லோரும் சாப்பிட்டு காவேரியின் குட்டிக் குழந்தைகளான "பிருந்தாவன" தண்ணீர் தொட்டிகளிலும், இஷ்டப்பட்டவர்கள் காவேரியிலும் கைகால் அலம்பிக்கொண்டு பச்சை புல்லின் மேல் உட்கார்ந்துகொண்டு பாட்டுக் கச்சேரியும், வம்புக் கச்சேரியும், சீட்டு கச்சேரியுமாக நாலு ஐந்து கூட்டமாக (Groups) பிரிந்து மோக்களா செய்ய வர்ரம்பித்து விட்டோம். இவ்விதம் மாலை 6 மணியிலிருந்து 9 மணிவரைக்கும் கொட்டமடித்து விட்டு மைசூர் திரும்பினோம். என்னமோ எழுத வெண்ணி என்னமோ எழுதிக் கொண்டிருக்கிறேனே என்று சிரிக்காதேயுங்கள். அன்றையதின சாப்பாட்டில் நான் வெண்பொங்கலும் உருளைக்கிழங்கு வடையும் செய்துகொண்டு சென்றிருந்தேன். எங்களூர் சப்ஜட்ஜ் ராகவேந்திரராவின் சம்சாரம் சுந்தராபாய் "பிஸிபேளே ஹுளீ அன்னமும்" உருளைக்கிழங்கு வருவலும் தயாரித்துக் கொண்டு வந்திருந்தாள். அவ்விடம் கூடியிருந்த பெண்டிர்களனை வரும் என் வடையையும் சுந்தராபாயின் "பிஸிபேளே ஹுளீ அன்னு"வையும் மிகவும் ருசியாக இருக்கிறதென்று புகழ ஆரம்பித்துவிட்டனர். "மிகவும் நன்றாக தயாரித்திருக்கிறீர்களே! எவ்விதம் செய்தேள்? கொஞ்சம் சொல்லுங்களேன்?" என்று அநேகர் எங்களிருவரையும் சூழ்ந்து கொண்டு கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டனர். அன்று அவ்வளவு புகழ்ச்சியைப் பெற்ற அந்த சாப்பாடுகளைப் பற்றி நம் "கிரஹலக்ஷ்மி" வாசகப் பெண்மணிகளுக்கும் அவைகளைத் தயாரிக்கும் விதத்தை எழுதிப் போடலாமென்று ஆலோசித்தவளாக இவவிதம் எழுதத் தலைப்பட்டிருக்கிறேன்.

"பிஸிபேளே ஹுளீ அன்னு":—இது கன்னட பாஷையிலுள்ள பெயர். ஆயினும் சாதாரணமாக இந்த சாதத்தை மற்ற பாஷையினரும் கூட இதே பெயரில் அழைக்கிறார்கள். தமிழ் பாஷையில் இதின் பொருள் "சுடும் பருப்பு குழம்பு சாதம்" என்பதுதான். முதலில் அரைப்படி அரிசி சாதம் பிசைவதா யிருந்தால் ஒன்று அல்லது ஒன்றரை ஆழாக்கு தொவரம் பருப்பை ஈய்யம் பூசின பெரிய ஜோட்டுத் தவலையிலேயே வேகவைத்து விடவேண்டும். பின் உருளைக்கிழங்கும் வெங்காயமும், அல்லது உருளைக்கிழங்கும், பிஞ்சு

கத்தரிக்காயுமாகவோ, தோல் சீவி சிறிய துண்டுகளாக நறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். தான் குழம்பில் நிரம்ப இருந்தால் தான் ருசியாக விருக்கும். உருளைக் கிழங்கும் வெங்காயமும் சேர்த்து குழம்பு தயாரிப்பதாக இருந்தால் காய்களை வேகப் போடுவதற்கு முன் அரிந்த வெங்காயத்தை பாணலியில் சொட்டு எண்ணைவிட்டு நன்றாக வதக்கிவிட்டு வேக போட்டால்தான் 'கம்' என்று மணமாக இருக்கும்.

இந்த சாதத்தை இரண்டு விதத்தில் செய்வதுண்டு. துவரம்பருப்பு முக்கால் வெந்த உடன் அரிசியைக் களைந்து அதிலேயே கொட்டி வேகவைத்து, காயையும் அதனுடனேயே வேகப்போட்டு, எல்லாம் வெந்தபின் புளித்தண்ணீர், மசாலா, உப்பு எல்லாம் சேர்த்துக் கொதிக்க வைத்து இறக்குகிறார்கள். இதைவிட சுலபமாக சாதாரண வழக்கத்திலிருக்கும் விதத்தையே நான் எழுதத் தலைப்பட்டிருக்கிறேன். பருப்பை நன்றாக பருப்பு கல்பானையிலேயே வேகவைத்து எடுத்துக்கொண்டு, சாதமும் தனியாக செய்தெடுத்து வைத்துக் கொண்டு விட்டு, தானை குழம்பு செய்யும் ஜோடு தவலையில் வேகப்போட்டு விட்டு, தான் வெந்ததும் புளித்தண் கரைத்து கொட்டி உப்பும் போட்டு விடுவது. பாணலியில் எண்ணையும் நெய்யுமாக வைத்து ஒரு பிடி கொத்தமல்லி விரை, (தனியா) அதில் அரைப்பங்கு கடலைப் பருப்பு, வாசனைக்கு லவங்கப் பட்டை, கொஞ்சம் மராட்டி மொக்கு, கொஞ்சம் நாலே நாலு வெந்தயம், காரம் வேண்டிய அளவு மிளகாய் வற்றல் எல்லாவற்றையும் சிகப்பாக வறுத்தெடுத்துக் கொண்டு, ஒரு மூடி கொப்பரை தேங்காயை துருவி இவைகளுடன் சேர்த்துக் கொண்டு, உரலில் கொட்டி வெழுமனாக இடிக்க வேண்டும். இடித்த மசாலா பொடியை புளித்தண் நன்றாகக் கொதித்ததும் அதில் கொட்டி கலக்கவேண்டும். ஒரு கொதி வந்தவுடன் வெந்த பருப்பை அதில் கொட்டி கிளரி சாதத்தையும் ஒரு கிண்ணம் நெய்யையும் அத்துடன் சேர்த்து நன்றாக கிளரிவிடவேண்டும். மிளகாய் வற்றலையும், கடுகையும் குழம்பு சாத்தில் தாளித்து, பச்சைக் கருகப்பிலையும் பெருங்காயமும் சேர்த்து கொதிக்கவிட வேண்டும். தான் குழம்பு சாதம் எல்லாம் நன்றாக சேர்ந்து கொண்டு விட்டதென்று தெரிந்ததும் அடுப்பிலிருந்து இறக்கிவிட வேண்டும். சாதம் சரியாக தயாரித்தால் மிகவும ருசியாக விருக்கும்.

உருளைக்கிழங்கு வடை:— உருளைக் கிழங்கை இரண்டிரண்டாக பிளந்து சிறிதளவு உப்பும் மஞ்சள் பொடியும் போட்டு, வேகவைத்துக் கொட்டி, உரித்து வைத்து கொள்ளவும். வெங்காயத்தை தோல் நீக்கி பொடிப் பொடியாக அரிந்து பாணலியில் சொட்டு எண்ணை விட்டு, அதில் அரிந்த தூளை கொட்டி நன்றாகப் பிசைந்து அத்துடன், வதக்கின வெங்காயத்தையும் சேர்த்து, அதில் ஒரு சேரை பேனிரவையும், ஒரு சேர் கடலை மாவும், உப்பு பொடி, ஒரு சிமிட்டா சோடா உப்பு, அரிந்த பச்சை மிளகாய், கொத்தமல்லித் தழை, புளிப்பிற்கு எலுமிச்சம்பழரசம் எல்லாம் சேர்த்து நன்றாக பிசைய வேண்டும். கொஞ்சம் நெய் விழுதும் சேர்த்து பிசைய வேண்டும். பாணலியில் நெய் வைத்து, நெய் காய்ந்ததும் வடைமாவை உளுந்தம் வடைபோல் நடுவில் ரந்திரம் செய்த வடைகளாகத் தட்டி நெய்யில் போட்டு திருப்பிக் கொடுத்து, வடை நன்றாக வெந்து, ஓசை நின்று, பொன்னிறத்திற்கு திரும்பினதும் பாணலியிலிருந்து எடுத்து விடவேண்டும். வடை கொஞ்சம் சூடாக இருக்கும் பொழுதே தின்றால்தான் ருசியாக இருக்கும். ஆறிவிட்டால் சற்று மெத்தென்று ஆய்விடும். வெங்காயம் தாராளமாகச் சேர்த்தால்தான் அதிக மணமாக இருக்கும்.



# "மரப்பாச்சி மாமியார்"

ஸ்ரீமதி. அ. ரங்கம்மாள்

ஒரு ஊரில் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு கோபால் என்ற ஒரே ஒரு மகன். கோபால் தன் தந்தையை இளவயதிலேயே பறி கொடுத்தான். தன் தந்தை வைத்துப்போன சிறிய சம்பாத்தியத்தை வைத்துக்கொண்டு ஒரு சிறு கடை போட்டு ஜீவனம் செய்து வந்தான்.

கோபாலனின் மனைவி ஜானகி. அழகே உருவெடுத்தவள். மதியொத்த முகத்தினள். ஆனால் மதியிழந்த மனத்தினள். ஜானகி தன் மாமிபால் மிக்க அன்பு கொண்டு, அவள் மனம் கோணாது நடந்து வந்தாள். அவள் மாமியும் தன் மருமகளை பெற்ற பிள்ளையினும் பன்மடங்கு அன்பாய்ப்பார்த்து வந்தாள். கோபாலும் தன்னின்பக் காதலியோடும், தன்னன்புத் தாயுடனும் இனிது வாழ்ந்து வருவானாயினன்.

மூவரும் சந்தோஷமாய் வாழ்ந்து வரவே, மாமியார் திடீரென உயிர் துறந்தாள். அதனால் கோபாலனும் ஜானகியுமடைந்த துன்பத்திற்களவேயில்லை. கோபாலனின் துயரைப்பற்றி நாம் இங்கு கவனிக்க வேண்டியது ஒன்றுமில்லை. ஜானகியின் துயரமே நம் கதைக்குப் பிரதானமாயுள்ளது. ஜானகி மாமியைப்பறி கொடுத்ததாலுண்டான துயரம் மாதங்கள் சிலவாகியும் மாறினபாடில்லை. கோபால் தன் மனைவியின் துயரை நீக்க வேண்டி தன் தாயைப்போல் மரப்பாச்சியொன்று செய்து ஜானகியிடம் கொடுத்தான். ஜானகியும் அம்மரப்பாச்சியைப் பெற்று, அதனைத்தன் உண்மை மாமியினும் பன்மடங்காய் மதித்து, ஒழிந்த அறையொன்றில் வைத்துப் பாதுகாத்து வந்தாள்.

கோபால் வழக்கம்போல் இரவு கடையைப் பூட்டி வீடு வந்தான். வீட்டினுள் ஏறியதும், வீட்டின் பின்புற வாயிலினின்றும் ஏதோ வெள்ளைச்சேலை யணிந்த உருவமொன்று வெளிச்சென்றதைக் கண்டான். கண்டதும் அவனுக்கு மனதில் சந்தேகம் உண்டாயிற்று. சந்தேகம் ஒருபுறமிருக்க, பேய் பிசாசு என்ற பயம் ஒரு பக்கம். மெள்ள வீட்டின் பின்புறம் சென்றான். தன் மனைவி மரப்பாச்சி வைத்திருந்த அறையின் உள்வாயில் தாளிட்டிருப்பதையும் வெளிவாயில் திறந்து கிடப்பதையும் கண்டான். உடன் அறையினுள் சென்றான். அங்குச்சிலையொன்றும் தன் தாயின் மரப்பாச்சியுமிருந்தன. தன் மனைவிபால் ஏதோ சந்தேகம் கொண்டான். நாளை உண்மையறியலாம் என்றெண்ணியவனாய், தன் மனைவியிடத்து ஒன்றும் கேளாது சும்மா இருந்துவிட்டான்.

மறுநாள் கோபால் சிறிது முன்னேரத்தில் கடையை பூட்டி வீடு வந்துவிட்டான். வெண் பிறையொளி எங்கும் பால்போல் வீசுகின்றது. வீட்டின் திண்ணையில்

கோபாலன் ஆழ்ந்து யோசித்த வண்ணம் அமர்ந்திருந்தான். ஏதோ ஒரு வெள்ளை உருவம் வீட்டின் பின்புறத்திற்கு சென்று கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். உடனே தன் மனைவியை அவசரத்துடன் கூப்பிட்டுக்கொண்டே ஒழிந்த அறையின் பாற் சென்றான். ஜானகி ஓடிவந்து, "நாதா! அந்த அறைக்குட் செல்ல வேண்டாம்; இப்பொழுதுதான் மாமிக்கு சாதம் பரிமாறிவிட்டு வந்தேன்; சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள்; நாமிப்பொழுது சென்றால் மாமி ஓடிவிடுவார்கள்" என்று கூறியவண்ணம் கோபாலனைப்போக வொட்டாது கையைப் பிடித்தாள். கோபால் அவள் கைகளை உதறித்தள்ளி விட்டு பின்புறவாயில் வழியாய் அறையினுட் சென்றான். அறையினுள் இலைமுன் அடுத்த வீட்டுப் பெருந்தேவி இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். சாப்பாட்டானந்தத்தில் மூழ்கியிருந்த பெருந்தேவிக்கு இவர்கள் பேசிய பேச்சும், கோபாலன் தானிருக்கும் அறையில் நின்று சந்தடி செய்வதும் கேட்கவில்லை. கோபாலன் பெருந்தேவிக்குத் தெரியாமல் மெள்ள பின்புறமாகச் சென்று அவளது கொண்டைமயிரை இறுகப் பிடித்திழுத்தான். "ஐயோ!" என்றொரு சப்தம். "நாதா! மாமியை அடிக்க வேண்டாம் பாவம்; உங்களைப் பெற்றவளல்லவா" என்று கூறியவளாய் வீட்டினுள்ளிருந்த ஜானகி ஓடிவந்தாள். "உன் நாயகன் தாய்—உன் மாமி அல்லவா இவள்" என்று கோபாலன் கோபத்துடன் தன் மனைவியைக் கேட்டான். பெருந்தேவி தன் கணவன் கையில் சிக்கி நிற்பதை யறியாத ஜானகி, "ஆம் என் மாமியம்மை" என்று கூறிக்கொண்டே அறையினுள் நுழைந்தாள். தான் முதல் நாள் கொண்ட சந்தேகம் அவன் மனதில் வேரூன்றலாயிற்று. தன் மனைவி அண்டை வீட்டுப் பெருந்தேவிக்கு சாப்பாடு கொடுப்பதற்குச் செய்த சூழ்ச்சி இது வெனக் கூறினான். பெருந்தேவியை உதைத்து அப்புறம் தள்ளிவிட்டு, தன் மனைவியைத் தலைமயிரால் இறுகப்பிடித்தான். மரப்பாச்சியை எடுத்து அவள் கையில் கொடுத்தான். மடமடவென்றிழுத்து தெருவாயிலுக்குக் கொண்டு வந்தான். கழுத்தில் கையிட்டு ஜானகியை வெளியே தள்ளி கதவை உள் தாளிட்டுக் கொண்டான்.

அபலை, ஒன்றுமறியாத பேதை. இவை யாவும் 'மரப்பாச்சி மாமி'யால் வந்த விபத்து. பெருந்தேவி தன் வயிறை நிரப்பவேண்டி, ஒன்றுமறியா நம் ஜானகிக்கு, பொய்பல சொல்லி நம்பச் செய்து, கடைசியில் அவளை இக்கதிக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டாள். "நேற்று உன் மாமி வயிறு பசிக்குது என்று என்னிடம் கனவில் வந்து சாதம் கேட்டாள். உன் மாமியும் நானும் நெருங்கிப் பழகினவர்களானதால் அவள் என்னிடம் வந்து சொன்னாள். ஆகையினால் நீ நாளை முதல் மரப்பாச்சி வைத்திருக்கும் அறையில் சாதம் பரிமாறி வைத்து, அறையின் வெளிக்கதவைத் திறந்துவைத்து உள் கதவை தாளிட்டுவிடு; உன் மாமி வந்து சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவாள்." என்று பெருந்தேவி தன்னிடம் கூறிய பசப்பு வார்த்தைகளை இப்பொழுது ஜானகி கோபாலனுக்கு எடுத்துக் கூறினால் அவன் நம்பவா போகின்றான். என் செய்வாள் பேதைப் பெண். செய்வ





தொன்றும் அறியாதவளாய், தேம்பித் தேம்பி அழுத வண்ணம், மரப்பாச்சியைக் கையிற்கொண்டு வழி நடக்கலானாள்.

வெண்பிறை ஒளி எங்கும் பால்போல் வீசுகின்றது. ஜானகி போய்க்கொண்டிருக்கிறாள். அவளது கண்களினின்றும் நீர்த்திவலைகள் சொட்டுச் சொட்டாய் விழுந்துகொண்டேயிருக்கின்றன. பாவையின் மனத்துயரைக் கேட்பவர் யார்? கடைசியில் மரங்களடர்ந்த ஒரு சோலையினுள் வந்தாள். கள்வர் பயமான இடம் என்பதை அவள் அறியாள். மணி பனிரண்டு இருக்கும். நிலவு அடையப்போகும் சமயம். மேல் நடக்க வழியறியாத ஜானகி பக்கத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த தட்டைமரமொன்றில் ஏறி மறைந்திருந்து கொண்டாள்.

மணிக்கூர் ஒன்றிரண்டுகழிய, திருடர்கள் சிலர் தாம் திருடிய பொருள்களைப் பங்கு வைக்கவேண்டி அம் மரத்தடியில் தங்கினர். பொருள்களைப் பங்கிட்டுக் கொண்டிருக்கும்பொழுது உயரத்திலிருந்து மரப்பாவையொன்று அவர்கள் நடுவில் வந்து விழுந்தது. மரத்தின்மேல் ஜானகியிருப்பதையும், அவள் கையிலிருந்த மரப்பாச்சி அவள் தூங்குகையில் நழுவி விழுந்ததையும் அத்திருடர்கள் எங்ஙனம் அறிவர்? பேயோ, பிசாசோ என்று பயந்தவர்களாய் பொருள்களையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

பொழுது விடியலாயிற்று. ஜானகி மெல்ல கீழேயிறங்கிவந்தாள். என்ன அதிசயம்! மரத்தினடியில் நாணயங்கள் மிகுதியாய்க் கிடப்பதைக் கண்டாள். அவைகள் யாவற்றையும் தன் முன்தானையில் கட்டினாள். எல்லாம் மாமியால் வந்த அதிர்ஷ்டம் என்று எண்ணியவளாய் திரும்பி வீடு நோக்கி நடந்தாள்.

கோபால் வழக்கம்போல் தன் கடைக்குச் செல்ல எத்தனித்துக் கொண்டிருந்தான். ஜானகி தடதட வென்று தன் வீட்டினுள் சிரித்த முகத்துடன் ஏறுவதைக் கண்டான். அடித்துத் துறத்தப்பட்டவள் மீண்டும் ஏன் வந்தாள் என்று கோபால் கோபங்கொண்டவனாய் ஜானகியை அடிக்க நெருங்கினான். ஜானகி கோபாலனின் கோபத்தைப் பொருட்படுத்தாதவளாய், "எல்லாம் மாமியால் வந்த அதிர்ஷ்டம்" என்று கூறிக்கொண்டே தன்னிடமிருந்த சிறு கட்டை அவன் முன்னிலையில் போட்டாள். அவனும் நாணய ஒலிகேட்டதை யறிந்து கட்டை அவசரத்துடன் அவிழ்த்தான். என்ன ஆனந்தம்! அவன் கோபங்களெல்லாம் காற்றாய்ப் பறந்துபோயின. கோபால் ஜானகியை, "என் கட்டிக் கரும்பே!" என்று கூறியவனாய் வாரியணைத்து முத்தமிட்டான்.

இப்பொருளைப் பற்றிய விஷயம் ஒருவருக்கும் தெரியக்கூடாது என்றெண்ணிய இருவரும் பொருளத்தனையும் வீட்டினுள் ஓர் அறையில் குழி தோண்டிப் புதைத்து வைத்தனர். என்ன விருந்தாலும் அரண்மனை ரகசியம் அம்பலப்பரசியந்தானே. மேலும் இந்த பத்திரிகைக்காரர்கள் தான் இருக்கின்றார்களே! அவர்கள் அட்டூழியம் பொறுக்க முடியவில்லையே! மறுநாள் தினசரியொன்றில் "மரப்பாச்சி மாமியால் வந்த அதிர்ஷ்டம்" என்ற தலைப்பின் கீழ் மேற்கூறிய விஷயங்களனைத்தும் காணப்பட்டன.

இவைகளனைத்தையுமறிந்தான் நம் பேராசைப்பிரியன் வம்பன். தன் மனைவிக்கும் மரப்பாச்சி யொன்று செய்து கொடுத்து, "ஜானகியைப் போல் நீயும் போய்வா" என்று அனுப்பி வைத்தான்.

அடுத்த நாள் காலை கழுதை மீது முட்டாக்கிட்ட உருவம் ஒன்று ஊருக்கு வந்தது. உருவம் கழுதைமீது வைத்து நன்ருகக் கட்டப்பட்டிருந்தது. யாவரும் கழுதையை நெருங்க பயந்தனர். கடைசியில் பேராசைப் பிரியன் கழுதையையணுகி, கழுதை மேலிருக்கும் உருவம் என்னவென்று பார்த்தான். ஆ! என்ன!! வம்பனின் மனைவி தலை மொட்டையடிக்கப்பட்டு, முகத்தில் செம்புள்ளி கரும்புள்ளி குத்தப்பெற்று கழுதைமேல் கட்டப் பெற்றிருந்தாள். அவள் கழுத்திலணிந்திருந்த தாலியைக்கூடக் காணவில்லை. வம்பன் அப்படியே வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தரையில் விழுந்து மூர்ச்சையாயினன்.

சாயங்கால வேளை; இளங்காற்று ஜில்லென வீசிக்கொண்டிருந்தது. நான் எனது சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் அன்று வந்த தினசரி யொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் "முன்னாள் சென்றவள் கொண்டுவந்தாள்; பின்னாள் சென்றவள் கொடுத்து வந்தாள்" என்ற தலைப்பின்கீழ் மேலே யெழுதியுள்ள விஷயங்கள் காணப்பட்டன.





# இராமனும் சீதையும்

"சந்திரிகா"

அயோத்தி நகரில் பிறந்தவனும்
மிதிலை நகரினுக் கணிகலனும்
இராகவனென்னும் பெயருடையான்
வைதேஹியெனும் வனவனிதை
இரகுகுல திலகன் இராகவனும்
தீபஞ்சன் வழி விளைந்தவளாம்
இரவியின் வமிசத்திலுயர்ந்தவனும்
மதிகுலமதிமுக அழகினளாம்
தசரதப் பெருந்தகைப் புத்திரனும்
சயங்கொண்ட சனகனின் தவமகளாம்
வசிட்டரின் மனமகிழ் உயர்சீடன்
மேதசதாநந்தர் மாணவியாம்
கோசலையின் செல்வக் குழவியவன்
புகழ்மிகும் கதிர்நிலம் தந்தவளாம்
வனப்புமிகப் பெருவிழிகளினன்
அழகினதெல்லையாய் அமைந்தவளாம்
மாபெரும் யானையின் வலியுடையான்
புனல் வெளவும் நனி அன்னநடையினளாம்
ஸ்ரீசூர்ணந்திகழ் கருநுதலான்
மணங்கமழ் குங்குமந் திலகவதி

மங்கையர் மயங்குந் தடந்தோளான்
பங்கயக் கழலினள் கயல்நயனி
பிரபஞ்சமதனை ஆள்பவனும்
அபிராமன்மணி மைதிலியாம்
அரியணை யமர்ந்த அதியழகன்
விலையுயர் ஆடை அலங்க்ருதளாம்
தந்தை சொல் தவருத் தவத்தனயன்
பதிசொற் கடவாப் பாவையவள்
கருணையங் கடலவன் கனிவுடையோன்
கற்பேயுருவினள் கண்மணியும்
அரக்கர் பேரிருளை யழித்தவனும்
அளவிலா ஒளிவீசும் ரமணியவள்
சரணமென்றடைவோரை பாந்துகொள்
பரிவுமிகுந்தாள் தையலவள் [வான்
உலகமெல்லாம் புகழ் உத்தமனும்
உலகமுய்யவந்த உயர்நங்கை
அருள் அளி அமுதச் சுரபியவன்
இணைபிரியாதவள் இளநங்கை
அன்பெனும் கயிறினல் பிணையுறுவான்
புகழ்திரைலோக்கிய தம்பதிகள்.

# கால் கம்பளம்

"ஸரோஜா"


நாம் வீட்டிலேயே கந்தல் துணிகளை கொண்டு அழகழகான மாதிரிகளில் (Designs) கால் கம்பளம் தயாரிக்கும் விதத்தை விவரித்து எழுத துவக்கியுள்ளேன். இதைத் தயாரிக்க அதிக சிரமப்பட வேண்டியதில்லை. பணச் செலவும் இல்லை.

இதைத் தயாரிப்பதற்கு முதல் சாமான் எதுவென்றால் உங்கள் அகத்தில் நல்ல சாயமுள்ள கிழிந்த புடவைகள், துப்பட்டிகள், வேஷ்டிகள் முதலியவைகளை சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். வேண்டிய வர்ணத்துணிகள் கிடைக்காவிட்டால் அவசியமான வர்ணங்களில் வெளுப்புத் துணியை சாயத்தில் நனைத்து வைத்துக் கொள்ளலாம். பின் அந்தத் துணிகளை நீட்டுப் போக்காக குறைந்த பக்ஷம் இரண்டு முழம் நீளமாவது இருக்கும்படி (அதற்குமேல் எவ்வளவு நீளமாவது வைத்துக் கொள்ளலாம்)யும், அகலத்தில் மொத்தமான துணிகளை ஒரு அங்குலமும் மெல்லிய துணிகளை ஒன்றரை அங்குலமுமாக, நாடாக்களாக கிழித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வர்ணத்துணிகளையும் வெவ்வேறு பந்துகளாகச் சுற்றி ஒரு கூடையில் போட்டு வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கம்பளம் தைக்கப் போகும் சித்திரத்துக்கு எந்தெந்த வர்ணத்தில் எவ்வெவ்வளவு அகலம் தைக்கவேண்டுமோ அதற்கு வேண்டிய வர்ணத் துணியை கணிசமாக கணக்கிட்டு சேகரித்துக் கொண்ட பின்னரே வேலையைத் துவக்க வேண்டும். இல்லாவிடில் ஒரு வர்ணத்தில் தைக்க வேண்டிய சித்திரத்தை அரைவாசி சித்திரம் தைப்பதற்குள் அந்த வர்ணத் துணி முடிந்து போய்விட்டால், அந்த இடத்தில் மற்றொரு வர்ணத் துணியால் தைத்து நிறப்பினால் நன்றாக விராது.

இரண்டாவது காரியம் என்னவென்றால், உங்களுக்கு வேண்டிய அளவில் (சாதாரணமாக 6" x 4" அளவு பெரிய கம்பளம் சிறிய கம்பளம் எது தைப்பதற்கும் சௌகரியமாக இருக்கும்). இங்கு கொடுத்திருக்கும் நம்பர் 1 சித்திரத்தைப் போல் மரத்தில் ஓர் சட்டம் செய்து கொள்ள வேண்டும். பின்கோணி சாக்கைப்போன்ற மொத்தமானதும், மோட்டாவானதுமான கேன்வஸ் துணியை நீங்கள் கம்பளம் போட உத்தேசித்திருக்கும் அளவில் வாங்கிக்கொள்ள வேண்டும். அதில் உங்களுக்கு இஷ்டமான சித்திரங்களைப் பென்ஸிலினால் எழுதிக் கொள்ளவும். சித்திரத்தைச் சரியாக வரைந்த பின் அதன் மேல், மையினால் திருத்திவிட வேண்டும். நம்பர் 1 சித்திரத்தில் காண்பித்திருப்பதைப் போல் ஓர் கோணி ஊசியில் பெருமனான நூலை கோர்த்துக் கொண்டு கேன்வஸ்ஸில் ஒருதரம் குத்திக்கொண்டு சட்டத்தை சுற்றி மறுபடியும் கேன்வஸ்ஸில் குத்தி, இவ்விதம் இறக்கியும், துணி விறைப்பாக நிற்கும்படிக்கும் சுற்றிலும் தைக்கவேண்டும்.

அப்புறம் நம்பர் 2ம் படத்தில் காண்பித்திருப்பதைப் போல் மரப்பிடி போட்ட (பாவாடைக்கு தைக்கும் நாடாவைக் கொண்டு க்ரோஷா சௌக்கம் போடுகிற வளவு மொத்தமான) ஒரு க்ரோஷா ஊசியை கடையிலிருந்து வாங்கியாவது,






சித்திரம் 1. சட்டம்.

அல்லது பிரத்தியேகமாக செய்தாவது வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது "புட்ரக்" தைப்பதற்கு வேண்டிய சாமான்களனைத்தும் சேர்த்தாய் விட்டதால், இனி அதை தைக்கும் விதத்தைக் கூறுகிறேன்.

இப்பொழுது கேன்வஸ்ஸைச் சேர்த்து தைத்திருக்கும் சட்டத்தை நாற்காலியின்மேல் உட்கார்ந்து போட வேண்டுமென்று இஷ்டப்படுபவர்கள் இரண்டு பக்கங்களிலும் எதிரும்புதிருமாக இரண்டு சிறிய மேஜைகளைப்போட்டு, அதன் மேல் சட்டத்தை வைத்துவிட்டு, மற்றிரண்டு புறத்திலும் இருவரோ அல்லது ஒருவரோ நாற்காலியை போட்டுக் கொண்டு, உட்கார்ந்து கொண்டு தைக்கலாம். அல்லது மேஜைகளுக்கு பதில் இரண்டு பெட்டிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு நிலத்தின் மேல் உட்கார்ந்துகொண்டும் தைக்கலாம். இப்பொழுது சௌக்கம் போட எவ்விதம் உங்கள் சிறிய க்ரோஷா ஊசியை பிடித்துக் கொள்கிறீர்களோ அவ்விதம் உங்கள் வலது கையில் க்ரோஷா ஊசியைப் பிடித்துக்கொள்ளுங்கள். உங்கள் இடதுகையில் நீங்கள் இப்பொழுது தைக்கப் போகும் இடத்தில் எந்த வர்ணத்துணி நாடாவை தைக்கஎண்ணி இருக்கிறீர்களோ அந்த நாடாவைப் பந்திலிருந்து பிரித்து, அதன் நுணியிலிருந்து ஒரு அங்குல நீளம் நாடாவை விட்டுப் பிடித்துக் கொள்ளுங்கள். பிறகு அந்த வர்ண நாடாவை தைக்கபோகும் சித்திரத்தின் பாகத்தின் கேன்வஸ்ஸின் அடிபாகத்தில் இடதுகையை வைத்துக்கொண்டு வலது கையிலிருக்கும் க்ரோஷா ஊசியை சித்திரத்தின் மேல்பாகத்தில் கீழ்நோக்கி குத்தவும். இப்பொழுது கேன்வஸ்ஸின் மூல



சித்திரம் 2. ஊசி.

மாகக் கீழே வந்திருக்கும் க்ரோஷாவில் உங்கள் இடதுகையில் பிடித்திருக்கும் நாடாவை மாட்டுங்கள். பிறகு க்ரோஷாவை மேலே இழுத்தால் துணி நாடா

வும் மேலே வரும். இப்பொழுது நாடாவை கேன்வஸ்ஸிலிருந்து சுமார் அரை அங்குல உயரம் விட்டு விட்டு ஜாஸ்தியாக விருக்கும் நாடாவை மெல்ல அடிப்புறத்தில் இடதுகையிலிருக்கும் நாடாவை இழுத்து சரிபடுத்தவும். இப்பொழுது க்ரோஷாவை நாடாவிலிருந்து எடுக்கவும். இவ்விதமே அந்த தையலின் அருகில்



சித்திரம் 3. கம்பளம்

மற்றொரு தையல் போடவும். இவ்விதமே ஆனமட்டிலும் தையல் விரியாவண்ணம் அடர்த்தியாக தைத்துக் கொண்டு வந்தால் 'கால் கம்பளம்' பார்க்க அழகாக மெத்தென்றிருக்கும். தையல்களெல்லாம் ஒரே உயரமாகவிருக்கவேண்டும். இதை நம்பர் மூன்றும் சித்திரத்தில் கவனியுங்கள். சில சமயம் கை எட்ட முடியாமலிருக்குமாதலாலும், மற்றும் வேலை செய்து முடிக்குமுன் ரத்தின கம்பளம் அழுக்கடையாமலிருப்பதற்காகவும், ஒருபுறம் சுற்றி வைத்துக் கொண்டு, வேண்டுமான பொழுது பிரித்து வைத்துக்கொண்டு அங்கங்கே தைக்கலாம். அவ்வளவு பிரதேசத்தையும் பிரித்து வைத்துக்கொண்டால் துணியும் இறுக நிற்காது, வேலை செய்வதும் கஷ்டமாகவிருக்கும். "புட்ரக்" (Foot Rug) தைத்து முடித்த பின், சட்டத்தினின்று அவிழ்த்து அதன் பின்புறமிருக்கும் கொசமுசக்கல் தெரியாமல் இருப்பதற்கு அந்த கம்பளத்தின் அளவில் ஒரு முரட்டுத் துணியை வாங்கி நான்கு ஓரங்களையும் நேர்த்தியாக மூட்டி தைத்து விட்டால் இந்த கம்பளத்தை பார்ப்பவர்களுக்கு எவ்விதம் தைத்திருக்கிறார்களென்பது, யாராவது விவரித்தாலன்றி விளங்குவது கஷ்டம்தான். இந்த நிருபத்தில் எழுதியிருக்கும்படி தைத்து முடித்த கம்பளத்தின் புகைப்படமொன்றை இங்கு காண்பித்திருக்கிறது. இவ்விதமே பெரிய சைஸ் ரத்தின கம்பளங்கள் கூட தைத்து கூடங்களில் போட்டு உங்கள் வீட்டை அலங்கரிக்கலாம்.



# மைசூர்

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்


இயற்கை வனப்புமிக்க இந்திய தேசத்தின்கண் செயற்கையழகு ஒருங்கே செய்யப்பட்டு இந்நாட்டிற்கோர் அணிகலனாய் விளங்காநின்ற பல வேறு நகரங்களுக்கோர் திலகமாய் விளங்கி இந்தியாவிற்குப் 'பூஞ்சோலை'யாய் விளங்கும் நகரம் மைசூர் என்பது யாவரும் அறிந்ததே. அதன் விஸ்தீரணம் அதிகமாயில்லாவிடினும் 'மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது' என்பதேபோல் அதன் அழகும், அங்கு செங்கோல் செலுத்தாநின்ற அரசரது ஆணவமும், ஆங்கு ஜகத்ஜோதியாய் பிரகாசியாநின்ற ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தேவாலயமும் மைசூர் நற்பெயரையடையும்படி செய்கின்றன என்பது மிகையாகாது.

இப்பரத கண்டத்தில் சுதேசி சமஸ்தானங்களுள் இரண்டாவதான மைசூரின் அரசர்கள் பரம்பரையாக ஸ்ரீ சாமுண்டீஸ்வரியைத் துதித்துவருகிறார்கள். மைசூர் மகாராஜா இங்கிலாந்திற்குச் சமீபத்தில் சென்றிருந்தபோது கூட சாமுண்டீஸ்வரி விக்ரஹத்தை எடுத்துச்சென்று தினந்தோறும் தொழுது வந்தார். இத்திருஷ்டாந்தத்திலிருந்து இத்தெய்வத்தின் மகிமையும் சிறப்பும் நன்கு விளங்கும்.

ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தேவாலயம் மைசூருக்கு சுமார் நான்கு மைல் தூரத்திலுள்ளது. ஒரு குன்றின்மேல் இத்தேவாலயம் அமைந்துள்ளது. இத்தேவாலயத்திற்குச் செல்ல இரண்டு மார்க்கங்கள் உள. மைசூர் மஹாராஜா வருவதற்கு அழகிய ரோட் ஒன்று குன்றின் ஒருபாகத்தில் போடப்பட்டிருக்கிறது. அரசரின் அழகிய அரண்மனை நன்றாய் பழுதுபார்க்கப்பட்டு அங்கே அமைந்துளது. அதனருகில் வெளிதேசங்களிலிருந்துவரும் ஜனங்களுக்கென ஒரு விடுதி கட்டப்பட்டுள்ளது. அரசர் அரண்மனைவரையில் மோட்டார் செல்லும்படியான அகலமான ரோட் இருப்பது அதிசயிக்கத்தக்கது.

மற்றொரு மார்க்கம் பாதசாரிகள் படிகளின் மீது சென்று கடவுளைத் தரிசிக்க உதவுகின்றது. மலை மீது முக்கால் தூரம் சென்றால் மிகவும் அழகிய நந்தியொன்று ஒரு மேடையின்மீது அழகே அமர்ந்துள்ளது. இது ஒரே கல்லால் செய்யப்பட்டது. இந்த நந்தியைப் போல் அழகானதும் பெரியதும் வேறெங்கும் இல்லையென்று கூறலாம். சுமார் 1000 படிகளுக்குமேல் சென்றால் ஸ்ரீ சாமுண்டீஸ்வரியின் தேவாலயம் உள்ளது. இத்தேவாலயம் அவ்வளவு பெரியதன்று. ஆயினும் இத்தேவியின் மகிமையோ சொல்லி முடியாது. அம்மன் அடியார்மேல் அருளும் திவ்ய கடாக்ஷமும், அரசர்களால் துதிக்கப்பட்டு வருதலும் அக்கோயிலின் பெருமையை நன்கு விளக்குகின்றது.

நவராத்திரியில் மைசூர் நகரம் மிகவும் அழகு படுத்தப்பட்டு விளங்குவதால் பல வேறு இடங்களிலிருந்து இங்கு ஜனங்கள் திரள்திரளாக விஜயம் செய்கின்றனர். மைசூர் மஹாராஜா 'தசரா' நாள் கொலுவில் அமர்ந்து எல்லோருக்கும் காட்சியளிக்கிறார். கொலுவில் உட்காருமுன் ஸ்ரீ சாமுண்டேஸ்வரியைத் துதித்துதான் மற்ற ராஜீய விஷயங்களை கவனிக்கிறார்.




மைசூர் மலையின்மேலிருக்கும் அழகிய நந்தி.

இக்கோயில் மிகவும் பழைமையானது என்பது இக்கோயில்களிலுள்ள சிற்ப வேலைகளால் மிகவும் எளிதாய்த் தெரிகிறது. இக்கோயிலின் கோபுரம் அழகுடையதாய் விளங்குகிறது. ஸ்ரீ சாமுண்டேஸ்வரி கோயில் மைசூர் அருகேயிருப்பதால் கோயிலிலிருந்து மைசூர் நன்றாய்த் தெரிகிறது. அழகான மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருத்தலானது தூரத்திலிருந்து நோக்குங்கால் மனதிற்கு அளவிலா மகிழ்ச்சியையளிக்கிறது.

ஸ்ரீரங்கப்பட்ணத்து குகைக்கு (Dungeon) அருகாமையில் ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி கோவில் ஒன்று இருக்கிறது. பூர்வீக காலத்து கோயிலாயினும் இது இன்னும் காணப்படுகிறது. நாசமடைந்த சாமான்கள் இக்கோயிலினுள் உள. கட்டடமோ வயது முதிர்ந்தபோதிலும் கெட்டியாயிருக்கிறது. சிற்சில விக்ரஹங்களும் உள்ளே காணப்படுகின்றன. இதனால் நமக்கு வெளிப்படுவது என்னவென்றால் திப்புவின் காலத்திலுங்கூட இந்து மதம் சுதந்திர போகத்தை அநுபவித்தது" என்பதே. இக்கோயிலின் வெளிப்புறமோ வெட்டவெளி; இப்புறத்தில் நாசமடைந்ததோர் ரதம் இருக்கிறது. கோயி







மைசூர் அரண்மனை தீபாலங்காரக் காட்சி.

லின் உட்புறம் இருளினால் சூழப்பட்டுள்ளது.

இத்தேவாலயத்தினருகே பார்க்கக் கூடிய விடங்களுள் முக்கியமானது மைசூரும், அதனருகேயுள்ள கிருஷ்ணராஜசாகரா என்னும் அணையும், அதனருகேயுள்ள பிருந்தாவனமுமே. பிருந்தாவனம் மின்சார விளக்குகளால் அழகாய் அலங்கரிங்கரிக்கப்பட்டு கண்டோர் மனதைக் கொள்ளை கொள்ளும் வனப்புடையதாய் விளங்குகின்றது. அதன் அழகைப் பார்ப்போர் தான் அனுபவிக்க முடியுமேயன்றி, எழுதி மனத்தில் புகும்படி செய்தாலும் அவ்வளவு எளிதாய் அனுபவித்தலசாத்தியம்.

மைசூர் நகரம் நாலா பக்கங்களிலும் மலைக் குன்றுகளால் சூழப்பட்டு சாதாரண சீதோஷ்ணஸ்நிலை யுடையதாய், அரசருக்கு வாசஸ்தலமாயும், மஹா உன்னதமான மாளிகைகளையுடையதாய் விளங்குகின்றது. இந்நகரில் வசிப்பவர்கள், இந்த ராஜதானியில் வசிப்பவர்கள் கல்வி அறிவுகளில் தேர்ச்சி பெற்றவர்களாய் ஆண் பெண் இருபாலர்களும் தமது கிருஹ கிருத்யங்களை ஒழுங்கே நடாத்தி வருகிறார்கள்.

—:0:—

# செய்தித்திரட்டு

## சீன ஜான்ஸி ராணி

1857ம் வருஷம் இந்தியாவில் நடந்த அரசியல் புரட்சிக்குத் தலைவர் நானா சாஹிப். அவருக்கு வலது கைபோன்றவள் ராணி லக்ஷ்மிபாய். ஜான்ஸி அரசி. அவருக்கு இணையாக சீனாவில் ஒரு வீரப் பெண்மணி இன்று இருக்கிறாள். ஜப்பானின் கொட்டத்தையும் ஆக்ரமிப்பையும் அவர் அடக்கத் தன் கணவருடன் முனைந்து நிற்கிறார். அவரே சீனக்குடியரசின் ஒப்பற்ற தலைவரான சியாங்காய் ஷேக்கின் மனைவியார். அவராலேயே தலைவரது பெருமை விளங்குகிறது. அம்மாது சிரோன்மணி அமெரிக்காவில் கல்வி பயின்று 1927ம் வருஷம் ஷேக்கை மணம் செய்து கொண்டார். சீனத் தலைவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆங்கிலக் கடிதங்களை மேடம் ஷேக் படித்துத் தன் கணவனுக்கு விஷயங்களைச் சொல்லுவார். ஜப்பானுடன் இறுதிவரை ஒருகை பார்க்கத் தீர்மானித்திருக்கும் சியாங்காய்க்கு அவரது மனைவி உற்ற துணை வீரமணியே.

... ... ...

## ஸ்திரீ சட்டசபை அங்கத்தினர்களுக்கு வரவேற்பு

செப்டம்பர்மீ 3வ இந்திய மாதர் சங்கத்தார் எழும்பூர் 'பான்தியன் கார்டனில்' சென்னை சட்டசபையிலுள்ள ஸ்திரீ பிரதிநிதிகளுக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். சட்டசபையில் அவர்கள் தேசநலத்துக்காகவும், மாதர் முன்னேற்றத்துக்காகவும் செய்யவேண்டிய வேலையைப்பற்றி பல பிரபலஸ்திரீகள் பேசினார்கள். மேற்படி சங்கத்துக்கு மஹாராணி சேதுபார்வதிபாய் 500 ரூபாய் நன்கொடை அளித்திருப்பதாக டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அறிவித்தார்.

... ... ...

## உயர்தர சபைக்கு ஸ்திரீ உப அக்கிராசனர்

ஐக்கிய மாகாண உயர்தர சபைக்கு ஸ்ரீமதி ரசூல் உப அக்கிராசனராகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்.

... ... ...

## சட்டசபையில் சர்க்கா

சென்னை அசெம்பிளி அறைகளிலொன்றில் ஒருவயது முதிர்ந்த ஸ்திரீ எப்படி தகுந்த முறையில் செய்யப்பட்ட ராட்டினத்தினால் நிறைய நூல் நூற்க இயலும் என்பதை நிரூபித்துக்காட்டினாள். பல சட்டசபை மெம்பர்கள் அவள் நூற்பதைக்கண்டு மகிழ்ந்தார்கள். அவரைப் பற்றி சட்டசபையில் மந்திரி கனம் ராமநாதன் பேசினார்

... ... ...

## பர்தா ஒழிந்தது

எகிப்து மன்னர் பாரூக் அக்டோபர்மீ 21வ ஸ்ரீமதி நலபீ நாஜ் என்ற கற்றறிந்த கன்னியை மணந்து கொள்வார். இவளுக்கு வயது 16. ராணியானபின் பர்தாவைத்தள்ளி அரசருடன் பொது விஷயங்களிலும், விசேஷங்களிலும் வெளிப்படையாகக் கலந்து கொள்வாராம்.



## ஸ்திரீ செனட் மெம்பர்

சென்னை சட்டசபையின் சார்பாக ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் அண்ணாமலை சர்வகலாசாலை செனட் சபைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார்.

... ... ...

## யுத்த சபையில் ஸ்திரீ அங்கத்தினர்

சீன—ஜப்பான் போராட்டத்தில் சீனர்களின் யுத்த விஷயங்களை மேற்பார்வையிட்டு நடத்த ஒரு மந்திராலோசனை சபை ஏற்பட்டிருக்கிறது. அதில் மேடம் சியாங்காய் ஷேக் (சீன குடியரசுத் தலைவரின் மனைவி)யும் அங்கத்தினராக இருந்து அவர்களின்விவாதங்களில் கலந்து கொள்கிறார். சரித்திரத்தில் சமீபகாலத்தில் ஒரு ஸ்திரீ யுத்தசபையில் ஸ்தானம் வகிப்பது இதுவே முதல் தடவையாகும்.

... ... ...

## சீர்திருத்தம் வேண்டாம்

சிந்து மாகாண சட்டசபையில் 1935-ம் வருஷ இந்திய சீர்திருத்தச் சட்டத்தைக் கண்டித்தும், இந்திய அரசியல் முறை பொது ஜனப்பிரதிநிதி சபையாலேயே நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தை ஸ்ரீமதி ஜேதி சிபஹாய் மாலனி பிரேரித்துப் பேசினார். தீர்மானம் நிறைவேறியது.

... ... ...

## ரோடு ரிப்பேர் செய்த தேச சேவிகைகள்

பூனாவுக்கருகில் ஹிங்னே பர்துக்கியிலுள்ள "ஹிந்து ஸ்திரீகள் விடுதி"யைச் சேர்ந்த மாணவிகள், எர்ரான்வானா—ஹிங்னே ரோடைத்தாங்களே மராமத்துச் செய்தனர். அந்த ரோடில் குழிகள் விழுந்து பாழாகியும் ஸ்தல அதிகாரிகள் கவனியாமற் போகவே, அப்பெண்கள் அடுத்திருந்த குன்றுகளுக்குச் சென்று கற்கள் கொண்டுவந்து குழிகளையெல்லாம் மூடிச் சரிப்படுத்தி அந்த ரோடைச் செப்பனிட்டு விட்டனர். அதிகாரிகளுக்கு நல்ல புத்திமதி!

... ... ...

## 118, 111 வயது தம்பதிகள்

திருவாங்கூர் ஜனப்பிரதிநிதிசபையில் புலையர்களின் பிரதிநிதியாக கடந்த 25 வருஷங்களாய் இருந்து வரும் திரு. அய்யன் காளி என்பவருடைய தாய் தந்தையர்களுக்கு முறையே 111, 118 வயது ஆகின்றது. இவர்கள் திருவனந்தபுரத்துக்குப் பக்கத்திலுள்ள தங்கள் சொந்த கிராமமாகிய வெங்களூரில் இன்றும் நல்ல தேகசௌக்கியத்துடனிருந்து வருகிறார்கள்.

... ... ...

## எலுமிச்சம்பழம்

எலுமிச்சம்பழம் மிகவும் பிரயோஜனமான வஸ்து. அதன் ரசத்தை அதிகமாகச் சாப்பிடுவதால் ஆங்கில தேசத்தில் நோய்குறைந்து, சுகம் பெருகிவருகிறது. எலுமிச்சம்பழத்துக்குப் பேர் போன நாம் அயல் நாட்டு "டானிக்குகளின்" மேல் மோகங்கொண்டு பணத்தை வாரி இறைக்கிறோம்!

... ... ...

## டாக்டர் லக்ஷ்மிதேவி

சென்னை அசெம்பிளி ஹவுஸ் கமிட்டிக்கு டாக்டர் லக்ஷ்மிதேவி எம். எல். ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

* * *

## ஒரு பவுண்டு டீ 37 பவுன்

இந்தியாவில் விளையும் தேயிலைக்கு கிராக்கி அதிகமாக இருக்கிறது. சமீபத்தில் லண்டன் நகரில் இந்நாட்டில் விளைந்த உயர்ந்த ரக ஆரஞ்சு பிகோ டீ ஒரு பவுண்டு 36 பவுன் 13 ஷில்லிங் 4 பென்ஸ் வீதம் ஏலத்தில் வாங்கப்பட்டது. இவ்வளவு அதிக விலை வேறு எந்த தேசத்து டீக்கும் கிடையாது. மேரிராணியார் தன் சொந்த உபயோகத்துக்கென்று 2 பவுண்டு வாங்கியிருக்கிறார். பொன் விளையும் பூமி பாரத தேசம் என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா?

... ... ...

## அற்புதப் பெண்கள்

தெரிஸா நியூமன் என்னும் ஜெர்மன் நங்கைக்கு தலையில் முள்கம்பியைச் சுற்றி இருக்கிறது போலக்காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இருகைகளிலும் ஆணிகள் அடித்தாற்போல் காயங்களிருக்கின்றன. எவ்விதவைத்திய சிகிச்சை செய்தும் இவை ஆறுவதே கிடையாது. பிரபல வைத்திய நிபுணர்களும், விஞ்ஞான பண்டிதர்களும் இவளைப்பரிசோதித்து ஆராய்ச்சி செய்தும் ஒன்றும் புலப்படாமல் திகைக்கிறார்கள். இதேபோல் போலந்து தேசத்தில் மேரியாமாலிங் ஜெவ்ஸ்கா என்ற ஒரு மங்கைக்கு இருதயம் வெளியே நன்றாகத் தெரிகிறது. அதில் ரத்தம் ஓடுவதும் புலனாகிறது. விநோத சிருஷ்டிகள்!

## 150 தடவை மணந்தவர்

கடைசி முகலாய சக்கிரவர்த்தி பஹதூர் ஷாவின் குமாரர் நாதிர்ஷா 1857-ம் வருஷப்புரட்சிக்குப் பின் பல விடங்களிலும் ஒளிந்து பின் நிஜாம்மன்னரின் உதவியால் மெக்காவுக்குச் சென்று தன் அன்னைக்கு நிஜாம் கொடுத்த பென்ஷனில் ஜீவியம் நடத்திவந்தார். பின் அபிஸீனியாவில் யானை தந்தம், தங்கம் முதலிய வற்றில் வியாபாரம் செய்து வந்தார். இப்பொழுது ஏடனில் இருக்கிறார். இவர் அபிஸீனிய முஸ்லீம் சமூகத்தில் 150 முறை மணம் செய்து கொண்டாராம். இவருக்கு இப்போது வயது 87.

... ... ...

## 7 வருஷம் தூங்குபவன்

ஆசியா மைனரில் கோட்ஜா கார் என்ற கிராமத்தில் வேலி என்ற 50 வயதுக்கிழவன் ஒரு முறை உறக்கம்கொண்டு 7 வருஷங்கள் கழிந்த பின் விழித்தானாம். ஒரு பெருத்த கொட்டாவி விட்டு விட்டு மறுபடியும் தூங்க ஆரம்பித்து விட்டானாம். அவனுக்கு 'படுக்கையில் கிடப்போன்' என்று பெயர் வழங்கிவருகிறது. கலியுக கும்பகர்ணன்!


... ... ...

## மணத்துக்குமுன் மண்

ஆப்பிரிக்காகண்டத்தில் ஒரு வகை வகுப்பினரிடத்தில் விவாஹ சம்பந்தமாக ஒரு நூதன வழக்கம் கையாளப்பட்டு வருகிறது. அந்த ஜாதியார் மணப் பெண்ணை கல்யாணம் ஆவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னிருந்து கழுத்துவரை குழிதோண்டி



"வருவாரோ"



“என்ன விநோதம் பார்”



ஸ்ரீமதி பக்தி லக்ஷ்மிபாய் தேசாய்
51-வது காங்கிரஸ் மஹாசபையின் வரவேற்புக் கமிட்டியின் உபகாரியதரிசி.



புதைத்து வைத்தபடியே ஆகாராதிகள் அளித்து வருகிருர்கள். இதற்குக் காரணம் கல்யாணத்துக்கு முன்பெண்ணின் தேகத்தில் சூரிய உஷ்ணம் படக்கூடாதென்ற எண்ணம் அவர்களிடமிருந்து வருவதுதான்.

... ... ...

## பக்ஷிகளின் வேகம்

பக்ஷி இனத்தில் எல்லாவற்றையும் விட அதிவேகமாகப் பறக்கக் கூடியது தூக்கணங்குருவி யென்று சொல்லப்படுகிறது. அது மணிக்கு 186 மைல் வேகம் பறக்குமாம். காக்கை மணிக்கு 43 மைல் பறக்குமாம்.

.... ... ....

## 107 வயதில் காதல்

தென்போலந்து தேசத்தைச் சேர்ந்த மக்தலேஞ என்னும் ஸ்திரீ 99 வயதுடைய அக்தோனி என்பவரைக்காதலிக்கிருள். இவள் ஏற்கனவே மூன்று கணவர்களை மணந்து விதவையானவள். ஒரு சமயம் இவள் தன்னைவிட 70 வயது குறைந்தவனை மணந்து கொள்ள ஆசைப்பட்டாளாம். இவளுக்கு இப்பொழுது வயது 107.

... ... ...

## ஒரு லட்சம் விலையுள்ள மாடு

ஸ்காட்லாந்து தேசத்திலிருந்த ‘கிரிக்கண்டன்’ என்ற ஒரு காளையை அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஆர்ஜெண்டைன் நாட்டார் ஒருவர் 5,900 பவுனுக்கு (சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கு) வாங்கினராம்.

... ... ...

## சினிமாவில் ஆவிகள் நடிப்பு

இறந்தவர் சினிமா மூலம் பேசுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. லாரா என்ற ஐஸ்லந்துவாசி ஆவியுலகுடன் சம்பாஷிப்பதில் சமர்த்தர். அவர் ஆவிகளுடன் சம்பாஷிப்பது பூராவும் சினிமாவில் ஒலிப்பதிவு செய்யப்படும். ஸ்பெயினைச் சேர்ந்த ஒரு அழகிய மங்கையும் அப்படத்தில் பேசுவாள்.

... ... ...

## குட்டையர் நெட்டையாகலாம்

குள்ளமாயிருப்பவர்கள் இனிகவலைப்படவேண்டியதில்லை. குள்ளர்களை இஞ்செக்ஷன் செய்து சரியான உயரத்துக்கு வளரும்படி செய்து விடலாமென்று அமெரிக்க டாக்டர் ஆஸ்காரிட்டில் நீண்டகால ஆராய்ச்சி அநுபவத்தின் மேல் கூறுகிருர். தலையில் புறங்கழுத்துக்கு சமீபத்திலுள்ள “பிட்டு வைடரி” கோளம்தான் வளர்ச்சிக்குரிய சத்தைக் கொடுக்கிறதாம். அச்சத்து குறைந்தால் வளர்ச்சிகுன்றும். எனவே அதே சத்தை குட்டையர்கள் தேகத்தில் இஞ்செக்ஷன் செய்தால் அவர்கள் நெட்டையர்களாகி விடுவார்களாம்.

... ... ...

## கன்னி வாலிபன் ஆனுள்

நியூஸிலாந்தைச் சேர்ந்த வெல்லிங்டன் நகரத்திலுள்ள 24 வயது யுவதி ஒருவள் நாளாவட்டத்தில் ஆணுக மாறிவருகிருள் அவள் சிறந்த நடனக்காரி; தேர்ந்த டென்னிஸ் விளையாட்டுக்காரி. அவள் ஒரு ஆபரேஷன் செய்து கொள்ளுவதற்காக லண்டனுக்குச் சென்றிருக்கிருள். அது முடிந்தால் பூரண ஆணுய் விடுவாள். பின் அவள் ஒரு கன்னிகையை மணந்து கொள்ள அனுமதி பெறுவாள். இப்பொழுது அவள் ஆணுடை தரித்தே இருக்கிருள்.

# கதம்பம்

## ‘ஸ்பிங்ஸ்’

எகிப்தில் ‘ஸ்பிங்ஸ்’ என்று ஒரு உருவச்சிலை இருக்கிறது. அது மார்பு வரை பெண் உருவமாகவும், அதற்குமேல் சிங்க வடிவத்திலும் இருக்கிறது. அதைப் பார்க்க தினம் ஆயிரக்கணக்கானவர்கள் வருகிறார்கள். தினசரி அது இரண்டாயிரந்தடவை போட்டோ எடுக்கப் படுகிறது.

... ... ...

## மண உடையில் மரணம்

இங்கிலாந்தில் சால்கோம்ப் என்னும் நகருக்கருகில் கடலில் ஒரு மங்கையின் பிணம் கண்டெடுக்கப்பட்டது. அவளுக்கு வயது சுமார் 25 இருக்கும். அவள் விதுவேனிய நங்கை. பெயர் எலனு ஜாகாபாஸ்கெய்டி என்பது. அவளை மணப்பதாக ஒருவன் 8 வருஷங்கள் கடிதப்போக்கு நடத்தினான். ஆனால் மணம் நடந்த பாடில்லை. கேவலமடைவதிலும் மரணம் மேலென நினைத்தாள். காதல் கடிதம் எழுதியவனைக்காண கானடா சென்றாள். அவள் மனம் அவனை விரும்பவில்லை. கடலுக்கிறையானாள். மணமகள் பிணமகளானாள்.

... ... ...

## வின்ஸர் கோமகன் அமெரிக்க தலைவர்?

பண்டித சூர்யா என்பவர் சிறந்த ஜோஸ்யர். வின்சர் கோமகனின் துறவை அவர் முன்னரே தெரிவித்துள்ளார். அவர் இன்னொரு ஜோஸ்யம் சொல்லுகிறார். வின்ஸரின் வாழ்வில் மிகவும் சிலாக்கியமான பாகம் 1940-ம் வருஷம் ஆரம்பமாகிறதாம். காதலியின் மூலமாகவே ஒரு ஜனநாயக தேசத்தின் தலைவராகலாமாம். அமெரிக்கக் குடியரசுக்கு ரூஸ்வெல்டுக்குப்பின் வின்சரே தலைவராகலாமாம். எல்லாம் ஈசன் செயல்.

... ... ...

## பாம்பு மருந்து

ஜப்பானின் தலைநகராகிய டோக்கியோவில் தினம் 1000 பாம்புகள் கொல்லப்பட்டு வேகவைத்து பஸ்பம் செய்யப்படுகின்றன. சகல நோய்களுக்கும் இது சிறந்த நிவாரணியாம். காசத்துக்கு இது நல்ல ஒளஷதமாம். அந்நகரில் ஒரு ‘பாம்புக்கடை’ இருக்கின்றது. வருஷத்தில் லட்சம் பாம்பு விற்பனையாகிறது. எதைத்தான் ஜப்பானியர் விற்கமாட்டார்கள்!

... ... ...

## உடன் கட்டை

குவாலியர் சமஸ்தானத்தில் ஸிக்ரோடி கிராமத்தில் ரகுவீர்சிங் என்பவர் இறந்தவுடன் அவர் மனைவி தானும் உடன் கட்டை ஏறுவேன் என்று உறுதிகொண்டு பலபோலீஸ் ஜவான்களும், இன்ஸ்பெக்டரும் தடுத்தும், ஒருவாளால் தன்னை யாரும் தடுக்காதபடி காத்து தன் கணவன் சவத்துடன் ஜதையில் படுத்துத் தீமூட்டிக் கொண்டு மாண்டாள். அவள் புனித ஆத்மா அமைதியுறுமாக.

... ... ...

## நாய்கள் ‘கிரிக்கெட்’

ஆஸ்திரேலியாவில் அலெக்ஸாண்ட்ரியா என்னும் நகரில் 10 நாய்களுக்கு ‘கிரிக்கெட்’ விளையாடப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பந்தைப்பிடிப்பதில் அவைகள் வெகு சாமர்த்தியம் காட்டுகின்றன. மனிதர்களுடன் “டெஸ்டு”க்கு வரும்! ... .... ....



## கலைகளின் காப்பு

முதன் மந்திரி சொல்லுகிறார்:—“இந்தியமாதர்களே இதுகாறும் நம்நாட்டின் அறத்தையும் கலைகளையும் காப்பாற்றி வந்தார்கள். இன்னும் அப்பொறுப்பு மாதர்களுடையதே. மறவலியின்றி, வறுமையாலும், நோயாலும் நலிந்து வரும் நம் நாடு இன்றுவரை தன் அறவலிகொண்டே வாழ்ந்து வந்தது. அப்பண்டைப் புகழை மங்காது ஓங்கச் செய்யவேண்டியது மாதர்களின் கடமையாகும். அவர்களே தர்மத்தின் தாய்மார்கள். கலைகள் அவர்தம் காதல் திருமக்கள். நம் தேசத்தின் உயர்வுக்குக்காரணமாக இருக்கும் கலைகட்கு புத்துயிர் அளிப்பார்களாக. அச்செயலைத்திறனுடன் புரியின் நம் நாட்டு மக்களுக்கே புனர் ஜன்மம் அளித்தவர்களாவார்கள்.” சந்தோஷம். இந்தப் புகழுரைகளுடன் நின்றுவிடாமல் பெரியார் அவர்களது முன்னேற்றத்துக்கான சட்டதிட்டங்களை நிறைவேற்றுவாரா?

... ... ...

## பூவன்பழ ‘சாகலெட்’

பூவன் வாழைப்பழத்தைத் தோல்நீக்கி மெல்லிய பில்லைகளாக நறுக்கி நன்றாக வெயிலில் உலர்த்திக் காய்ந்த பின்னர் அவைகளை நன்றாகப் பதம் செய்து பத்திரமாக டப்பிகளிலோ ஜாடிகளிலோ போட்டுவைத்து உபயோகிக்கலாம். அது உண்பதற்கு வாழைப்பழ மிட்டாய் (சாக்லெட்) மாதிரியிருக்கும்.

## கணவனை காக்க உயிர் நீத்த உத்தமி

லாகூருக்கருகிலுள்ள கலுகில் என்னும் ஊரைச்சார்ந்த குண்டன்சிங் என்பவர் தன் பெண்ணை ஒரு குறிப்பிட்டவருக்குக் கொடுத்தது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அவரைக்கொல்ல ஒரு நாளிரவு ஆயுதங்களுடன் புகுந்தனராம். ஆனால் சிங் மனைவி நிர்வார் விழித்துக்கொண்டாள். ஒரு குண்டாந்தடி யெடுத்துக்கொண்டு எதிரிகளைத்தாக்கி விரட்டினாள். அந்த சச்சரவில் ஏற்பட்ட காயத்தால் பின்னர் மாண்டுபோனாள். வீரம் சிறந்தநாடு!

... ... ...

## குருட்டூர்

மெக்ஸிகோவில் டில்டபெக் என்ற சிறு கிராமத்திலுள்ள எல்லாரும் குருடர்களாம். குழந்தைகள் பிறக்கும் போதே குருடாய்ப் பிறக்கின்றன, அல்லது விரைவில் குருடாய் விடுகின்றன. ஆனால் அவர்கள் பழக்கத்தின் காரணமாய் சர்வசாதாரணமாய் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்து வருகிறார்கள். அவனன்றோ ஆட்டி வைப்பவன்!

... ... ...

## ஜெர்மன் மங்கையர் தேசபக்தி

பல ஜெர்மனிய மங்கையர்கள் இங்கிலாந்தில் கப்பல்படை, ஆகாயப்படை, ராணுவப்படை உத்தியோகஸ்தர்கள் வீட்டில் ஏதாவது ஒருவேலைக் கமர்ந்து ராணுவவிஷயங்களைப்பற்றித் துப்பு விசாரித்துத் தங்கள் நாட்டினர்க்கு அறிவிக்கிறார்களாம். இப்படிப் பட்டவர்களை பிரிட்டனை விட்டுத் துரத்த பிரிட்டிஷ் ரகசியப் போலீஸார் முயற்சி செய்து வருகிறார்கள்.

# சினிமா செய்திகள்

### ஈரோடு காளிதாஸ் பிலிம்ஸ்

இக்கம்பெனியின் சொந்தக்காரர் ஸ்ரீ கேசவலால் சேட். இக்கம்பெனியார் "**கண்ணப்ப நாயனார்**" என்ற புராணக் கதையை தமிழில் முதல் படமாக எடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

### ராஜம் டாக்கிஸ், சென்னை

இவர்கள் "**மதுரை வீரன்**" என்னும் தமிழ்ப்படம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாகவும், இப்படத்தில் ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மியும், திரு. வி. ஏ. செல்லப்பாவும் பிரதம நடிகராக நடிப்பார்கள் என்றும் தெரியவருகிறது. ஸ்ரீமதி ராஜலக்ஷ்மியே கதை முதலியவற்றை டைரக்ட் செய்வார் என்றும் சொல்லப்படுகிறது.

### சாலஞ் மூவிடோன், பெங்களூர்

இக்கம்பெனியார் "ஹரிஜனச் சிங்கம்" அல்லது "மதராஸ் சி. ஐ. டி." என்னும் தமிழ் படத்தை எடுக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

### ஸ்ரீ ராஜன் பிலிம்ஸ்

மேற்படி பெயர்கொண்ட ஒரு புதுக் கம்பெனியை திரு. எம். கே. தியாகராஜ பாகவதரும், வேறு சிலரும் சேர்ந்து திருச்சியில் ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களது முதல்படம் சைவப்பெரியாரும் அறுபத்து மூவரில் ஒருவருமான "திருநீலகண்ட நாயனார்" சரித்திரமாகும் எனத் தெரியவருகிறது.

### சேவாஸதனம்

சென்னையில் டைரக்டர். கே. சுப்ரமண்யம் இப்படத்தைப் பிடிக்க ஆரம்பித்து விட்டார். மதுரை எம். எஸ். சுப்புலக்ஷ்மி பிரதம நடிகையாக ஆக்ட் செய்கிறார்.

### ஒலிம்பிக் பிக்சர்ஸ்

ஒலிம்பிக் பிக்சர்ஸ் கம்பெனியாரின் "**மைனர் ராஜாமணி**"யை பிரபல டைரக்டர் ராஜா சாண்டோ துரிதமாக பிடித்து வருகிறார். சென்னை நேஷனல் மூவிடோனில் படம் எடுக்கப்பட்டு வருகிறது. கமலவேணி கதாநாயகியாக நடிக்கிறார்.

### எவ்ஸெல் பிலிம் கம்பெனி

இவர்களால் தயாரிக்கப்படும் "**ஸ்ரீ ராமனுஜர்**" என்ற தமிழ் படத்தில் சேலம் திரு. சுப்ரமண்யம் எம். எல். ஏ., பிரதம நடிகராக விளங்குவார் என்றும், சத்யாக்ரஹ இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற ஒரு உயர்தர குடும்பமங்கை பிரதம நடிகையாக விருப்பார் என்றும் சொல்லப்படுகிறது.

### ராம்ணிக்லால் மோகன்லால் கம்பெனி

மேற்படி கம்பெனியார் "**மின்னல் கொடி**" என்ற 'ஸ்டன்ட்' சமூகப் படத்தை தயார் செய்து வருகின்றனர். இதில் கே. டி. ருக்மணி பிரதமநடிகை. இதர நடிகர்களும் தேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

# ஆசிரியர் குறிப்புகள்

### ஸ்திரீகளும், கிராமப்புனருத்தாரணமும்

இப்பொழுது 'வைஸ்ராய் முதல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வரையும், மஹாத்மா காந்தியடிகள் முதல் ஒரு தொண்டர் ஈறாக "கிராமப்புனருத்தாரணம், கிராமப்புனருத்தாரணம்" என்றே பேசுகிறார்கள். மகாத்மாவே ஒரு கிராமத்தை தன் தலைமை ஸ்தலமாகக்கொண்டது மன்னியில் தேசீய காங்கிரஸ் மஹா சபையின் கூட்டமும் கிராமங்களிலேயே நடக்கும்படி செய்து விட்டார். நம் நாட்டு மக்களில் 90% கிராமவாசிகள். அவர்களிடமுள்ள அறியாமை நீங்கினால்தான் நாடு மேன்மையுற முடியும் என்பதை எல்லாக் கட்சிகளும் நன்கு உணர்ந்து கொண்டன. இந்தப் பணியில் ஸ்திரீகளும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டியதின் அவசியத்தைப் பற்றி சமீபத்தில் திருவாங்கூர் திவான் சர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரும், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி அவர்களும் வற்புறுத்திக்கூறினது நம் சகோதரிகளுக்கு ஞாபகமிருக்கலாம்.

முக்கியமாக கல்வி பெற்ற ஸ்திரீகள் மனது வைத்தால் நிச்சயம் கிராம மக்களின் வாழ்க்கையைப் பல துறைகளிலும் சீர்படுத்தி மேன்மையுறச்செய்யலாம். அவர்கள் கிராமங்களில் சென்று சிறுமிகளுக்குக் கல்வி யளிப்பதும், வயது வந்த ஸ்திரீகளிடத்தில் அன்புடன் பழகி சுகாதாரம், சமூக சீர்திருத்தம் போன்ற விஷயங்களை காரணகாரியத்துடன் பொறுமையாக விளக்குவது போன்ற தொண்டில் ஈடுபட்டால் நம் தேசம் விரைவாக மேன்மையுறும். மக்களும் சுபிக்ஷமான வாழ்வை அடைவார்கள். முதலில் ஏதோ சில தடைகள் ஏற்படலாம். ஆனால் கிராமப் பெண்களினிடம் ஒரு புதிய உணர்ச்சியையும், அறிவுச்சுடரையும் இவர்கள் உண்டாக்கி விட்டால் அதைத்தடை செய்ய யாராலும் இயலாது. உபாத்தியாயினிகளும், வைத்தியப் பரீட்சையில் தேறிய மாதரும் மனம் வைத்து சமூக சேவையில் மெய்யான பற்றுடன் ஈடுபட்டால் ஆச்சரியப்படும்படியான மாறுதல்களை அவர்கள் கிராமங்களில் செய்து முடிப்பார்கள். தற்காலம் ஆட்சி செய்வோர் காங்கிரஸ் கட்சியினர். ஆகையால் சர்க்காரும் இப்படி கிராம சேவை செய்ய முன்வரும் தேச சேவகிகளுக்கு மிக்க அத்தியாவசியமான வசதிகளை அளித்து உதவவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்கிறோம். தாங்களாகவே இவ்விதவேலையில் ஈடுபட்டுழைக்க அவகாசமும், வசதிகளும் ஏற்கனவே பெற்றுள்ள மங்கையர்கள் சர்க்காரின் உதவியை எதிர்பாராமலே இதில் முனைந்து வேலை செய்வார்களாக.

... ... ...

### விபசார விடுதிகள்

விபசாரம் என்ற நரகத் தன்மை நாட்டை விட்டு அடியோடு ஒழியவேண்டும். அவைகள் நம் புனித பூமியில் உள்ளவும் பாரத மாதாவின் பெருமைக்கு இழுக்கு இருந்தே தீரும். மாதருலகுக்கு

அத்தொழில் ஒரு பெருமருவாகும். அதை ஒழிக்க அநேக சட்டங்கள் இருந்து வருகின்றன. அவைகள் போதிய அளவு அமுல் செலுத்தப்படவில்லை. பூர்ணமாகவும் அவைகள் இல்லை. சமூகத்தின் கௌரவத்துக்கே ஹானியாகவும், அதைக் கேவலப்படுத்தும் ஒரு முறையானதுமான இவ்விபசாரம் இருந்த இடம் தெரியாமல் செய்யத்தக்க சட்டங்கள் ஏற்பட வேண்டும். இத்தூய சேவையில் ஸ்திரீகளின் கடமை யாது என்பது மஹாத்மா காந்தியடிகள் 'ஹரிஜன்' பத்திரிகையில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

"விபசார விடுதிகளை ஒழிப்பதற்கு என்ன செய்யலாம்? அந்தப் பணிக்குப் பெண்களே தகுந்தவர்கள். அவர்கள் இரண்டு விதமான பிரசாரம் செய்தல் வேண்டும். கேவலம் ஜீவனோபாயத்திற்காக மானத்தை விற்கும் ஸ்திரீகளிடம் சென்று அவ்விதம் இழிதொழில் புரிய வேண்டாமென்று தடுத்துப் பிரசாரம் செய்ய வேண்டும். அதுமட்டும் போதாது. ஆடவர்களிடமும் அவர் சென்று ஒழுங்காக நடந்து கொள்ளுமாறு போதித்தல் வேண்டும். கற்பு என்பது இருதிறத்தார்க்கும் பொதுவானதென்று எடுத்து வலியுறுத்துதல் சரியான பலனை அளிக்கும். ஆண்மக்கள் பெண்களை அபலைகள் என்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களின் அறியாமையோ ஆணவமோ தெரியவில்லை. அவர்களைப் பெண்கள் அவமானமடையச் செய்தல் வேண்டும். அதற்கு என்னவேண்டும்? பெண்களுக்கு வயிரமுடைய நெஞ்சு வேண்டும்" என மஹாத்மா கூறுகிறார். விதிவசத்தாலோ, வேறு இதர காரணங்களாலோ அந்தத் தீயநெறியில் தள்ளப்பட்ட நங்கையர்களை அப்படுகுழியினின்றும் விடுவித்து சுத்த சுகவாழ்வை அந்த வீழ்ந்த சகோதரிகளும் அடையுமாறு செய்வது ஒவ்வொரு சகோதரியினுடைய முதல் கடமையாகும்.

... ... ...

## பர்மா சர்க்காரின் விபரீத உத்தரவு

"ஆண்களோடு பெண்களும் சரிசமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்று சங்கநாதம் செய்யும் இச்சமயத்தில் பர்மா சர்க்கார் ஓர் நூதன உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள். அதன்படி ராணுவ வரவு செலவு கணக்கு இலாகாவில் (Military Accounts Department) இனி பெண்களை உத்தியோகத்துக்கு அமர்த்தக்கூடாதாம். ஒவ்வொரு முற்போக்கடைந்த நாட்டிலும் ஸ்திரீகள் எல்லாவித இலாகாக்களிலும் வெகுதிறமையுடன் வேலை செய்யத் தகுந்தவர்கள் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யா, துருக்கி, ஜப்பான், அமெரிக்கா முதலிய நாடுகளில் ஸ்திரீகள் ஸ்தானம் வகிக்காத இலாகாகளே இல்லையென்று சொல்லலாம். உலகப்போக்கு அவ்வாறிருக்க பர்மாசர்க்கார் மட்டும் ஏனோ அவர்களுக்கு இருக்கும் உரிமைகளையும் பிடுங்க முற்பட்டுள்ளார்கள்? தங்கள் உத்தரவுக்குச் சரியான காரணங்களும் காட்டவில்லை. இது மாதிரி உத்தரவுகளை அலக்ஷியமாக விட்டு விட்டால் ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்குத் தடைகள் நாம் அறியாமலேயே அதிகமாகுமாதலால் அகில இந்தியமாதர் சங்கம், தேசீய மாதர் சபைபோன்ற ஸ்தாபனங்கள் இவ்வுத்தரவை ரத்துசெய்யுமாறு கிளர்ச்சி செய்ய வேண்டிக்கொள்ளுகிறோம்.



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937ஹு அக்டோபர், ஈசுவரஹு புரட்டாசி - ஐப்பசி. திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 16 | வெ | துவா 28-22, மக 47-44, தி 17-43, பிரதோஷம். |
| 2 | 17 | சனி | திர 27-21, பூர 48-43, தி 8-4 சிவராத்திரி. |
| 3 | 18 | ஞாய | சசி 27-23, உத் 50-46, தி 7-20, நடராஜரபிஷேகம். |
| 4 | 19 | திங் | ● 28-32, ஹ 54-0, தி 12-54, மஹா-சோம-அமா. |
| 5 | 20 | செவ் | பிர 31-7, சித் 58-31, தி 15-30, நவராத்திரி ஆரம். |
| 6 | 21 | புத | துவி 34-52, ஸ்வா 60-0, தி 13-55, பிரீதிதுவிதியை. |
| 7 | 22 | வியா | திரி 40-3, ஸ்வா 4-14, தி 19-50. |
| 8 | 23 | வெ | சது 46-5, விசா 11-3, தி 22-19, திருப்பதி கருடன். |
| 9 | புரட்டாசி 24 | சனி | பஞ் 52-43, அநு 18-36, ரா 4-58, பெரியதிருமலை நம்பி. |
| 10 | 25 | ஞாய | ஷஷ் 59-19, கேட் 26-34, ரா 19-37. |
| 11 | 26 | திங் | ஸப் 60-0, மூல 34-9, ரா 0-12, ஸத்தியபாராயணர். |
| 12 | 27 | செவ் | ஸப் 5-21, பூரா 40-52, தி 0-50, திருப்பதி ரதம். |
| 13 | 28 | புத | அஷ் 10-13, உரா 46-8, தி 2-37, புதாஷ்டமி. |
| 14 | 29 | வியா | நவ 13-23, ஸ்ரீவ 49-38, சே 0-33, வேதாந்த தேசிகன், ஆயுதபூஜை, விஜயதசமி, கரிநாள். |
| அக்டோபர் 15 | 30 | வெ | தச 14-43, அவி 51-9, தி 0-13, மத்வஜயந்தி. |
| 16 | 31 | சனி | ஏகா 13-41, சத் 53-40, தி 9-0, துலாரவி 34-46. |
| 17 | 1 | ஞாய | துவா 10-8, பூட் 48-18, தி 6-2, பிரதோஷம், துலா |
| 18 | 2 | திங் | திர 6-9, உட் 44-36, தி 10-49. [ஸ்நானமாரம். |
| 19 | 3 | செவ் | ○ சசி 0-4, உப 52-56, ரே 39-37, தி 12-6. |
| 20 | 4 | புத | பிர 45-15, அசு 33-53, தி 24-50, ரா 26-15. |
| 21 | 5 | வியா | துவி 37-11, பர 27-45, ரா 25-33, கிருத்திகாவிரத. |
| 22 | 6 | வெ | திரி 29-12, * 21-39, திரிதியாதிதி, கரிநாள். |
| 23 | 7 | சனி | சது 21-42, ரோ 15-56, சே 3-50, தி 28-46. |
| 24 | ஐப்பசி 8 | ஞாய | பஞ் 14-54, மிரு 10-56, ரா 1-26, ஷஷ்டிதிதி. |
| 25 | 9 | திங் | ஷஷ் 9-2, ஆரு 6-49, ரா 5-51. |
| 26 | 10 | செவ் | ஸப் 4-15, புந 3-46, தி 23-9, சத்தி, யதிராஜஜீயர். |
| 27 | 11 | புத | அஷ் 0-39, உப 57-37, பூச 1-55, ரா 4-35. |
| 28 | 12 | வியா | தச 57-8, ஆயி 1-14, ரா 2-33. |
| 29 | 13 | வெ | ஏகா 57-15, மக 1-46, தி 22-21, ஸ்மார்த்த ஏகாதசி. |
| 30 | 14 | சனி | துவா 58-33, பூர 3-31, தி 22-24, வைஷ்ணவைகாதசி. |
| 31 | 15 | ஞாய | திர 60-0, உத் 6-26, தி 28-50, தனத்திரயோதசி. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளி லிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர் 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. S, Seshagiri Rao, at the Lodhra Press, Royapettah, Madras.




## ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினல் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கப ஜுரம் முதலிய எல்லாவித ஜுரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்தி செய்வதில் முதன்மையானது

## அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணவிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளுவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

இதன் விலை 6 அவுன்ஸ் புட்டி ரூ. 2 8 0
,, 3 ,, ,, 1 8 0
,, 1 ,, ,, 0 8 0

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்**

Trade Mark

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா எட்டு

விலை பேசரி சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா ஆறு

Regd. No. 1983

ஒரிஜினல்

**கல்ச்சர் வைரங்கள்**

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனம்!

சொ. அருணாசலம் செட்டி,
மு. ராமசாமி செட்டி,
ஷுருப்பு வியாபாரம், திருச்சினாப்பள்ளி.

**வாஜீகர**

(REGD.)

ஓர் வரப்பிரஸாதம்

ஆச்சரியமாக சீக்கிரத்தில் யௌவனம் தரும்.

இதற்கு நிகர் வேறொன்றில்லை.

பெரிய புட்டி 1-க்கு ரூ. 5 0 0
சிறிய புட்டி 1-க்கு ரூ. 2 8 0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்,
107, பிராட்வே, சென்னை.

**சென்னை கிரௌன் டாக்கீஸில்**

அக்டோபர்மீ 2உ சனிக்கிழமை முதல் ஆரம்பவிழா

மிஸ். கே. டி. ருக்மணி, மிஸ். சுசீலா முதலியோர்கள் நடிக்கும்

**பஸ்மாசுர மோஹினி** (தமிழ்)

இத்துடன்

இந்தியன் சார்லி நடித்த "மிஸ்டர் டைட் & மிஸ்டர் லூஸ்" என்னும் விடா நகைப்பை கொடுக்கும் காமிக் படகாட்சியும் காண்பிக்கப்படும்.

மதருஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் தயாரிக்கும் பேபி சரோஜ், கமலகுமாரி நடித்த தெலுங்கு "பாலயோகினி" எதிர்பாருங்கள்.

டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:—

**மஹாலக்ஷ்மி ஸ்டுடியோஸ் லிமிடெட்,**
110, ராயபேட்டை ஹைரோட், சென்னை.

தந்தி "WINFAIR." PHONE 8361.




**சுவை மிகுந்த உண்டிகள்—பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—
உல்லாசமான இடம்—நல்ல காற்றோட்டம்
முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் ஸிடி.**



# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான பானீக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதம்" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



ஏன் நீங்களும் இன்றிருந்தே இதைக் கையாண்டு இதன் அபாரமான பலனை அடையக்கூடாது?

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# கேஸரியின் பற்பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை பளிங்குபோல் வெண்மைப் படுத்தி, அழகு செய்வது மன்னியில் பற்களுக்கு வசீகரத்தையும், ப்ரகாசத்தையும், மதுரத்தையும், அரிய பலத்தையும், தேகத்திற்கு சுகத்தையும் தருகிறது.

விலை டியூப் 1-க்கு அணா 8